KALAIKESARI
# கலைக் கேசரி
CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT
VOLUME : 02 ISSUE : 11 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 49 / News / 2011



சிக்கலுக்கு சென்றால்
சிக்கல் தீரும்

சீனக் குகை
கலைநயங்கள்

குரவைக் கூத்தும்
குரவையிடலும்

www.kalaikesari.com / NOVEMBER 2011

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

ISSN 2012-6824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FLYKINGFISHER.com

skytrax
a certified
5 Star Airline



# Introducing daily flights to Kochi, Trivandrum and Tiruchirapalli.

| Departure | | Arrival | |
|---|---|---|---|
| Kochi | 23:45 | Colombo | 01:15 (+1day) |
| Colombo | 02:45 | Kochi | 04:15 |
| Tiruchirapalli | 04:00 | Colombo | 05:15 |
| Colombo | 02:00 | Tiruchirapalli | 03:15 |
| Trivandrum | 00:30 | Colombo | 02:00 (+1day) |
| Colombo | 06:00 | Trivandrum | 07:30 |

Kingfisher Airlines is pleased to announce three daily and direct flights from Colombo starting 1st Oct, 2011. These are in addition to our regular flights to Chennai. Rest assured, whichever city you choose to fly to, your inflight experience will be truly a cherished one. What's more, King Club members earn double King Miles on bookings done on or before 30th Dec, 2011.

KINGFISHER
AIRLINES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்படம் :

தென்னாபிரிக்காவில் கேப்டவுண்
கோட்டை வாயிலில் உள்ள மாலுமியின் சிலை

## உள்ளடக்கம்


**11** யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி

**28** 'பாகவதமேளா'


**32** இயற்கை மூலிகையும் ஆரோக்கிய வாழ்வும்

**40** தமிழ் சாசனம் எழுதிய அரும்பொருட்கள்

**62** ஹன்டி பேரின்பநாயகம்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்



## வரலாற்றுப் பெருமைகளைப் போற்றுவோம்

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்.

கலைக்கேசரியின் 23வது இதழ் மூலமாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைக்கேசரியின் அனுசரணையுடன் வெகு சிறப்பாக நடத்தி முடித்த 'யாழ்ப்பாண வாழ்வியல்' பொருட்காட்சி பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கண்டுகளிக்கும் ஒன்றாக விளங்கியதுடன், நம் முன்னோரின் பண்டைய வாழ்வியல் கோலங்களையும், பண்பாட்டுச் சிறப்புகளையும் அவர்கள் கணிசமாக அறிந்து கொள்ள உதவியது என்பதில் நாம் மகிழ்வடைகிறோம்.

நாம் ஏற்கனவே இப்பக்கத்தில் அடிக்கடி குறிப்பிட்டு வந்தது போல், ஓர் இனத்தின், ஒரு நாட்டின் பண்டைய வரலாற்றுப் பெருமைகளை இளம் சந்ததியினர் அறிந்துகொள்வதன் மூலமே அச்சிறப்புகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல உதவுவதாக இருக்கும். கலை, இலக்கிய, பண்பாட்டு, மரபுச் செல்வங்களை நமது முன்னோர் காப்பாற்றியதைப் போல், நமது இளைய தலைமுறையினரும் காப்பாற்றிப் பேணுவது காலத்தின் கட்டாயமாகவும் இருக்கின்றது என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

இவ்விடத்தில், மற்றுமொரு முக்கிய தகவலையும் குறிப்பிடுதல் பொருத்தம். இனிவரும் காலத்தில் 'சூரியன் மறையாத சாம்ராஜ்யம்' என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட பிரிட்டனுக்கு வர விரும்புபவர்கள் பிரிட்டனின் வரலாற்றைப் படித்திருக்க வேண்டும் என்று கூறியிருப்பதையிட்டு நாம் சிந்திக்க வேண்டும். தமது தேசத்தின் வரலாற்றில் அவர்கள் எத்துணை தூரம் பெருமை கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தானே இது புலப்படுத்துகிறது ?

மேலும் அறிஞர்களின் ஆழமான ஆய்வுக் கட்டுரைகளுடன் நவம்பர் கலைக்கேசரி மலர்ந்திருக்கிறது. வாசியுங்கள், பயன் பெறுங்கள்.

மீண்டும் சந்திப்போம்
நன்றி
வணக்கம்

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5234338
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
editor@kalaikesari.com

**SUB EDITOR**
Bastiampillai Johnsan
editor@kalaikesari.com

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. C. Pathmanathan
Prof. S. Sivalingaraja
Prof. P. Pushparatnam
Prof. S. Jeyarasa
Dr. Viviyan Sathyaseelan
K. Thangeswary
Subashini Pathmanathan
Pathma Somakanthan
Thakshayiny Prabagar

**PHOTOS**
S. Surendiran
Dushiyanthini K.

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
A. Praveen
marketing@virakesari.lk

**CIRCULATION**
K. Dilip Kumar

**SUBSCRIPTIONS**
Arjun Jeger
arjun@expressnewspapers.net

**PRODUCTION**
L. A. D. Joseph

ISSN 2012 - 6824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பண்பாடு:
# மறந்தவையும் மறைந்தவையும்



**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கள்ளு, சமூகத்தைச் சீரழிப்பதனால் உண்டாகும் தீமைகளைப் பல பா வடிவங்களிலே பாடிய அரைவாய் மொழிப் பாடற் புலவர்கள் கள்ளைக் கடவுளாகக் கற்பனை செய்து பஞ்சபுராணமும் பாடியுள்ளனர். அல்வாயைச் சேர்ந்த ச.சி.பரஞ்சோதி என்பவர் தமது நினைவிலுள்ள இரண்டு பாடல்களை என்னிடம் கூறினார். அப்பாடல்கள் பின்வருமாறு :

*''தேடுதற்கும் வகையறியேன் - உன்*
*திருக்கோயில் தவறணையைத் தேடிக்கொண்டு*
*ஓடிவரும் பக்தருக்குக் குறைவேயில்லை*
*உன்னுடைய கிருபையினைச் சொல்லிச் சொல்லிப்*
*பாடுதற்கும் வகையறியேன் பாளைவேந்தா*
*பாவிகளை மகிழ்விக்கும் பான தேவா*
*நீடுலகில் எம்போன்ற ஏழைகட்கு*
*நீயின்றி யாருதவி சொல்லுமையா''*

இப்பாடலைத் தேவாரம் என்று கூறியவர் அடுத்துப் புராணத்தைக் கூறினார்.

*''சண்டையில் பிறப்பாய் போற்றி*
*சல்லியைப் பறிப்பாய் போற்றி*
*பண்டைய முதல்வா போற்றி*
*பாளையிற் பிறப்பாய் போற்றி*
*மண்டையை உடைப்பாய் போற்றி*
*மாதரைக் கெடுப்பாய் போற்றி*
*கண்டவர் சிரட்டை ஏந்தும்*
*கடவுளே போற்றி போற்றி''*

நல்ல கவித்துவப் பரிச்சியமுள்ள ஒருவராலேதான் இத்தகைய பாடல்களை இயற்ற முடியும். மதுவின் தீமையைக் கண்டித்துப் பாடிய அரைவாய் மொழிப் பாடல்கள் பல இன்றும் வாய்மொழியாக வழங்கி வருகின்றன. குறிப்பாக சாராயம், பிறண்டி, விஸ்கி முதலான மேனாட்டுக் குடி வகைகளைப் பாவிப்பதை நையாண்டி செய்து வன்மையாகக் கண்டிக்கும் அரைவாய் மொழிப்பாடல்கள் பல இங்கு தோன்றியுள்ளன. மயிலிட்டி ஞானாம்பிகை என்னும் பெண்மணி மேலைத்தேய மதுபான வேடிக்கைக்கும்மி என்ற அரைவாய்மொழி நூல் ஒன்றை எழுதியுள்ளமை இவ்விடத்திலே குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணச் சமூகப் பண்பாட்டு மாற்றத்தினை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் வகையிலான அரைவாய் மொழிப் பாடல்கள் பல தோற்றம் பெற்றுள்ளமையைக் காண முடிகின்றது. உணவு, உடை, நடைபாவனை முதலியவற்றை நையாண்டி செய்யும் பல அரைவாய் மொழிப் பாடல்களை இன்றும் கேட்கமுடியும். கோப்பி, தேநீர், கொக்கோ, கோதுமை மா முதலானவற்றைப் பயன்படுத்தி நம்மவர் தம்மை விதேசியப் பண்பாட்டுடன் இணைத்துக் கொள்வதையும் நமது பாரம்பரிய உணவு வகைகளைக் கைவிடுவதையும் கண்டித்துப் பல பாடல்கள் தோன்றியுள்ளன. உதாரணத்திற்கு மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மியில் வரும் பின்வரும் பாடலைச் சுட்டிக் காட்டலாம்.

*''தினையும் குரக்கன் வரகிரு சாமை*
*சிறுகிழங் கும்மரவள்ளியு மல்லாற்*
*பனையிற் பனங்கா யொடியல் பனாட்டும்*
*பதநீரு மேயுண்டார் பாருமடி''*

மண்டைதீவு பிரமஸ்ரீ.சி.அகிலேசுவரசர்மா ஆக்கிய தற்கால நாகரீக வேடிக்கைப்பாக்கள் (மூன்றாம் பாகம்) இரண்டாம் பதிப்பு 1933 (இந்த நூலை இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் மா. வேதநாதன் அவர்கள் எனக்கு உபகரித்தார்கள்.) பன்னிரண்டு பக்கங்களைக் கொண்ட இந்த அரைவாய் மொழிப்பாடலில் இடம்பெறும் பாடல்களிற் சிலவற்றை இன்றும் முதியவர்கள் வாய் மொழியாகக் கூறுகின்றனர்.

''அற்புதமற்புத மற்புதமாகிய றப்பர் தோட்டம்'' என்ற மெட்டில் எழுதப்பட்டுள்ள பின்வரும் பாடல்களை நூல் கிடைப்பதற்கு முன்னரே வாய் மொழியாகக் கேட்டிருக்கிறேன். ( சொன்னவர் திரு. பஞ்சாட்சரம்)

*''பிள்ளைப் பெற்ற பெண்களுக்கும்*
*பிரண்டி வேணும் - இப்போ*
*பிட்டு அள்ளித் தின்பதற்கும்*
*கரண்டி வேணும்*
*முள்ளுக் கொண்டு இறைச்சிகள் குத்தித்*
*தின்ன வேணும்*
*முழுவதும் வெள்ளைக்காரர் போல*
*மின்ன வேணும்.*

*தயிர் கடைந்து பழஞ்சோறுண்டார்*
*அந்தக் காலம் - கோப்பித்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தண்ணீர் பருகித் தியங்குகின்றார்*
*இந்தக் காலம்*
*வயிரத்தூண்போல் வாழ்ந்திருந்தார்*
*அந்தக் காலம் - நொய்த்த*
*வாழைகள் போல் தோன்றுகின்றார்*
*இந்தக்காலம்.*

*நாட்டிற் கள்ளை வேண்டா மென்று*
*தள்ளுகின்றார் - இப்போ*
*நாகரிக உவிஸ்கி குடித்துத்*
*துள்ளுகின்றார்.*
*வீட்டிற் காசை அன்னியர் கையிற்*
*கொட்டுகின்றார்*
*விறண்டிப் பெட்டிக்காகத் தீர்வை*
*கட்டுகிறார். ''*

கோப்பி, தேநீர் முதலியவற்றை நையாண்டி செய்தது போலவே கோதுமை மாவைப் பற்றியும் பல பாடல்கள் வழங்கி வருகின்றன. சங்கீத பூசணம் திரு.கணபதிப்பிள்ளை அவர்கள் பொன்னாலைக் கிருஷ்ணன் பாடிய கீழ்வரும் பாடலைப் பாடிக் காட்டினார்.

*''வந்தம் மாவும் வழுவி - எங்க*
*சொந்தம்மாவும் நழுவி*
*மந்த மாகத் தழுவி - கோ*
*விந்தமாகப் புளுகி - கோ*
*தம்ப மாவும் வந்திருக்கிறா - அவவும்*
*நிந்தமல்ல சொந்தம்மாவைப் பார்.''*

கோதுமை மா பாவனைக்கு வந்த காலத்திலே யாழ்ப்பாணத்தவர்கள் அதனை வரவேற்கவில்லை என்பதைப் பல செவி வழிக்கதைகளும் நிறுவுகின்றன. பாரம்பரிய உணவுகளை முதன்மைப்படுத்துவதனையே அரை வாய்மொழிப் பாடலாசிரியர்கள் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர்.


யாழ்ப்பாணத்தில் எழுந்த அரைவாய் மொழிப் பாடல்களைத் தொகுத்து நோக்கும் பொழுது நவீனத்துவத்தை எதிர்த்தமையும் நையாண்டி செய்தமையுமே மேலோங்கிக் காணப்படுகின்றன.

கலிகால வேடிக்கை, கலிகால அலங்கோலம், கலிகாலக் கும்மி, கலிகாலக் காட்சிகள், கலியுகக் கும்மி முதலான பெயர்களிலே சிறு சிறு நூல்கள் பல தோன்றியுள்ளன. கலிகாலம் பற்றிய கருத்து நிலை நமது மரபிலே ஆழமாக வேரூன்றியமையையே அப்பாட்டுப் புத்தகங்களின் தலைப்புக்கள் காட்டி நிற்கின்றன. உதாரணமாக:

*''கலியுகக் காலம் கொடுமை வருமென்று*
*கையிற் கனிபோலச் சொன்னார் முனிவர்கள்*
*பலவிதத் தாலுமதிக பழுது*
*வருகுது பாரெடி ஞானப் பெண்ணே''*

இக்கும்மிப்பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

பெண்களின் நடையுடை பாவனை பற்றி நையாண்டி செய்யும் அரைவாய் மொழிப்பாடல்கள் பல உள. வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிக்குச் சில பாடல்களைச் சுட்டிக் காட்டலாம்.

''காலக் கொடுமையை நாளுக்கு நாளாக'' என்ற மெட்டு.

*''கோலக் குயில் மொழி சேலைப் பழிவிழி*
*வாலைப் பெண்க ளலங்காரம் - இந்தக்*
*காலத்திலே மஸ்லின்சேலை யுடுத்திவர்*
*காட்சி கொடுத்தல் சிங்காரம்*
*பட்டினங் காப்புக்கல் லட்டியல் தோட்டுக்குங்*
*கெட்டகாலம் வந்துபோச்சே - இப்போ*
*கெட்டிக் கொலிசொடு கொத்தமல்லி காப்புக்*
*கஷ்டமான காலமாச்சே.*

நொண்டிச் சிந்து மெட்டு.

*தாவணிபா வாடையெறிந்தார் - இப்போ*
*சல்லடையாம் சில்க்சைஸில் நல்லுடை செய்வார்*
*பூமணவார் 'பௌடர்' மணப்பார்*
*புடவைகட்டும் வேடிக்கையைப் புகழுவேன் கேளும்''*

(அகிலேச சர்மா)

இவ்வாறு பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

மேலைப்புல நாகரிகத்தின் தாக்கத்தினைக் கண்டிப்பதற்கு வாய்ப்பாக உடை நடை பாவனைகளைப் பெரிதுபடுத்தி அரைவாய் மொழிப் புலவர்கள் பாடியுள்ளனர். பெண்களின் உடைகளை மாத்திரமன்றி ஆண்களின் உடை நடை பாவனைகளையும் நையாண்டி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மயிலிட்டி ஞானாம்பிகையின் பாடல்களிலொன்று பின்வருமாறு :

*''தாங்களை நாங்க ளறியவில்லை யென்றும்*
*சட்டைக்குந் தொப்பிக்கும் நாங்கள் பயமென்றும்*
*இங்கிலீசென்றா லதிலும் மதிப்பென்றும்*
*எண்ணிக் கொண்டாரிவர் பாருமடி''*

இவ்வாறே அமையும் இவரின் இன்னொரு பாடல் பின்வருமாறு :

*''மூக்குத் துவார மளவிலே மீசை*
*முறுக்க வேலாது மிலிற்றறி வீசையாம்*
*பார்க்கச் சிரிப்பு வருகுது கூழைவால்*
*பட்டநாய் போலல்லோ பாருமடி''*

ஜே.எஸ்.ஆழ்வாப்பிள்ளையால் இயற்றப்பட்ட கீழ்வரும் பாடல் இன்றும் வடமராட்சிப் பகுதியிலே வழங்கி வருகின்றது.

*''அஞ்சு வயசுடைய அகிழாளை வாம்பிளையள்*
*பிஞ்சில் பழுக்கிறார் ஐயா - அவர்*
*வந்து மதவடியில் குந்தி இருந்து கொண்டு*
*கலியாணமும் வேணுமாம்.*
*மேலுதட்டில் ரண்டுசு ஒட்டினாற்போல*
*மீசை விடுகிறார்கள் - அவர்*
*காலுக்கு மேலே கால்போட்டுக் கொண்டு*
*கதைக்கிறாராம் இங்கிலீசு''*

(தகவல் - ஆறுமுக உபாத்தியாயர்)

சமூக மாற்றம், கல்வி முதலானவற்றால் இளைஞர்களும் யுவதிகளும் கலந்து பழகுவதை ஏற்றுக் கொள்ள மறுத்தமையைப் பின்வரும் கும்மிப் பாடலினூடு கண்டு கொள்ள முடிகின்றது.

*''வாலிபரோடு குமரிகள் கூடி*
*மருவியிருந்து கடதாசி சொக்கட்டான்*
*ஆடலும் பந்து அடித்தலும் நீதியென்று*
*ஆர் சொல்லுவாரென்று பாருமடி''*

இந்தப் பாடலைக் கல்லடி வேலுப்பிள்ளை இயற்றினார் என்று கூறப்படுகின்றது. (தகவல் FXC.நடராசா)

சமூகத்தின் போக்கினை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டிய அரைவாய் மொழிப்பாடல்கள் கால வெள்ளத்தால் அள்ளுண்டு போனமை கவலை தருவதே. தலைமுறை இடைவெளியைத் துல்லியமாகக் காட்டும் அரைவாய் மொழிப் பாடல்கள் அவை தோன்றிய காலச் சமூக, பொருளாதார, அரசியற் பண்பாட்டுச் சூழல்களின் பதிவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலனித்துவத்தை எதிர்ப்பதில் செந்நெறிப் புலவர்களை விட அரைவாய் மொழிப் பாடலாசிரியர்கள் அதிக ஆர்வங்காட்டினார்கள். ஆங்கிலக் கல்வியை ஆதரித்த யாழ்ப்பாணத்தில் அக்கல்வி முறைமைக்கு எதிராக அரைவாய் மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடக்கூடிய அமிசமாகும்.

*''பிள்ளைகள் சம்பள மொன்றுபத் தாச்சுது*
*பிரசங்க மல்லாற் படிப்புக் கிடையாது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழி சேர்க்கவோ காசுதான் சேர்க்கவோ
நானறியேனடி ஞானப் பெண்ணே''

இவ்வாறான பல பாடல்கள் தோன்றியுள்ளன.

சமூக பழக்க வழக்கங்களையும் போலி வாழ்க்கையையும் நகையாடவும் விமர்சிக்கவும் தோன்றிய அரைவாய் மொழிப் பாடல்கள் சமூகத்தை நன்னெறிப்படுத்தவும் வாழ்வியலைப் பண்படுத்தவும் உதவின என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முதலாம் இரண்டாம் உலக மகாயுத்தங்களின் போது மக்கள் உணவு உற்பத்தியை அதிகரித்துச் சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று வலியுறுத்திய அரைவாய் மொழிப் பாடல்கள் பனம் பண்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தையும் அவதானிக்க முடிகின்றது. யுத்தகாலச் சூழ்நிலையால் மனம் வருந்திய மக்களின் நிலையைச் சுட்டும் கும்மிப்பாடல் ஒன்று பின்வருமாறு:

''கப்பலு மிங்கே வரத்துக் கிடையாது
காசுப் புழக்கங்கள் இல்லாத வூரிது
இப்படியான இடத்திலிருந்து நாம்
என்ன செய்வோமடி ஞானப் பெண்ணே''

(தகவல்-ம. முருகேசு)

''சுன்னாகச் சந்தையிலே
உன்னாணைச் சேதியக்கை
துடை மொத்தம் ஒரு கிழங்கு''

(தகவல் - பேராசிரியர் கா. சிவத்தம்பி)

இத்தகைய பாடல்கள் சிறு சிறு நூல்களாகவோ துண்டுப் பிரசுரங்களாகவோ அச்சடித்து வெளியிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் விடயங்களையும் அரைவாய் மொழிக் கவிஞர்கள் பெருமளவுக்குப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே இன்று நமக்குக் கிடைத்துள்ள பண்ணைப் பாலக்கும்மி, உத்தியோகர்லக்ஷணக்கும்மி ஆகிய இரண்டும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. உத்தியோகர்லக்ஷணக்கும்மி போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சி முறைகளைத் தெளிவாகச் சுட்டுவதோடு பிரபல கோட்டு வழக்குகளையும் அக்கால 'பெரிய மனுஷர்'களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் சுட்டிக் காட்டுகிறது. உதாரணமாக:

''பட்டமும் பெற்று ஒரு பாரியையுங் கொண்டு
பரிசுடன் முத்துக் கிட்டினரும் வந்தார்
இட்டமாய் யாவரும்போய் மரியாதையோ (டு)
இன்பு கொண்டாடினார் ஞானப்பெண்ணே''

பரிஸ்டர் பட்டம் பெற இங்கிலாந்துக்குச் சென்ற முத்துக் கிருஷ்ணர் அங்கே திருமணம் செய்து வெள்ளைக்கார மனைவியுடன் இங்கு வந்தமையை நையாண்டியாக இந்தப் பாடல் சுட்டுகிறது. பிரித்தானியராட்சிக் காலத்திலே சீமைக்குப் படிக்கச் சென்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் பலர் ஆங்கிலப் பெண்மணிகளைத் திருமணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபராகப் பணியாற்றிய 'டைக்' துரை பற்றி இக்கும்மிப்பாடல் பின்வருமாறு சுட்டுகின்றது.

''பெற்ற பிதாவிடம் பிள்ளைகள் போய்த்தம்
பிரியங்கள் சொல்லிப் பெறுவது போல்
உற்ற யாழ்ப்பாணச் சனத்துக் கெல்லாம் - நல்ல
உபகாரி தானவர் ஞானப்பெண்ணே''

அக்காலத்து ஆட்சியாளர்கள் பலரைக் கண்டித்துப் பாடிய பாடல்களினூடே இத்தகைய பாராட்டுப் பாடல்களும் இல்லாமல் இல்லை.

மண்டைத்தீவு அகிலேஸ்வரசர்மாவின் 'பண்ணப்பாலக் கும்மி'யும் பல அரசியற் சம்பவங்களைக் கோவைப்படுத்திக் கூறுகின்றது. 1986 ஆம் ஆண்டு இ.வே.பாக்கியநாதனால் பதிப்பிக்கப்பட்ட இக்கும்மிப்பாடலில் உள்ள பாடல்கள் வாய்மொழியாக வழங்கி வந்தமைப்பற்றி அறிய முடியவில்லை. இதனாலே இக்கும்மிப்பாடலை அரைவாய் மொழிப்பாடல் மரபிலே சேர்த்துக் கொள்ளலாமா என்பதும் ஆய்வுக்குரியது.

யாழ்ப்பாணத்திலே அரைவாய் மொழிப்பாடல்கள் பயின்று வருவதற்குத் தென் இந்தியப் பாட்டுப்புத்தகங்கள் இங்கு விற்பனைக்கு செய்யப்பட்டமையும் ஒரு காரணமாகலாம். இந்த இடத்திலே வேங்கடாசலபதி குறிப் பிடும் கருத்தொன்றினைச் சுட்டிக் காட்டுவது நன்று. தமிழ கத்தில் அச்சிடப்பட்ட குயிலி நூல்கள் (அரைவாய் மொழிப் பாடல் நூல்கள்) ஈழத்தில் பரவி இருப்பது உறுதி. ஆனால் அங்கேயே குயிலி இலக்கியம் உற்பத்தியாகி உள்ளதா? என்று அறிய இயலவில்லை.

ஈழத்திலே குயிலி இலக்கியம் என அழைக்கப்படும் அரைவாய் மொழிப்பாடல்கள் நிறையவே தோன்றியுள்ளன என்று உறுதியாகக் கூறலாம். பிரபல புத்தகக் கடைகளிலன்றி, சந்தை, கோயில் விழாக்களிலே நூல்களைப் பரப்பி விற்பனை செய்தவர்களூடேதான் அரைவாய்மொழிப்பாடல் நூல்கள் பொதுமக்களைச் சென்றடைந்தன. இன்றும் அரைவாய் மொழிப்பாடல்கள் அடிநிலை மக்கள் மத்தியிலே வாய்மொழியாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைக்கேசரியின் அனுசரணையில் யாழ். பல்கலைக்கழகம் நடத்திய யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி

கலைக்கேசரி அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் செப்டம்பர் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடத்திய யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி சமீபத்தைய கால வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறத்தக்க ஒரு நிகழ்வாகும்.

மறைந்தும் மறந்தும் போய் கொண்டிருக்கும் தமிழர் தம் புராதன சின்னங்களையும், வரலாறு, பாரம்பரியங்களையும் இளைய சந்ததியினருக்கு எடுத்துக் காட்ட வேண்டிய தேவை நமக்குள்ளது. ஓர் இனத்தின் புராதன சின்னங்களும் பாரம்பரியம் மற்றும் பண்பாடுகளும் அவ்வினத்தின் பெருமை பாடத்தக்க சொத்தாகும். அவற்றினை இளைய சமுதாயத்தினர் அறியும் போது அவர்கள் மேற்கோண்டு செல்லும் பாதையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வழி கோலுகின்றது. இவ்வரிய நோக்கத்தின் ஓர் அம்சமாக 'யாழ்ப்பாண வாழ்வியல்' பொருட்காட்சி அமைந்தது. அதனை வடிவமைத்து ஒழுங்குபடுத்தி காட்சிப்படுத்தும் பொறுப்பை யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை குறிப்பாக அதன் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் மேற்கொண்டிருந்தார். புராதன பொருட்களைக் கொடுத்து உதவுவதில் புராதன அகழ்வாராய்ச்சித் திணைக்களம், அருங்காட்சியகம் மற்றும் கோவில்களோடு பொது மக்களும் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். பலர் தமது பழைமைப் பொருட்களை பல்கலைக்கழகத்திற்கே நன்கொடையாக அளித்துள்ளனர்.

பல்வேறு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்தின் தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் மையங்கள் போன்றன முதன்மைப்படுத்தப்பட்டு வருவதைக்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காணலாம். நல்லூர் இராசதானி, யாழ்ப்பாணக்கோட்டை, சங்கிலியன் தோப்பு, யமுனை ஏரி, நெடுந்தீவு கோட்டை, நல்லூர் கந்தசுவாமி கோவில் போன்றவை யாழ்ப்பாணப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டும் நினைவுச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. தொல்லியல் மையங்களைப் பொறுத்தவரை ஆனைக்கோட்டை, கந்தரோடை, காரைநகர், வல்லிபுரம், பூநகரி, சாட்டி முதலியன குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

இவற்றைச் சித்திரிக்கும் வண்ணப்படங்கள் இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ ஆலயங்கள், புராதன கல்வெட்டுகள், நாணயங்கள், சிலைகள், சிற்பங்கள், ஓவியங்கள், ஆடை அணிகலன்கள், பாவனையில் இருந்து மறைந்து போகும் வீட்டுப் பாவனைப் பொருட்கள், பனம் பொருட்கள், மருந்து மூலிகைகள், யாழ்ப்பாணப் பாரம்பரிய சடங்கு முறைகள், போக்குவரத்து சாதனங்கள் எனப் பல்வேறு அம்சங்களும் பொருட்களாகவும் புகைப் படங்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தமிழக பேராசிரியர்களும் அதில் கலந்து கொண்டார்கள். 4 நாட்களுக்கு ஒழுங்குப்படுத்தப்பட்டு, மேலும் ஒரு நாள் நீடிக்கப்பட்ட இப்பொருட்காட்சியை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்கள பணிப்பாளர்நாயகம் செனரத் திசாநாயக்க , யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ்ப்பாண மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா, தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் கலைக்கேசரியை வெளியிடும் எஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிர்வன முகாமையாளர் எம். கந்தசாமி பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பேராசிரியர் என். ஞானகுமாரன், பேராசிரியர் கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி பற்றி பார்வையாளர்கள் கருத்து

யாழ்ப்பாண வாழ்வியல் தொல்பொருள் அருங்காட்சியகத்தின் மூலம் தமிழ் - திராவிட பாரம்பரியத்தை அற்புதமாக படம் பிடித்துக்காட்டி அனைவரையும் வியக்கச் செய்த ஏற்பாட்டாளர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**வெ.மகாலிங்கம், இந்திய துணை தூதர், யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சி தமிழர்களின் வாழ்வியலை சிறப்பாக எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. எமது இன்றைய தலைமுறையினர் இதனைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மிகவும் உதவியாக உள்ளது. அனைத்து மாவட்ட மக்களும் இதனைக் கண்டு களிக்கக் கூடிய விதத்தில் சில நாட்கள் கூடுதலாக பொருட்காட்சியை நடத்தினால் நன்றாக இருக்கும்.

**கா.வனிதா, ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்**

யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியல் எமது சமூகத்தின் பாரம்பரிய கலாசாரங்களைச் சிறப்பாகவே வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டத்தக்கது. நெறிப்படுத்தல், வழிகாட்டல் என்பவற்றுடன் மாணவர்களின் உழைப்பு மிகச் சிறப்பானது. இளம் சமூகம் இதனை பார்வையிடல் அவசியமானது.

**வ.செல்வராஜா, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை**

யாழ்ப்பாணத்தின் தமிழர் வாழ்வியல் தொடர்பான தேடலுக்கு பாராட்டுக்கள்! தமிழர்களுடைய பெறுமதிமிக்க பல ஆவணங்கள், கலை, கலாசார அம்சங்கள் பலரால் பேணப்படுவது குறைவாக இருக்கின்றது. உங்களைப்போல் தமிழ் பற்றுடைய அனைவரும் தமிழர் மரபைப் பேணவும் அதனைப் பாதுகாக்கவும் உழைக்க வேண்டும். யாழ்ப்பாண நூதனசாலை இருக்கும் நிலை கவலைக்குரியது. அதனை சிறப்பாகப் பேண வேண்டும் என்பது எனது அவா ஆகும்.

**எஸ்.குமணநாத், தேசியகல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

Actually this exhibition is very useful for get to know about the lifestyle of Jaffna people as well as the history of Jaffna. Images used for this exhibition is very clear and descriptive. Weldon!

**GODWIN, HSBC**

பொருட்காட்சியானது ஊடகவியல் மாணவர்களுக்கு பெரும் நன்மை வாய்ந்ததாக அமைந்தது. இதேபோல மேலும் பல புது விடயங்களை யாழ். மண்ணில் நடத்த வேண்டும்.

**சசிகலா, இலங்கை இதழியல் கல்லூரி, கொழும்பு - 05**

யாழ்ப்பாண மக்களின் பரம்பரை பரம்பரையான வாழ்வியலையும் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் பொருட்காட்சியினூடாக வெளிப்படுத்தி இளந்தலைமுறையினர் அறியாத பல விடயங்களை வெளிக்கொணர்ந்த இப்பெரும் முயற்சி போற்றுதலுக்கு உரியது.


**ச.வீரமங்கை**

யாழ்ப்பாண வாழ்வியல் பொருட்காட்சியானது யாழ்ப்பாண வரலாறு, பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி!

A.M.M.Thahir, **வாளைச்சேனை**

இப்பொருட்காட்சி எமக்கும் மாணவர்களுக்கும் பயன் உடையதாக அமைந்தது.


**மா.வசந்தரூபன்,**
**ஆசிரியர், கனகபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கலுக்கு சென்றால் சிக்கல் தீரும் சிங்காரவேலர் தலச்சிறப்பு

முப்பெரும் மதங்களுக்கும் பெருமை சேர்க்கும் நகரமாக நாகபட்டினம் திகழ்கின்றது. வடக்கே நாகூர் தர்கா, தெற்கே வேளாங்கன்னி மாதா ஆலயம், மேற்கே சிக்கல் சிங்காரவேலர் கோயில் என்று மூன்று மதங்களின் முக்கிய தலங்களை எல்லையாக கொண்டிருக்கும் நகரம் இது. நாகை நகரில் இருந்து திருச்சி நெடுஞ்சாலையில் ஐந்து கி.மி. தொலைவில் சிக்கல் சிங்காரவேலர் தலம் உள்ளது.

திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடியருளிய தேவாரப் பதிகம் தலச் சிறப்புக்கு சான்று பகர்கின்றது.

## தலவரலாறு

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், பெரும் வரட்சி காரணமாக உணவு கிடைக்காமல் காமதேனு அலைந்து திரிந்தது. ஓர் இடத்தில் நாய் ஒன்று இறந்து கிடப்பதைக் கண்ட காமதேனு, பசி ருசி அறியாது என்பதற்கேற்ப இறந்த நாயின் ஊனை உண்டது. இதை கண்ட சிவபெருமான் பெரும் கோபம் அடைந்து, காமதேனுவின் எதிரே தோன்றி, ''நீ தேவலோக பசு என்பதையும் மறந்து, குணம் கெட்டு, பசியில் புலி மாமிசத்தை உண்டதைப் போன்று நீயும் புலியின் குணம் கொண்டலைவாய். பசுவின் புனித முகத்தை வைத்துக் கொண்டு புலியை போல மாமிசம் சாப்பிட்டதால் இனி உன் முகம் புலியாக மாறக் கடவது.'' என்று சபித்தார். பசுவின் உடலும் புலியின் முகமும் அடைந்து விசித்திர விலங்காக இருந்ததால் பூலோகத்தில் மக்கள் யாவரும் காமதேனுவைக் கண்டு பயந்து ஓடினார்கள். இனியும் சாபத்தை பொறுக்க முடியாத காமதேனு, சாபம் தந்த சிவபெருமானிடம் மன்னிப்பு கோரியது.


மனமிரங்கிய சிவன், ''பூலோகத்தில் மல்லிகை வனத்திலுள்ள குளத்தில் நீராடி, அங்குள்ள இறைவனை பூஜித்தால் சாபம் விலகும்'' என்றார்.

சிவனின் அறிவுரைப்படி காமதேனு மல்லிகைவனம் வந்து குளத்தில் நீராடிய போது, அதன் மடியில் பால் சுரந்து பெருகி, குளம் முழுவதும் பால் பொங்கியது. இதனால் இந்தக் குளம் பாற்குளம் ஆனது. தற்போது ஆலயத்தின் மேற்குப் பக்கம் இந்த பாற்குளம் காணப்படுகின்றது. பாற்குளத்திலிருந்து வெண்ணெய் திரண்டது. மல்லிகை வனத்திலுள்ள குளத்தில் நீராடிய பின், காமதேனு தவம் இருந்து தன் அழகிய முகத்தை திரும்பப் பெற்றது.

இதேவேளை, சிவனை நினைத்து தவம் செய்ய ஏற்ற இடம் தேடி அலைந்த வசிஷ்ட முனிவர், மல்லிகை வனத்தை வந்தடைந்தார். அருகில் பாற்குளம் ஒன்றையும் அதில் வெண்ணெய் திரண்டிருப்பதையும் கண்டு, இந்த இடம் தவம் செய்ய ஏற்றது என்பதை உணர்ந்து, அந்த இடத்தில் தவம் செய்யத் தொடங்கினார். தவம் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னதாக பாற்குளத்தில் காணப்பட்ட வெண்ணையில் லிங்கம் செய்து வழிபட்டார் வசிஷ்டர்.

வசிஷ்ட முனிவரின் தவத்தை ஏற்ற சிவபெருமான், காட்சி தந்து, 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' எனக் கேட்டார். 'அய்யனே!! நான் செய்து இருக்கும் இந்த வெண்ணை லிங்கத்தில் தாங்கள் எழுந்தருள வேண்டும்.' என்று கேட்டுக்கொண்டார் முனிவர்.

முனிவரின் விருப்பப்படி ஈசனும் வெண்ணை லிங்கத்தில் தோன்றி அருளினார். லிங்கத்தை, வேறு ஒரு இடத்திற்கு மாற்றினால் நன்றாக இருக்குமே என்று கருதிய வசிஷ்ட முனிவர், வெண்ணை லிங்கத்தை தூக்கி எடுக்க முயற்சித்தார். ஆனால் வெண்ணையில் செய்யப்பட்ட சிவலிங்கம் பாறையை போன்று தரையில் கெட்டியாக பிடித்து கொண்டு அசைய மறுத்தது. ''இது என்ன சிக்கலாக போயிற்றே'' என்று கூறி, சிவனின் விருப்பம் எதுவோ அப்படியே இருக்கட்டும் என்று முடிவு செய்து, வசிஷ்டரால் அந்த இடத்திற்கு வைக்கப்பட்ட பெயர்தான் சிக்கல். வெண்ணெய் லிங்கத் திருமேனியான இறைவன் வெண்ணைபிரான் என்றும், நவநீதநாதர் என்றும் அழைக்கப்படுகிறார்.



மல்லிகைகள் நிறைந்த இடமாக இந்த இடம் காணப்பட்டதால் இவ்விடம் மல்லிகை வனம் என்றும் அழைக்கப்பட்டதாக புராண வரலாறுகள் கூறுகின்றன. ஆலயத்தின் தல விருட்சமும் மல்லிகை என்பது குறிப்பிடத்தக்கது.

### சித்தம் தெளியவைக்கும் சிங்காரவேலர்

சோழ நாட்டில் கலைத்திறன் படைத்த சிறுவன் ஒருவன் தீவிர முருகன் பக்தனாக திகழ்ந்தான். ஒருநாள் அவன் கனவில் முருகப் பெருமான் காட்சி தந்து, ''உன் திறமையை வைத்து என்னை சிலையாக வடிவமைத்து வணங்கு. இதனால் உனக்கும் உன் வம்சத்திற்கும் பூலோகம் இருக்கும்வரை புகழ் இருக்கும்.'' என்று கூறி மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கனவை மறுநாளே நிறைவேற்ற முடிவு செய்த சிறுவன், அழகான முருகன் சிலையை செய்யத் தொடங்கினான். முருகனின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே சிலையை வடிவமைத்தான். அப்போது முருகனின் சிலையில் இருந்து வியர்வை வடிய ஆரம்பித்தது. இதை கண்ட சிற்பி ஊர் மக்களிடம் தகவல் சொன்னான். ஊர் மக்கள் முருகனின் சிலையில் வியர்வை வடிவதை கண்டு வியந்தார்கள். இந்தத் தகவல் அவ்வூர் அரசர் முத்தரசன் என்பவரின் காதில் விழுந்தது. இக்காலப்பகுதியில் சோழநாடு விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. இப்பேரரசுக்கு கப்பம் செலுத்தும் குறுநில மன்னனாக முத்தரசன் ஆட்சி பரிபாலனம் செய்து வந்தான்.

அரசர் நேரில் வந்து முருகனின் சிலையை கண்டார். அரசர் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தார். முருகனின் முகத்தில் இருந்து வியர்வை வடிந்து கொண்டே இருந்தது. ஏன் இது போல் நடக்கிறது? ஏதாவது தெய்வ குற்றமா? என்று அறிய அருள்வாக்கு கேட்கப்பட்டது. ''சூரபத்மனை கொல்ல முருகப் பெருமான், அன்னை பராசக்தியிடம் வீரவேல் வாங்கினார். அன்னையின் சக்தி முழுமையாக அவ்வேலில் இருந்ததால் வேலின் உஷ்ணமும் உக்கிரமும் தாங்காமல் முருகனின் உடலில் இருந்து வியர்வை வடிந்தது. அந்த சம்பவத்தை மனதில் நினைத்துக்கொண்டே சிற்பி சிலையை வடிவமைத்ததால் முருகப்பெருமான் சிலையின் வடிவில் இங்கே வந்துவிட்டார். அதனால்தான் முருகனின் சிலையிருந்து வியர்வை வடிகிறது. பயம் வேண்டாம்.'' என்று அருள்வாக்கு சொல்லப்பட்டது.

இதை கேட்ட அரசர், 'சிங்காரவேலனே இந்த சிலையின் உயிராக வந்துள்ளாரா? முருகனை இந்த இடத்தில் கோயில் கட்டி பிரதிஷ்டை செய்ய வேண்டும்.' என்று கூறினார்.

முருகன் சிலையைத் தத்ரூபமாபச் செதுக்கியதன் மூலம் தன் உள்ளத்தை சிறுவனாகிய சிற்பி மகிழ்வித்து விட்டதாக மன்னன் கூறி மகிழ்ந்தான். அப்போதே சிறுவனை நோக்கி,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு உதவியையும் செய்ய வேண்டும் என்று கேட்டான்.

மற்றொரு சிற்பமோ என சிற்பி ஆவலுடன் காத்திருந்தான். முத்தரசன் கூறுகின்றான் 'சிற்பியே! இத்தனை தத்ரூபமாய் முருகன் சிலையை வடிவமைத்த நீர் இனி எந்த மன்னனுக்கும் இதே போல் எந்தக் காலத்திலும் முருகன் சிலையை மட்டுமல்ல, எந்தச் சிலையையும் வடிக்கக் கூடாது. முத்தரச மன்னன் மட்டுமே முருகப் பெருமானைப் பேரழகுடனும், பொலிவுடனும் படைத்தான் என வரலாற்றில் என் பெயர் நிலைத்து நிற்க வேண்டும். ஆகவே .... என நிறுத்தினான் மன்னன். அடுத்து மன்னன் வாயிலிருந்து உதிரப் போகும் வார்த்தையை எதிர்பார்த்து சிற்பி காத்திருக்கையில், மன்னன் கண்ணசைவை விளங்கிக் கொண்ட வீரர்கள் சிற்பியை நெருங்கினார்கள். சிற்பியை இருவர் இறுகக் கட்டிப் பிடித்துக் கொள்ள மற்றும் இருவர் அவர் வலக்கைக் கட்டை விரலை வெட்டுவதற்கு ஆயத்தமானார்கள்.

''கட்டை விரல் இல்லையெனில் உளியைப் பிடிப்பது எவ்வாறு? அதற்கு பதிலாக என் உயிரை எடுத்துக் கொள்'' என்று சொல்லிப் பார்த்தார் சிற்பி.

மன்னன் மனம் இரங்கவில்லை. காவலரை நோக்கி' அஞ்சாதீர்கள் கட்டை விரலை வெட்டுங்கள்' என்று கட்டளையிட அவர்களும் சிற்பியின் கட்டை விரலை வெட்டினார்கள்.

இவ்வாறு சிறுவனால் வடிக்கப்பட்ட தெய்வீக அம்சங்கள் பொருந்திய சிற்பமே சிக்கல் தலத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிங்கார வேலர் ஆவார்.

### கோவிலின் அமைப்பு

கி. பி. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செங்கட் சோழன் கட்டிய மாடக் கோவில்களில் இத்தலமும் ஒன்றாகும். கோவிலின் ராஜகோபுரம் சுமார் 80 அடி உயரமும் 7 நிலைகளையும் உடையது. இராஜகோபுரத்திற்கு முன்னால் மண்டபம் இருக்கிறது. தென்னாட்டுக் கோயில்கள் எதிலுமே காணக் கிடைக்காத மிகப் பெரிய மண்டபம் இதுவாகும். 4000 பேர் இருக்கக் கூடிய பிரமாண்டமான அழகிய மண்டபத்தில் திருமணங்கள் செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

கோபுர வாயில் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கார்த்திகை மண்டபம் இருக்கிறது. கோவிலின் மைய பகுதியில் 12 படிகள் கொண்ட ஓர் உயரமான மேடை உண்டு. மூலவர் நவநீதநாதர் லிங்க வடிவில் அருள் புரியும் சந்நிதியும், சிக்கல் சிங்காரவேலர் சந்நிதியும் உள்ளன. கீழ்ப்படிக்குப் பக்கத்திலுள்ள சுந்தர கணபதியை தரிசித்த பிறகே படிகளில் ஏறி மேலே செல்ல வேண்டும் என்பது வழக்கம்.

மேலே சென்று மண்டபத்தை அடைந்ததும் நேராக தியாகராஜ சந்நிதி உள்ளது. இங்குள்ள மரகதலிங்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. உள்ளே வெண்ணைப் பிராண் இருக்கும் கருவறை உள்ளது. சிக்கல் சிங்காரவேலர் வள்ளி, தெய்வானை ஆகியோருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். ஐப்பசி மாத விழாவில் வியர்வை சிந்தும் வேலவர் இவர்தான்.

மேடையின் கீழ்பக்கம் இறைவி வேல் நெடுங்கண்ணியின் சந்நிதி அமைந்துள்ளது. இறைவி முருகனுக்கு வேல் கொடுப்பது போன்ற சிற்பம் சந்நிதியின் மேல்பாகத்தில் இருக்கிறது. வடமேற்கு மூலையில் ஆஞ்சனேயர் சந்நிதி அமைந்திருக்கிறது.

### திருவிழா

இத்தலத்தில் சித்திரை பிரமோற்சவம், ஐப்பசி கந்தசஷ்டி ஆகியவை மிகப் பிரபலமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப்படும் திருவிழாக்களாகும். தேவர்கள், சூரபத்மனிடமிருந்து தங்களை காக்க முருகப்பெருமானுக்கு 'திரிசதை' செய்து வேண்டிக் கொண்டனர். இதனால் முருகப் பெருமான் சூரனை அழித்து தேவர்களை காத்தார். சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சம்ஹாரம் என்னும் ஒரு பழமொழிக்கு ஏற்ப, கந்தசஷ்டி திருநாளின் முதல் நாள் முருகன் தன் தாயிடம் அதாவது இத்தல அம்மனிடமிருந்து சூரபத்மனை அழிப்பதற்காக வேல் வாங்கியதாக கூறப்படுகிறது. தன் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி வேலாக்கி, சிங்காரவேலனிடம் கொடுத்து சூரசம்ஹாரத்திற்கு வழிஅனுப்பினாள்அன்னை. இதனால் இங்குள்ள அம்மனுக்கு வேல்நெடுங்கண்ணி என்ற பெயர் ஏற்பட்டது. இந்த வேலைக் கொண்டே முருகப் பெருமான் திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் செய்தார்.

முருகப்பெருமான் தன் கோவிலில் வந்து அமர்ந்த பிறகு, வேலின் சக்தி வீரியம் தாங்காமல் சிக்கல் சிங்காரவேலருக்கு வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் உதிரும். இதை பட்டுத்துணியால் துடைத்து விட வியர்வை துளிர்த்துக் கொண்டே இருக்கும்.இந்த அற்புதம் இன்றும் நடைபெறுவதை இத்தலத்தில் நாம் காணலாம். தங்க ஆட்டுக்கடா வாகனம், தங்க மயில் வாகனம் மற்றும் வெள்ளி ரிஷப வாகனம் ஆகியவற்றில் சிங்கார வேலன் எழுந்தருளுவது சூரசம்ஹாரத் திருவிழாவின் கண்கொள்ளாக் காட்சியாகும். முருகப்பெருமானின் மேனியில் வியர்வை சிந்துவதால் இவருக்கு 'வியர்வை சிந்தும் வேலவன்' என்ற சிறப்புப்பெயரும் உண்டு.

**நேர்த்திக்கடன்:**

சிக்கல் சிங்காரவேலனை வணங்கினால் வாழ்க்கையில் இருக்கும் அத்தனை சிக்கல்களும் தீரும் என்பது பயன் அடைந்த பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. பிறவிப் பெருங்கடலில் சிக்கித் தவிப்போரை அச்சிக்கலிலிருந்து மீட்டுக் கரை சேர்க்கும் இறைவன் நவநீதேஸ்வரரும், சிங்காரவேலரும் ஆவார். அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் லிங்கத்தின் மீது வெண்ணெய் சாற்றி அர்ச்சனை செய்தால் வெண்ணெய் உருகுவதுபோல் பக்தர்களின் துன்பங்களும் மறையும் என்று நம்பப்படுகின்றது.

சிங்கார வேலனுக்கு, அம்மன் தன் சக்தியை வேலாக வழங்கிய இத்தல முருகனுக்கு 'சத்ரு சம்ஹார திரி சதை' அர்ச்சனை செய்தால் எதிரிகள் தொந்தரவு விலகி நலம் விளையும் என்பது நம்பிக்கை.

**தல சிறப்பு:**

அம்மனின் 64 சக்தி பீடங்களில் இதுவும் ஒன்று. விசுவாமித்திரர், அகத்தியர், காத்தியாயனர், நாரதர், முசுகுந்த சக்கரவர்த்தி ஆகியோர் இத்தலத்தில் வழிபாடு செய்துள்ளனர். சிவன், சக்தி, முருகன், அனுமன் என நால்வரும் இத்தலத்தில் அருள்பாலிப்பது கோயிலின் தனிச் சிறப்பாகும்.


விசுவாமித்திர முனிவர் மேனகையுடன் கூடியதால் தனது தவவலிமையை இழந்ததாகவும் பின் மீண்டும் சிக்கல் தலத்தில் கடும்தவமிருந்து இழந்த தவவலிமையை திரும்பப் பெற்றதாகவும் திருத்தல புராணத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன.

கோயிலின் ஆரம்ப காலத்தில் பல செட்டியார் குடும்பங்களே அறங்காவலர்களாய் இருந்து திருப்பணி களைச் செய்து வந்திருக்கின்றனர். இன்று தமிழ்நாடு இந்துமத அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் இக்கோயில் உள்ளது. ஆலயம் திறக்கும் நேரம், காலை 5.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையாகும்.

**பஸ்ரியாம்பிள்ளை ஜோண்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்தச் சின்னமும் அதன் தனித்துவமும்

காலங்காலமாக சமூகத்தில் பல வகையான சிற்பங்கள் வழக்கத்தில் மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து வந்துள்ளன. இச்சிற்பங்களாவன மனித நாகரீகத்தின் சின்னங்களாக, பண்பாட்டின் சிகரங்களாக, பலதரப்பட்ட வாழ்க்கை நெறிகளின் விழுமியங்களாகத் திகழ்கின்றன. இவை இயற்கை வனப்புகளை, வழிபாட்டுச் சின்னங்களை பிரதிப்பலிக்கின்றன.

மேலும் சிற்பங்களாவன எக்காலகட்டத்தில், எக்கலாசாரத்தில் உருவாக்கப்பட்டனவோ, அக் குறிப்பிடப்பட்ட கலாசாரத்தை பெரிதும் பிரதிபலிப்பனவாகவும் சரித்திரம், மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சிக்கு உதவும் உன்னத அம்சங்களாகவும் விளங்குகின்றன. சிற்பங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தின் மரபுப் பண்பாட்டு வழக்கங்கள், வாழ்க்கைக் கோலங்கள் ஆகியவற்றை எமக்கு எடுத்தியம்புகின்றன. பொதுப்படையில் சிற்பங்கள் நுட்பமான வேலைப்பாடுகள் கொண்ட, எழில் மிக்க கைவினைக் கலையம்சங்களாகும். இவை சிற்பியின் கைவினை நேர்த்தி, கற்பனை வளம் ஆகியவற்றையும் வெளிப்படுத்தி நிற்பது நியதி.

சிற்பங்கள் பல தரப்பட்ட, பொருட்களினால் உருவாக்கப்படுகின்றன. சிலவகைப் பொருட்களினால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் காலவோட்டத்தில் அதாவது இலகுவில் அழியக் கூடியனவாகவும், சில நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடியனவாகவும், இன்னும் சில வரையறுக்கப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட, காலத்தினைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன. பொதுப்படையில் சிற்பங்கள் பலவகை ஊடகப் பாகுபாட்டில் வகுக்கப்படுகின்றன. அவையாவன கல்லினால் பொழியப்பட்ட சிற்பங்கள், பல வகையான உலோகங்களினால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள், காகித இழையினால் வடிக்கப்பட்ட சிற்பங்கள், யானைத் தந்தத்தினால் செதுக்கப்பட்ட சிற்பங்கள், இவை தவிர தற்காலத்தில் மெழுகால் வடிக்கப்பட்ட சிற்பங்கள் எனப் பல வகைப்பட்ட சிற்பங்கள் இன்றைய வழக்கத்தில் உள்ளன.

பாவனைப் பண்பாட்டில் சிற்பங்கள் வழிபாட்டிற்கும் மற்றும் சில அழகுணர்ச்சி வெளிப்பாட்டிற்கும், வேறு சில குறிப்பிட்ட சில காரணங்களான லட்சுமி சுபீட்சம், லட்சுமி கடாட்சம் வேண்டியும், வாசஸ்தலங்கள், காரியாலயங்களில் வைக்கப்படுவது வழமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுமொத்தத்தில் பெறுமதி ரீதியில் தந்தச் சிற்பங்களாவன ஏனைய சிற்பங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில் அளவில் சிறியனவாகவும் பெறுமதியில் உயர்ந்தவையாகவும் விளங்குகின்றன.

யானைத் தந்தத்தில் சிறு அலங்கரிப்புப் பேழைகள், கிண்ணங்கள், தளபாட அலங்கரிப்புக்கள், காகித உறைகளை திறக்கும் சிறிய கத்திகள், தலை சீவும் சீப்புகள், கத்திப் பிடிகள், வாளின் பிடிகள், அலங்கரிப்பு கரண்டிப் பிடிகள், ஆபரணங்களான அட்டியல்கள், மாலைகள், தோடுகள், வளையல்கள், மணிக்கட்டுப் பட்டிகள் என்பன எழில்மிகு அலங்காரப் பொருட்களாகவோ சிற்பங்களாகவோ செதுக்கப்படுவது வழமையாகும்.

இந்து வழிபாட்டு உருவங்கள் யானைத் தந்தச் சிற்பங்களில் செதுக்கப்படுவதில்லை. காரணம் விலங்குகளின் அவயவங்களில் இருந்து செதுக்கப்படும் இந்து மத வழிபாட்டுச் சிற்பங்கள் இந்துமதக் கோட்பாட்டிற்கு முரணானது எனக் கருதப்படுவதேயாகும்.

**தந்தத்தில் செதுக்குதல் என்பது ஓர் உன்னதமான நுட்பமான செயல்பாடாகும். மிகுந்த கவனத்துடன் அவதானத்துடன் கையாளப்பட வேண்டிய ஓர் அரும் பெரும் பணியாகும்.**

குறிப்பாகப் பண்டைய புராதன ராஜதானிகளில் சிற்ப அலங்கரிப்பு ஏராளம் இடம்பெற்ற போதும், அவற்றை மேலும் மெருகுபடுத்த யானைச் சிற்ப நுண்கலை அம்சங்களைப் பண்டைய மக்கள் பெரிதும் பயன்படுத்தினர். தளபாட அலங்கரிப்பை மேலும் மெருகுபடுத்த குறிப்பாகக் கதவுப் பூண்கள், கட்டில்கள், தளபாடச் சட்டங்கள், இருக்கைகள் போன்றவற்றை மெருகூட்ட யானைத்தந்தச் சிற்பக்கலை அம்சங்கள் பண்டைக்காலம் முதல் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

பொதுவாக தந்தத்திற்கு வர்ணம் தீட்டப்படுவதில்லை என்பது மரபாகும். ஆயினும் ஆங்காங்கே மிகவும் உயர்தரத்திலான கலைத்துவக் கைப்பணியினை மெருகூட்ட அரிதாக வர்ணம் தீட்டுவதை நாம் அவதானிக்க முடிகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் யானைத் தந்தத்தில் ஏராளம் பெறுமதிமிக்க கைவினைப் பொருட்கள் வடிவமைக்கப்படுகின்றன.

இசைக்கருவி வாத்தியங்களிலும் யானைத் தந்த சிற்பங்கள் அழகியல் உணர்வுடன் செதுக்கப் பட்டுள்ளன. பண்டைய வீணை, புல்லாங்குழல், வயலின் போன்ற இசை வாத்தியங்கள் யானைத் தந்தத்தால் தோற்றப் பொலிவுடன் அழகுப்படுத்தப்பட்டன. தனி யானைத் தந்தத்தால் வடிவமைக்கப்பட்ட புல்லாங்குழல் கூட பண்டைய காலத்தில் வழக்கத்தில் இருந்ததாக நாம் அறிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தத்தில் செதுக்குதல் என்பது உன்னதமான நுட்பமான கலைத்துவ செயல்பாடாகும். மிகுந்த கவனத்துடன் கையாளப்பட வேண்டிய ஓர் அரும்பெரும் பணியாகும். தந்தத்தில் செதுக்க முன்னர், வைரமான தந்தமானது ஈரத்துணியினால் சுற்றப்பட வேண்டியதும், தந்தத்தைப் பதப்படுத்தும் வகையில் துணியை நனைத்து தொடர்ச்சியாக ஈரலிப்பாக வைக்கப்பட வேண்டியதும் மிகவும் முக்கியமானது ஆகும். அவ்வாறே அவை ஐதரோக்குளோரின் அமிலத்தில் ஊறவைக்கப்படுகின்றன. இந்த வகையில் கடினமான தந்தமானது தேவைக்கு அமைய சற்று வளையக் கூடிய மென்மையான ஊடகமாக மாறுகின்றது. சாயமூட்டம் அளிக்கும் போது மிகுந்த அவதானத்துடன் எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டியது இன்றியமையாததாகும். பழுப்பு நிலை அடைந்த யானைத் தந்தத்தை மீள் நிலைக்குகொண்டு வருதல் என்பது மிகவும் கடினமான விடயமாகும்.

உலகளாவிய ரீதியில் யானைத் தந்தம் அதிக பெறுமதி வாய்ந்தது. காலங்காலமாக இயற்கை அழிவுகளையும் வென்று காலத்தை வென்ற கலைப் பொக்கிசமாக காணப்படுகின்றது. இதனால் தான் 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' எனத் தமிழ் பழமொழி அதன் உன்னதத்தினை பறை சாற்றுகின்றது.

**- மதுரா மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌதாரிமுனைக் காட்டுப் பகுதியில் அழிவுற்ற நிலையில் மிகப் பெரிய இந்து ஆலயம்

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவரும், பேராசிரியருமான புஸ்பரட்ணம் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இவர் மேற்கொண்ட தொடர்ச்சியான ஆய்வுகள் மூலம் பல வரலாற்று உண்மைகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மிக முக்கியமான தொல்லியல் மையங்களான கந்தரோடை, பூநகரி, நெடுந்தீவு, கோட்டை, சாவகச்சேரி முதலான இடங்களை இவர் ஆய்வுக்கு உட்படுத்தி யாழ்ப்பாணத்தின் பழைமையான வரலாற்றுக்கு புது வெளிச்சம் கொடுத்துள்ளார். அண்மையில் இவரது தலைமையில் கந்தரோடையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் மிக முக்கியமானதும், அரியதுமான பல தொல்லியல், வரலாற்றுச் சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இத்தகைய பின்னணியிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும், கலைக்கேசரியும் இணைந்து நடத்திய 'யாழ்ப்பாண வாழ்வியல்' பொருட்காட்சி மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பூநகரிப் பிரதேசம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இலங்கையில் தொன்மையானதும், தொடர்ச்சியானதுமான தொல்லியல் சான்றாதாரங்களைக் கொண்டுள்ள இடங்களில் ஒன்றாக குடாநாட்டிற்கு வெளியே பெருநிலப்பரப்பில் உள்ள பூநகரிப் பிராந்தியம் விளங்குகிறது. கல்முனை தொட்டு வீரபாண்டியன்முனை வரையான இப்பிராந்தியத்தில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளும், ஒரு சில அகழ்வாய்வுகளும் இப் பிராந்தியத்தில் இற்றைக்கு 2300 ஆண்டுகளில் இருந்து தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து வட இந்திய, தென்னிந்திய, கிரேக்க, உரோம, அரேபிய மற்றும் சீன நாடுகளுடன் நெருங்கிய வணிக கலாசார உறவுகளைக் கொண்டிருந்தார்கள் என்பதையும் பூநகரி பிராந்தியத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் உறுதிசெய்கின்றன.

தொல்லியல் ஆய்வில் பூநகரி பிராந்தியத்தில் அதிக கவனத்தை ஈர்த்த பிரதேசமாக ஆலடி தொடக்கம் கல்முனை வரையான ஏறத்தாழ 12 கிலோமீற்றர் நீளமும், 3 கிலோமீற்றர் அகலமும் கொண்ட மூன்று பக்கமும் கடலால் சூழ்ந்த நிலப்பரப்பு குறிப்பிடத்தக்கது. இங்குதான் வரலாற்றுப் பழமை வாய்ந்த கல்முனை, மண்ணித்தலை, கௌதாரிமுனை, வெட்டுக்காடு, பரமன்கிராய், மட்டுவில் நாடு, பாலாவி முதலான கிராமங்கள் காணப்படுகின்றன. இங்கு பெரும்பாலும் சம தரையுடன் கூடிய நிலங்களை விட, மணல் மேடுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. அம்மணல் மேடுகள் கூட பருவத்துக்குப் பருவம் மாற்றமடைந்த வண்ணம் உள்ளன. அதாவது மேடாக இருந்த மணல் மேடுகள் பள்ளமாகவும், பள்ளமாக இருந்த மணல் மேடுகள் மேடுகளாகவும் மாறும் இயல்பு அங்கு உண்டு.


இப்பிரதேசத்தில் பெரும்பாலும் சைவர்கள் வாழ்கிறார்கள். ஆரம்ப காலங்களில் அங்கு போக்குவரத்து

> **1450இல் கோட்டை மன்னன் செண்பகப் பெருமாளின் படை இப்பிரதேசத்தின் ஊடாகவே யாழ்ப்பாணம் வந்ததாக 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'குயில்விடு தூதுப்பிரபந்தம்' என்ற சிங்களக் காவியம் கூறுகிறது. யாழ்ப்பாண அரசு தொடர்பாக தோன்றிய தமிழிலக்கியங்கள் பூநகரியை யாழ்ப்பாண அரசிற்குட்பட்ட வெளிநாடு என குறிப்பிடுகின்றன.**

வசதிகள் இருக்கவில்லை என்பதுடன் அங்குள்ள மக்கள் தமது பயணத்தைக் கால் நடையாகவே கடந்தார்கள். ஆனாலும் தற்போது அங்கு ஏற்பட்டு வரும் அபிவிருத்தி காரணமாக அப்பிரத்தேசம் ஒரு சிறிய நகராக மாறிவருகிறது. மேலும் இப்பிரதேசத்தின் வரலாற்றுப் பழமை காரணமாக சிறந்த சுற்றுலாத் தலமாக இப்பிரதேசத்தை மாற்றக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

மேலும் அங்கு வாழும் மக்களின் சமூக, பொருளாதார நிலையை பேராசிரியர் ஆய்வுக்கு உட்படுத்தியபோது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்துக்குப் பின்னர் அவ்விடத்தில் ஆலயங்கள் கட்டப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற முடிவுக்கு வர முடிந்தது. அங்குள்ள சமூகம் மிகவும் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படவில்லை என்பதுடன் மிகவும் பின் தங்கிய நிலையில் அச்சமூகம் இருந்தமையே அதற்கான பிரதான காரணமாகும். அங்குள்ள மக்கள் பொருளாதார ரீதியாக







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மிகவும் பின்னடைந்த நிலையில் இருப்பதோடு வெளி உலகத் தொடர்புகள் அற்ற நிலையில் அவர்கள் உள்ளார்கள்.

அப்பிரதேசத்தில் மிக அண்மையில் கட்டப்பட்ட ஒரு சில சிறிய நிரந்தரக் கட்டடங்களைத் தவிர, வேறெதும் கடந்த 100 ஆண்டுகளில் கட்டப்பட்டிருக்கவில்லை. மேலும் ''வணிகச் செல்வாக்கு உள்ள இடங்களிலேயே ஆலயங்கள் தோற்றம் பெற்றன'' என்பது பேராசிரியர் பத்மநாதனின் கருத்தாகும். இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் கந்தரோடையை விட மிகவும் சிறப்புப் பெற்ற வணிகத் துறையாக பூநகரி விளங்கியுள்ளமை தெரிய வருகின்றது. மண்ணித்தலைச் சிவாலயம் யாழ்ப்பாணத்து அரசு காலத்திலோ அல்லது அதற்கு முன்பாகவோ கட்டப்பட்டிருக்கலாம் என்பதுடன் அக்கோவிலில் சோழர் கலை மரபும், ஆரம்ப காலப் பல்லவர் கலை மரபும் பிரதிபலிப்பதால் அக்கோயில் கட்டப்பட்ட ஆண்டு பராந்தகன் காலம் என அடையாளப் படுத்தப்படுகிறது. அக்கோயில் மிகவும் நுட்பமான முறையில் சுதை, செங்கட்டி ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

இப்பின்னணியில் மண்ணித்தலையை அடுத்துள்ள கௌதாரிமுனைக் காட்டுப் பகுதியில் ஓர் இந்து ஆலயத்துக்குரியது என ஊகிக்கப்படும் அழிபாடுகள் இருப்பதாக அப்பிரதேசத்தின் சமூகசேவர் பொன்னம்பலம் லோகேஸ்வரன் (வன்னியசிங்கம்) என்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம் அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். அவர் வழங்கிய தகவல் காரணமாக பேராசிரியர் புஷ்பரட்ணம், வட மாகாண தொல்லியற்துறைப் பொறுப்பாளர் ஜெயந்தா ரஞ்சித் விஜயவர்த்தனா, யாழ். கோட்டை புனர்நிர்மாண தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம் கபிலன் ஆகியோர் அங்கு சென்று அழிவுண்டிருந்த ஆலயத்தை ஆய்வு செய்துள்ளனர்.

உயர்ந்த மணல் மேடுகளும், பெரிய ஆல மரங்களும், அடர்த்தியான பற்றைக் காடுகளும், வடலிகளும் கொண்ட இப்பிரதேசத்தின் ஒதுக்குப்புறத்தில் இவ்வாலய அழிபாடுகள் காணப்படுகின்றன. தற்போது சிறிய கர்ப்பக்கிரகத்தையும், முன் மண்டபத்தையும் கொண்ட இவ்வாலயம் ஏறத்தாழ 50 அடிக்கு மேற்பட்ட நீளத்தையும், 15 அடி அகலத்தையும் கொண்டுள்ளது. விமானத்தின் ஒரு பகுதியையும், ஒரு பக்க தேவகோஸ்டம், கர்ணக்கூடு, தூபி என்பவற்றைத் தவிர இவ்வாலயத்தின் பெரும் பகுதி அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

கடலில் இருந்து எடுக்கப்பட்ட கோறல் கற்கள், சுதை, சுண்ணாம்பு என்பவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஆலயத்தில் தற்போது எஞ்சியுள்ள சில அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட கட்டிடச் சிதைவுகள் ஆலயத்தின் மிகப் பழமையைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இவ்வாலயம் சுற்று மதில்களையும், பரிவாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களையும் கொண்டிருந்திருக்கலாம் என்பதை ஆலயச் சுற்றாடலில் காணப்படும் சான்றுகள் உறுதி செய்கின்றன. அவற்றுள் முன் மண்டபத்தில் இருந்து 70 அடி தொலைவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பரிவாரத் தெய்வத்திற்குரிய ஆலயம் அழிவடைந்த நிலையில் இருந்தாலும் அதன் முழுமையான தோற்றத்தையும் கலையம்சத்தையும் காணக் கூடியதாக உள்ளது.

தற்போது ஆலயத்தின் அருகில் சென்று ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது பாதுகாப்பற்றதாக இருப்பதால் அவ்விடம் முழுமையாக, துப்பரவு செய்யப்பட்டு அழிவுண்டு புதைந்து காணப்படும் கட்டிடப் பகுதிகள் மீட்கப்படுமாயின் ஆலயத்தின் காலம், வரலாறு தொடர்பான உண்மைகள் வெளிச்சத்துக்கு வர வாய்ப்புண்டு.


ஆயினும் சாதாரண குடிசை வீடுகளையும், அரிதான சிறிய சீமெந்துக் கட்டிட வீடுகளையும் கொண்ட இப்பிரதேசத்தில் இவ்வகையான கலை வேலைப்பாடு கொண்ட ஒரு ஆலயம் பிற்காலத்தில் தோன்றியிருக்கும் எனக் கூற முடியாதுள்ளது. ஆனையிறவுப் பாதை பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் ஆதி கால, இடைக்கால வரலாற்றில் யாழ்ப்பாணத்திற்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான தொடர்பு இவ்வாலயம் அமைந்த பிரதேசத்தின் ஊடாக நடந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் உண்டு.

1450 இல் கோட்டை மன்னன் செண்பகப்பெருமாளின் படை இப்பிரதேசத்தின் ஊடாகவே யாழ்ப்பாணம் வந்ததாக 15 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'குயில்விடு தூதுப்பிரபந்தம்' என்ற சிங்களக் காவியம் கூறுகிறது. யாழ்ப்பாண அரசு தொடர்பாக தோன்றிய தமிழிலக்கியங்கள் பூநகரியை யாழ்ப்பாண அரசிற்குட்பட்ட வெளிநாடு என குறிப்பிடுவதோடு, யாழ்ப்பாண அரசிற்கு எதிரான படையெடுப்புக்கள் மாதோட்டத்திலிருந்து கல்முனை வரையான தரை வழிப் பாதை ஊடாக மேற்கொள்ளப்பட்டதாக கூறுகின்றன.

17 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதத்தை பரப்பிய போர்த்துக்கேயர் தமது முதலாவது கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றை பூநகரியில் அமைத்ததாக அவர்களது ஆவணங்களில் குறிப்பிடப்படுகின்றது. 1892 ஆம் ஆண்டிற்குரிய பிரித்தானியரது ஆலயப் பதிவேட்டில் குடாநாட்டில் உள்ள பல வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வரலாற்றுப் பின்னணிகள் இவ்வாலயம் அமைந்த இடத்திற்கு தொன்மையான வரலாறு உண்டு என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

**- தொகுப்பு : உமா பிரகாஷ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம்

# பாகவதமேளா

தென்னகத்தின் நிருத்திய நாடக வடிவங்களை நாம் ஒப்புநோக்குகின்ற பொழுது அவற்றினது பிறப்பும் வளர்ச்சியும் வாசனையும் ஒரு பொதுத் தன்மையைக் கொண்டமைவதை நம்மால் அவதானிக்க முடியும். கூடவே, சமய நெறி சார்ந்ததான கலாசார ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தும் தனித்தன்மை மிக்கனவாகவும் அவற்றின் வெளிப்பாடும் அமையும். தமிழகத் தஞ்சைப் பிரதேசம் சார்ந்த மெலட்டூர், சூலமங்கலம், சாலியமங்கலம், தேப்பெருமா நல்லூர், ஊத்துக்காடு, ஒரத்தநாடு போன்ற இடங்களினது உரிமைச் சிறப்பினைக் கொண்டிலங்கும் பாகவதமேளா எனும் நிகழ்த்து கலையானது செந்தமிழின் இயலினையும் சுந்தரத் தெலிங்கின் இசையினையும் கொண்ட நிருத்திய நாடக வடிவமாகவே திகழ்கின்றது. கிருஷ்ண பக்தர்களான பாகவதர்களால் பேணிக் காப்பாற்றி வளர்த்தெடுக்கப்பட்ட தன்மையினாலேயே இப்பெயரை இவ்வாடற்கலை பெறுகின்றது.

பாகவதமேளாவின் தோற்றுவாயானது ஆந்திராவைச் சேர்ந்ததெனினும் அதனது ஐநூறு ஆண்டுகால படிநிலை வளர்ச்சியைத் தமிழகத்தின் மெலட்டூரே மிக முக்கியமாக முன்னெடுத்தது. இவ்வாடற் கலையை மரபுவழி பயின்று வந்த நாட்டிய நாடகமாகவும் அடையாளப்படுத்தலாம். பரத முனிவரின் கருதுகோளில் நாட்டியம் என்பது நாட்டிய நாடகத்தையே குறிப்பதாக அமையும். நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் செவ்வியல் தன்மைகொண்ட நாட்டிய நாடக இலக்கணங்களை உள்ளடக்கிய ஒரு கலைவடிவமாகவே பாகவத மேளா விளங்குகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி கி.பி 4ம் நூற்றாண்டுவாக்கில் பல்லவர் ஆட்சிக் காலத்தே ஆந்திராவில் இக்கலை உருவானதெனவும் பிற்காலச் சோழர் ஆட்சியில் தஞ்சைப் பகுதியிலும் இது நடாத்தப்பட்டுவந்ததாகவும் முதலாவது இராசராசன் காலத்தே இந்தோனேசியா, யாவா, பாலித் தீவுகள் போன்ற நாடுகளிலும் இது நிகழ்த்தப்பட்டு பெரும் செல்வாக்கினைப் பெற்றிருந்ததெனவும் தகவல்கள் பெறப்படுகின்றன.

கி.பி 1500க்கு முற்பட்ட காலம்முதலே ஆந்திராவின் தெய்வீகத் தன்மைகொண்ட நிகழ்த்து கலையாக பாகவதமேளா விளங்கியமை விஜயநகரப் பேரரசுகளின் வரலாற்று ஆவணங்களாலும் தெளிவுபடுத்தப் படுகின்றது. அவ்வரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து போதிய ஆதரவின்மையால் பாகவத மேளாவின் வளர்ச்சியிலும் வீழ்ச்சி ஏற்படலாயிற்று. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடக மரபினைப் பின்பற்றிவந்த அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பாகவதர்களான சில நாட்டியக் கலைஞர்கள் தஞ்சாவூர் நோக்கி இடம்பெயரலாயினர். இக்கலையில் ஆர்வம் கொண்டவரான தஞ்சை மன்னர் அச்சுதப்ப நாயக்கர் (1550 -1614) இக் கலையை வளர்த்தெடுக்கவேண்டி மேலும் ஆந்திராவிலிருந்து பாகவதமேளாக் குடும்பத்தினரை அழைப்பித்து தனித்தனியாக அவர்களுக்கு வீடும் கிணறும் கட்டிக்கொடுத்து வயல் நிலங்களும் வழங்கினாரெனவும் இவ்வாறு 510 குடும்பத்தினர் குடியமர்த்தப்பட்டதாகவும் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. பாகவதர்கள் குடியேறிய கிராமம் முன்னர் அச்சுதபுரமென்றும் பின் உன்னதபுரமென்றும் தற்போது மெலட்டூர் எனவும் அழைக்கப்படுகின்றது.

எனினும் இக்கலைஞர்கள் அங்கு வருவதற்கு முன்னரேயே பாகவதமேளா தமிழகத்தில் அறிமுகமாகி விட்டது என்றே கூறவேண்டும். ஆந்திராவிலிருந்துவந்து தஞ்சையையடுத்த வரகூரில் குடியேறிய தீர்த்த நாராயணரே முதன் முதலாக பாகவதமேளாவை தமிழகத்தில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவராகின்றார். இதில் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சம் யாதெனில் அச்சுதப்ப நாயக்கர் ஆட்சியில் மெலட்டூரில் குடியேறிய பாகவதமேளாக் கலைஞர்களின் வழிவந்தவர்களே கிருத்திகள், பதவர்ணங்கள், சப்தங்கள் போன்றவற்றைக் கொண்டு செவ்வியல் தன்மை மிக்க நிகழ்த்து கலையாக இதனை மாற்றியமைத்தவர்களாக கருதப்படுவதாகும். பாகவதமேளாவிற்கான கதை வடிவங்களின் உருவாக்கத்திற்கும் அச்சுதப்ப நாயக்கரே காரணமாக அமைந்துள்ளார். பின்னர் தஞ்சை சரபோஜி மன்னரும் இதனை ஆர்வத்துடன் வளர்த்தவர் என்ற சிறப்பினைப் பெறுகின்றார்.

கர்நாடக இசை வடிவமான தெலுங்குக் கீர்த்தனைகளையும் பாடல் முறையிலமைந்த தமிழின் உரையாடல்களையும் இந்நாடக வடிவம் கொண்டிருப்பினும் ஆந்திர நாட்டுக்குரிய குச்சுப்புடியின் இயல்பான பிணைப்புக்களை இது இணைத்துக் கொண்டிருப்பது கவனத்திற்கு உரியதாகின்றது. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட பாகவதர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட இந் நிகழ்த்து கலையினை தெலுங்குப் பிராமண குலத்தினர் தங்களது ஆண்களுக்குரிய கலையாக மட்டுமே வரையறைசெய்த தன்மையில் இதன் வளர்ச்சியும் மட்டுப்படுத்தப் பட்டதாகவேயுள்ளது. கடந்த ஐநூறு ஆண்டு கால அதன் வரலாற்றுத் தளத்துள் நிலைக்களப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த நிகழ்த்து கலையான பாகவதமேளா உரிய சிறப்பினை எட்டாமைக்கும் இது காரணமாயமைந்து விடுகின்றது. தமிழகத்துக்குரிய செவ்வியல் நடனமான பரத நாட்டியத்தின் பல்வேறு அம்சங்களை இந்நாட்டிய நாடகம் உள்வாங்கியிருப்பது சூழலின் வளர்ச்சிநிலையென்றே கொள்ளவேண்டும்.

கி.பி 16ம் நூற்றாண்டில் பாகவதர் நாராயண தீர்த்தரால் எழுதப்பட்ட கிருஷ்ணலீலா தரங்கிணியே இதன் முதல் நாடக வடிவமாகக் கொள்ளப்படுகின்றது. கிருஷ்ண ஜெயந்தியில் இந்நாடகம் தொடராக நடிக்கப்பட்டு வந்துள்ளது. தீர்த்தர் இன்னும் பல நாடகங்களை அன்று எழுதியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதன்பின்னர் இவரது சீடரும் அரசவைக் கலைஞருமான கோபாலகிருஷ்ண சாஸ்திரி சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம் போன்ற புகழ்பெற்ற நாடகங்களை எழுதியதோடு இன்றைய பாகவதமேளாப் பாணியை உருவாக்கியவர் என்ற சிறப்பினுக்குமுரியவராகின்றார். இவரது மகனும் சீடருமான வெங்கடராம சாஸ்திரி தலைசிறந்த கவிஞராகவும் இசை மேதையாகவும் விளங்கியதோடு பதினொரு நாடகங்களை எழுதியுள்ளமை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகின்றது. இவற்றில் பிரகலாத சரித்திரம், மார்க்கண்டேயர், உஷாபரிணயம், பின்னர் வந்த ருக்மணி கல்யாணம் போன்றவை மிகவும் புகழ்பெற்றவை. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவரான மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரி இக்கலையை மறுமலர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்றவர் என்ற பெருமைக்கு உரியவராகின்றார். மெலட்டூர் நடேசய்யர், சூலமங்கலம் சீதாராம பாகவதர், ஊத்துக்காடு சுவாமி பாகவதர், சாலியமங்கலம் பரதம் பஞ்சநாத பாகவதர் போன்றோர் இக்கலையின் மிகப் புகழ்பெற்ற கலைஞர்களாகக் கருதப்படுகின்றனர்.

பாகவதமேளாவின் வருடாந்த நிகழ்வுகள் மெலட்டூர் வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சித்திரை மாதத்தில் வரும் லஷ்மி நரசிம்ம ஜயந்தி விழாவில் வெகு சிறப்பாக ஆரம்பமாகும். பின்னர் இராம நவமி மற்றும் கோகிலாஷ்டமியிலும் இது நிகழ்த்தப்படும். முன்னர் சென்னை, பங்களூர், ஐதராபாத், டில்லி எனப் பல இடங்களிலும் இடம்பெற்றிருந்த இந்நிகழ்வுகள் தற்போது மெலட்டூர், சாலியமங்கலம், சூலமங்கலம், தேப்பெருமா நல்லூர், ஊத்துக்காடு, ஒரத்தநாடு போன்ற தஞ்சை மண்ணில் மட்டுமே இடம்பெற்று வருகின்றது. இதில் மெலட்டூர் வரதராஜப்பெருமாள் கோவில் வீதியில் இக்கலை தவறாது நிகழ்த்தப்படவேண்டுமென்ற சமூகக் கட்டுப்பாடு தொடர்ந்தும் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்வுகளில் பங்குகொள்ளும் பெரும்பாலான கலைஞர்கள் வெளியிடங்களிலிருந்தே மெலட்டூருக்கு வந்து சேருகின்றனர். பொதுவாக இளம் கலைஞர்களான இவர்கள் நாட்டியத்தை நன்கு பயின்றவர்களாகவே உள்ளனர். கோவிலும் வழிபாடும் சார்ந்த இக்கலையை வைணவக் கோட்பாட்டில் நம்பிக்கைகொண்ட இக்கலைஞர்கள் நிகழ்த்துகைக்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உபவாசம் இருந்து தூய்மையைக் கடைப்பிடிப்பர். நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னரும் நிகழ்வு முடிவுற்ற பின்னரும் வழிபாடியற்றுவர். நாடகத்தில் அணியப்படுகின்ற விநாயகரின் முகமூடியைத் தெய்வீகம் பொருந்திய புனிதப் பொருளாகக் கருதுவர். இதற்கான ஒப்பனை புராண இதிகாச கதாபாத்திரங்களுக்கு ஏற்றவாறு ஆடை அணிகளையும் முகமூடிகளையும் கொண்டதாக அமையும்.






பாகவதமேளாவின் நிகழ்த்துகையின்போது அதற்கான அரங்கு மெலட்டூர் வரதராஜப் பெருமாள் முன்றலில் அமைக்கப்படும். அக்காலத்தே பதினைந்து அடி நீள அகலத்தில் அமைக்கப்பட்ட மேடை தற்போது இருபது அடி நீள அகலத்திலும் மூன்றடி உயரத்திலும் அமைக்கப்படுகின்றது. மேடைக்குப் பின்புறமாக ஒப்பனை அறை அமையும். மேடையின் முன்னாலுள்ள கோவிலறையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருக்க நாடகம் தொடங்கும். முன்னர் விடிய விடிய இடம்பெற்றுவந்த நாடகங்கள் தற்போது நான்கு தொடக்கம் ஐந்து மணிவரை கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பக்த பிரகலாதா நாடகம் மட்டும் முன்னைய நடைமுறைகளைப் பின்பற்றி முழுஇரவு நாடகமாகத் தொடர்ந்தும் நடாத்தப்பட்டே வருகின்றது. இன்றும் இந்நாடகத்தைக் கண்டுகளிக்க மக்கள் வெள்ளம் அலைமோதுவதைப் பார்க்கலாம்.

இந்நாட்டிய நாடகங்கள் கோணங்கியின் வருகையுடன் ஆரம்பமாகின்றன. இதனைத் தொடர்ந்து இசைக் கலைஞர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களும் மேடையில் தோன்றி வழிபாட்டுப்பாடல்களை இசைப்பர். இதனைத் தோடயமங்களம் என அழைக்கின்றனர். பக்க வாத்தியங்களாக தம்புரா, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் என்பவற்றுடன் மேலும் இரு தாளவாத்தியம் இசைக்கப்படும். வழிபாடு முடிவுற்றதும் பிள்ளையார் வரவு இடம்பெறும். பிள்ளையார் வேடத்தில் முகமூடியணிந்த சிறுவன் பக்க வாத்யங்கள் இசைக்க அபிநயிப்பான். இதன்பின்னர் இருவர் திரைபிடிக்க பாத்திரப் பிரவேசம் இடம்பெறும். தலைமைப் பாத்திரமேற்கும் கட்டியக்காரனே பாத்திரங்களைப் பற்றிய அறிமுகத்தையும் செய்வார். அதன்பின்னர் நாடகம் காட்சி காட்சியாக விரியும். நிகழ்ச்சி முடிவுற்றதும் நடிகர்கள், பாடகர்கள் மற்றும் பக்கவாத்தியக்காரர்கள் அனைவரும் கோவிலுக்குச்சென்று வழிபாடியற்றுவர். அதன்பின்னர் வேடங்களைக் களைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெலட்டூர் ஸ்ரீ லக்சுமி நரசிம்ம ஜயந்தி பாகவதமேளா நாட்டிய நாடக சங்கம் எனும் பெயரில் பூர்வாங்க மரபுவழியினைப் பேணிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அமைப்பானது கடந்தபல ஆண்டுகளாக மிகச் சிறப்பாக இந்நிகழ்வுகளை முன்னெடுப்பதைக் காணமுடியும்.

தஞ்சையிலிருந்து சுமார் பதினைந்து கிலோமீற்றர் தூரத்திலமைந்துள்ள சாலியமங்கலத்தைப் பொறுத்தவரை கடந்த 365 ஆண்டுகளுக்கும் மேலாக பாகவதமேளா மிகச் சிறப்பாக இடம்பெற்றுவருவதாக ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இது ஸ்ரீ அச்சுதப்ப நாயக்கரின் ஆட்சிக் காலத்தைத் தொடர்ந்ததாக அமையும். அக்காலத்தே இங்கு வாழ்ந்தவரான பரதம் பஞ்சநாத பாகவதர் இவ்வாடற்கலைக்கு பெரும் பங்களிப்புச் செய்தவராக இன்றும் நினைவுகூரப்படுகின்றார். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் மிக்க புலமைபெற்றவரான இவர் ஸ்ரீபக்த பிரகலாதா, விப்ரநாராயணா, ருக்மணி பரிநயம், ருக்மங்காதா, ருக்மணி கல்யாணம், சீதா கல்யாணம் எனப்பல நாட்டிய நாடகங்களை மும்மொழிகளிலும் எழுதியிருக்கின்றார். பக்த பிரகலாதா மற்றும் ருக்மணி பரிநயம் ஆகியவை தொடர்ந்தும் இங்கு சிறப்பாக ஆடப்பட்டு வருவது கவனத்துக்குரியதாகின்றது.

பாகவதமேளா தெலுங்குப் பிராமணரது ஆண் வர்க்கத்துக்குரிய தனிக் கலை எனும் அதன் இறுக்கமான தளைக்குள்ளிருந்து விடுபட்டு பொது நிலைப்படுத்தப்பட வேண்டும் என்பது இதில் ஆர்வம் கொண்ட பலரது கனவாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில் குறித்த சமூகத்தினரும் தெய்வீகம் மற்றும் புனிதத் தன்மை எனும் கோட்பாட்டுக்குள் தங்கள் மனோநிலையை மென்மேலும் இறுக்கமாக்கிக் கொண்டிருப்பது தொடரவே செய்கின்றது. இதனால் இந்திய நாட்டின் ஏனைய செவ்வியல் கலைகளின் வரிசைக்குள் உள்வாங்கப்பட்டு உலகளாவிய நிலையில் தன்னை நிலைநிறுத்தவேண்டிய பாகவதமேளா அதன் வளர்ச்சிப்பாதையில் இன்னும் தொடக்கநிலையைத் தாண்டாத தன்மையினையே கொண்டிருப்பது கவலைக்கு உரியதாகின்றது. எனினும் பாகவத மேளா நாட்டிய நாடகம் தொடர்ந்தும் இந்திய நாட்டின் தொன்மைமிக்க மரபுவழி நிகழ்த்து கலையாகத் தன்னை இனம்காட்டிக் கொண்டிருப்பது ஒன்றே அதன் பெருமையை நிலைநிறுத்தத்தக்கது எனலாம்.

**தாக்ஷாயினி பிரபாகர்**
**நடனத்துறை விரிவுரையாளர் - கிழக்குப்பல்கலைக் கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை மூலிகைப் பாவனையும் இயல்பான அழகிய ஆரோக்கிய வாழ்வும்

**கலாநிதி (திருமதி) விவியன் சத்தியசீலன்**

எம் முன்னோர்கள் இயற்கையின் படைப்பாகிய மருத்துவக் குணம் நிறைந்த, பக்க விளைவுகள் அற்ற மூலிகைகள் கொண்டு தமது வாழ்வை ஆரோக்கியம் நிறைந்ததாகவும், அழகு மிக்கதாகவும் ஆக்கிக் கொண்டார்கள். தற்காலத்தில் உள்ளதைப் போன்று அழகு சாதனப் பொருட்கள் எதுவும் இல்லாத காலத்தில் கூட அவர்கள் அழகுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்ந்தார்கள் என்பதை நாங்கள் மறந்து வருகிறோம். மேலும் அவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்வதில் கூட ஆர்வம் அற்றவர்களாக உள்ளோம். இதற்கான மிக முக்கிய காரணம் எம்மிடம் ஏற்பட்ட நவீன முறையிலான வாழ்க்கை முறைமையின் தாக்கங்களே ஆகும்.

பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் இளநரையைத் தடுத்து ஆரோக்கியமான நீண்ட கரிய கூந்தலைப் பெறுவதற்கு இயற்கை முறையிலான சாயப்பொடியைத் (Natural henna heir dye powder) தயாரித்துப் பயன்படுத்தினார்கள். அதை எவ்வாறு தயாரித்தார்கள் என்பதை இங்கு விளக்கமாகப் பார்ப்போம்.

கரிசலாங்கண்ணி (வெள்ளைச் கரிசாலை), கறிவேப்பிலை, மருதோன்றி ஆகிய மூன்று மூலிகைகளையும் சம அளவில் (ஒவ்வொன்றும் தலா 500 கிராம் எடுக்கலாம்.) தனித்தனியாகச் சேகரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். கரிசலாங்கண்ணிச் செடியின் முழுப் பகுதிகளையும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, நன்றாக நிழலில் உலர்த்தவும். அதேபோன்று கறிவேப்பிலை, மருதோன்றி இலைகளையும் நன்றாகக் கழுவி உலர்த்தி எடுக்கவும். மூன்று மூலிகைகளையும் தனித்தனியாக இடித்து, பின்னர் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் துணியில் அரித்து, காற்றுப் புகாத பாத்திரத்தில் பாதுகாத்துக் கொள்ளவும். இளநரை உள்ளவர்கள் தங்கள் கூந்தலின் அளவுக்கேற்ப தேவையானளவு கலவையை எடுத்து, தண்ணீர் விட்டு, நன்றாகக் கலக்கி, அரை மணி நேரம் கழிந் தபின்னர், எண்ணெய்ப் பசையற்ற கூந்தலில் சுத்தமான தூரிகை கொண்டு அடி மயிரில் இருந்து நன்றாகத் தடவி, இரண்டு மணி நேரம் ஊறவிட்டு, பின்னர் குளிர் நீரால் கழுவ வேண்டும்.

தலையில் ஏற்படும் அதிக உஷ்ணம் காரணமாகவே பொடுகு ஏற்படுகிறது. செயற்கை சம்போ வகைகளைப் பயன்படுத்துவது பொடுகுத் தொல்லையை மேலும் அதிகரிக்கும். எனவே செயற்கை சம்போவிற்குப் பதிலாக நம் முன்னோர்கள் பயன்படுத்திய இயற்கையான மூலிகைப் பவுடரைப் பயன்படுத்தலாம். இந்த மூலிகைப் பவுடரான பைலா சம்போ பவுடர் (Phylla shampoo powder) எவ்வாறு தயாரிப்பது என்பதைப் பார்ப்போம்.


பொடுதலை, வெந்தயம், சீயாக்காய், நிழலில் உலர்ந்த செவ்வரத்தைப்பூ இதழ், உலர்ந்த தேசிக்காய்க் கோது, உலர்ந்த புனலைப் பழம் ஆகியவற்றை முறையே 5:2:3:1:2:2 விகிதத்தில் (முறையே 500 கிராம், 200 கிராம், 300 கிராம், 100 கிராம், 200 கிராம், 200 கிராம் என்ற அளவுகளில்) எடுத்துக் கொள்ளவும். பொடுதலைச் செடியை வேருடன் சேகரித்து நிழலில் உலர்த்தி எடுக்கவும். உலர்ந்த செவ்வரத்தைபூ, உலர்ந்த தேசிக்காய்க் கோது தவிர்ந்த மற்றைய பொருட்களை நன்கு கழுவி, நிழலில் உலர்த்தி எடுக்கவும். பின்னர் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்ந்து உரலில் இடித்துக் காற்றுப் புகாத பாத்திரத்தில் அடைத்துக் கொள்ளவும். கூந்தலின் அளவுக்கு ஏற்ப தேவையான அளவு பவுடரை எடுத்து நன்றாகத் தேய்த்து முழுகி வருவதால் பொடுகுத் தொல்லை நீங்கி ஆரோக்கியமான கூந்தல் கிடைக்கும்.

முன்னோர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் காரணமாகவும் அவர்களுக்கு இளவயதில் நரை ஏற்படுவது குறைவாக இருந்தது. ஆனால் தற்காலத்தில் அதிகளவானவர்களுக்கு இளவயதில் நரை ஏற்படுகிறது. இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கக்கூடிய எண்ணெய் எவ்வாறு தயாரிப்பது என்பதைப் பார்க்கலாம்.

உலர்ந்த கரிசலாங்கண்ணி, உலர்ந்த கறிவேப்பிலை, உலர்ந்த மருதோன்றி இலை ஆகிய மூன்றையும் சம அளவில் (தலா 70 கிராம்) எடுத்துக் கொள்ளவும். மூன்று மூலிகைகளையும் தனித் தனியாக உரலில் இடித்து, பின்னர் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து, ஒரு துணியில் அரித்து எடுக்கவும். தாச்சி ஒன்றில் இரண்டு போத்தல் நல்லெண்ணெய் விட்டு நன்றாகக் கலக்கி, ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை சூரிய வெப்பத்தில் பதினைந்து நாட்கள் வைத்தெடுக்கவும். பதினாறாம் நாள் எண்ணெயைத் தெளிவெடுத்து, ஈரமற்ற பாத்திரத்தில் விடவும். இம்மூலிகை எண்ணெய் இளநரையை மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போக்காமல், வயது மூப்பால் ஏற்படும் நரையையும் போக்க வல்லது.

மேலும் சங்க காலத்தில் மருதோன்றி இலைகளை எலுமிச்சை பழச்சாற்றில் அரைத்து பெண்கள், கை, கால், விரல் நகங்களில் தடவி அழகு பார்த்திருக்கிறார்கள். வளரும் குழந்தைகளுக்கும், வலுக் குறைந்த பெரியவர்களுக்கும், இரும்புச் சத்தை இழக்கும் பெண்களுக்கும் கறிவேப்பிலை சிறந்த உணவாகப் பயன்பட்டது. தொற்று நோய்களை எதிர்க்கும் சக்தி, இரத்தத்தைச் சுத்தம் செய்யும் திறன், புண்களை விரைவில் குணப்படுத்தும் ஆற்றல், குறிப்பாக வாய்ப் புண்களை குணப்படுத்தும் சக்தி ஆகிய குணங்கள் கறிவேப்பிலைக்கு உண்டு. தலை முடியின் வளர்ச்சிக்கும், வனப்புக்கும் உதவும் ஊட்டச்சத்துக்கள் இதில் அதிகமாகக் காணப்படுகின்றன.

எனவே இயற்கை அன்னையின் கொடைகளான மூலிகைகளை நம் முன்னோர்களின் வழிகாட்டலில் நாமும் முறையாகப் பயன்படுத்தினால் நலமோடும், அழகோடும், ஆரோக்கியத்தோடும் வாழலாம்.

**தொகுப்பு : பிரியங்கா**

**வெள்ளைக் கரிசலாங்கண்ணி(வெள்ளைக் கரிசாலை)**
Botanical Name - Wedelia Chinensis
Family - Compositae
Sinhala Name - Wan - Kikirindiya

இவை ஒரு அடி உயரம் வரை வளரும். மணற் பாங்கான இடங்களில் வளர்ந்தாலும் நீர்ப் பற்றுள்ள இடங்களில் அதிகமாக வளரும்.

**கறிவேப்பிலை**
Botanical Name - Murraya Koenigii
Family - Rutaceae
Sinhala Name - Karapincha

இவை 20 - 25 அடி வரை உயரம் வரை வளரும். மரம், கிளை ஆகியவை கருமை நிறமுடையவை. வைகாசி மாதங்களில் கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூக்கள் மென்மையானவை. பழங்கள் கருமையானவை. கரிசல் மண்ணில் அதிகமாக வளரக் கூடியவை.

**பொடுதலை**
Botanical Name - Lippia Nodiflora
Family - Verbenaceae
Sinhala Name - Hiramana - Detta

இது ஈரப் பசை உள்ள குளக்கரை, வாய்க்கால் ஓரம் போன்ற இடங்களில் படரும் குறுஞ் செடியாகும். வேர் மற்றும் விதை மூலம் இனம் பெருகும். மூல நோய், பொடுகு போன்றவற்றை நீக்கக்கூடியது.

**மருதோன்றி**
Botanical Name - Lawsonia Inermis    Family - Lythraceae
Sinhala Name - Marithondi

நிறைந்த மணம் உள்ள சிறிய மரமாகும். இவை ஆறு மீற்றர் வரை வளரக் கூடியவை. பொதுவாக தரிசு நிலங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்படும். விதைகள், வேர்க் கன்றுகள் மூலம் இன விருத்தி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை மாளிகை


தென்னாபிரிக்காவில் உள்ள மிகப் பழைமையான காலனித்துவ காலக் கட்டிடம் காஸில் ஒவ் குட் ஹோப் ஆகும். (நன்னம்பிக்கை மாளிகை) கிழக்கிந்திய தீவுகளுடனான தனது வாசனைத் திரவிய வர்த்தகத்திற்கு ஆதரவு அளிக்கவும், அதனைப் பாதுகாப்பதற்காக என டச்சுக்காரர்கள் கட்டிய கோட்டையே இந்த நன்னம்பிக்கை மாளிகையாகும். மிக பழைமையான இம்மாளிகை மிக்க சிறப்பாகப் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

16ஆம் நூற்றாண்டில் வாசனைத் திரவிய வர்த்தகத்தில் முன்னணியில் நின்றவர்கள் போர்த்துக்கேயர்களாவர். ஆனால் போர்த்துக்கல், ஸ்பெயின் இராச்சியத்துடன் சேர்ந்து கொண்டதையடுத்து, 1580ஆம் ஆண்டில் இருந்து ஸ்பெயின் தேசம் டச்சுக்காரர்களுடன் போரிட்டு வந்தது. இதன் காரணமாக இராணுவ ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் போர்த்துக்கேய ராஜ்ஜியம் டச்சுக்காரர்களின் தாக்குதலுக்கு இலக்கானது.

இதன் விளைவாக வாசனைத் திரவிய வர்த்தக நடவடிக்கைகள், கடல் கொள்ளை, கப்பல் சீரழிவு, நோய்கள் ஆகியவற்றால் மட்டுமன்றி, வர்த்தகத்தின் காரணமாகவும் மிகப் பெரும் ஆபத்துகள் ஏற்படும் ஒன்றாக விளங்கியது. இந்த அபாயங்களை நிர்வகித்து, நடந்து கொள்ள சிறந்த வழி விலைக் கட்டுப்பாட்டினைக் கவனிக்கும் ஓர் அமைப்பை உருவாக்குவதே என கருதப்பட்டது. 1600 ஆம் ஆண்டு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பனி உருவாக்கப்பட்டது. அவ்விதம் தாமும் ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்ளாதவிடத்து தமக்கு பேராபத்து தோன்றும் என்பதை டச்சுக்காரர்கள் உணர்ந்தனர். எனவே 1602ஆம் ஆண்டு ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி (Bereenigde Ost-Indische Compagnie) உருவாக்கப்பட்டது. இதனை சுருக்கமாக BOC என அழைப்பர்.

17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதி நாடுகளில் இருந்து போர்த்துக்கல் வெளியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்பிராந்தியத்தில் ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி (BOC) மிகுந்த செல்வாக்கினைப் பெற்று விளங்கியது. நெதர்லாந்தில் இருந்து கிழக்கிந்திய பிராந்தியத்துக்குச் செல்லும் பயணம், அதாவது அத்திலாந்திக் சமுத்திரத்தில் இருந்து, தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) ஊடாக இந்து சமுத்திரத்திற்கே செல்லும், மிக நீண்ட கடல் பயணம் மிக மிகக் கஷ்டமானது. இத்தகையதோர் கஷ்டமான நிலையில் தென் ஆபிரிக்கா தென் முனைக் கோடியில், தஞ்சமடைந்து ஓய்வெடுக்கவும், கப்பல்களுக்கு ஒரு தரிப்பிடத்தை வைத்து எரிபொருள் இட்டு மீளத்தயார் செய்யவும் ஓர் இடம் கட்டாயமாகத் தேவை என்பது புலனாயிற்று. இந்தத் தேவையை நிறைவேற்றும் முகமாக கப்பல் கமாண்டரான ஜன் வேன் ரீபெக் (Jan van Riebeeck) 1651ஆம் ஆண்டு முதல் கேப் நகருக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டார்.


வேன் ரீபெக்கின் கப்பற்படையில் 5 கப்பல்கள் இருந்தன. ட்ரொம்மெடரிஸ், ரிஜ்ஜெர், கொடேஹூப், வால்விஷ், ஒலிபன்ற் என்பன இக் கப்பல்களின் பெயர்களாகும். முதல் மூன்று கப்பல்களும் 1652 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி கேப்டவுணைச் சென்றடைய ஏனைய இரு கப்பல்களும் சில காலத்துக்குப் பின்னர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேப்டவுணைச் சென்றடைந்தது. பழ மரங்களையும், காய்கறிகளையும் பயிரிடுவதன் மூலம் ரேபில் குடாவில் இயற்கையாய் கப்பல் நங்கூரமிடும் சூழ்நிலையை மேலும் முன்னேற்றுமாறு பணிக்கப்பட்டது. (கேப்டவுணில் உள்ள தாவரப் பூங்காவில், அவரது உத்தரவின் பேரில் நாட்டப்பட்ட வாதாம் மரங்களின் வேலிகள் தற்போதும் காணப்படுகின்றன.) அத்துடன் அவர் உள்ளூர்வாசிகளான கொய் (KHOI) மக்களிடமிருந்து கால்நடைகளை வாங்கியிருந்தார். ஆயினும் வேன் றீபெக்கின் மிக முக்கியமான பங்களிப்பு கேப்டவுணில் அவர் கட்டிய போர்ட் டி கொடே ஹூப் என்னும் முதலாவது கோட்டையாகும். இக்கோட்டை களிமண்ணாலும், மரங்களினாலும் கட்டப்பட்டதாகும். இது தற்போதுள்ள மாளிகைக்கு அருகில் அமைந்திருந்தது.

1663ஆம் ஆண்டு பெய்த பெரு மழையால், இக் கோட்டை இடிந்து விழும் நிலையில் இருந்தது. அவ் வேளை நெதர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் இடையில் கடும் முறுகல் நிலை தோன்றி போர் மூழும் நிலை உருவாகியிருந்தது. அதே ஆண்டு, 5 முகப்புடைய கோட்டை ஒன்றைக் கட்டுமாறு, ஜன் வேன் றீபெக்கிற்குப்


மாளிகையின் மணிக்கூட்டுக் கோபுரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பதவிக்கு வந்த கமாண்டர் ஸஸாரியஸ் வேஜ்னேருக்கு ஆணையாளர் இஸ்பிரான்ட் கொஸ்கே பணிப்புரை வழங்கினார். கடற்கரையில் ஓர் இடம் இக்கோட்டையை நிறுவுவதற்காக தெரிவு செய்யப்பட்டது. கோட்டையில் துப்பாக்கிகள் வெடித்தால் அச்சத்தம் கப்பல்கள் நங்கூரம் இட்டு நிற்கும் இடத்திற்குக் கேட்கக் கூடியதாக இவ்விடம் தெரிவு செய்யப்பட்டது.


1665ஆம் ஆண்டு இக்கோட்டை வேலைகளை ஆரம்பிப்பதற்காக, அடிமைகள் அமர்த்தப்பட்டார்கள். 1866ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி இக்கோட்டைக்கு அத்திவாரம் இடப்பட்டது. இத்திட்டத்திற்கு பணம் செலவழிக்க, டச்சு கிழக்கிந்தியக் கம்பனி தயக்கம் காட்டியதால் வேலை அடிக்கடி தடைப்பட்டது. இதனை அடுத்து தற்போதைய 5 கோண கல் மாளிகை கட்டிமுடிக்கப் பட்டது. 1679ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி 5 கொத்தளங்களுக்கும் ஒரேன்ஜ் இளவரசர் வில்லியம் என்பவரின் பெயரை அடுத்து, பெயர்கள் அவற்றுக்கு இடப் பட்டன. மேற்கு முனையில் உள்ள கொத்தளத்துக்கு லீர்டாம் எனவும், அதைத் தொடர்ந்து (வலமிருந்து இடமாக) புறென், கற்செனல்போஜென், நஸ்ஸோ, ஓரன்ஜி எனப் பெயரிடப்பட்டன.

1682 இல் பழைய வாசலுக்குப் பதிலாக, நுழைவாசல் கடலைப் பார்த்தவாறு கதவுடன் அமைக்கப்பட்டது. பிரதான நுழைவாயிலில் 1684 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுரம் கட்டப்பட்டது. அதில் பொருத்தப்பட்ட மணி, தென்னாபிரிக்காவில் மிகப் பழைமையான ஒன்றாகும். அதன் நிறை 300 கிலோகிராம் ஆகும். மக்களுக்கு நேரத்தை அறிவிப்பதற்கும், அபாயம் தோன்றும் போது மக்களுக்கு அது குறித்து எச்சரிக்கை செய்யவும் இம் மணி உபயோகிக்கப்பட்டது. இம் மணியின் நாதம் 10 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலும் கேட்கக் கூடியதாகும். அத்துடன் பிரதான அறிவிப்புகளைக் குடியிருப்பவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் சொல்வதற்கும் ஓர் அழைப்பாகவும் இம்மணி பாவிக்கப்பட்டது. இந்தக் கோட்டையில் தேவாலயம், பேக்கரி, வேலைத் தளங்கள், மக்கள் வசிப்பிடங்கள், கடைகள், சிறைக் கூடங்கள் ஆகியவையும் மற்றும் பல வசதிகளும் அடங்கி இருந்தன.

இக் கோட்டைச் சுவர்களுக்கு மஞ்சள் வர்ணம் தான் பூசப்பட்டிருந்தது. அதற்கு காரணம் வெய்யிலின் உஷ்ணத்தைக் குறைப்பதற்காகத்தான். பிரஜைகளை ஆபத்தின் போது காப்பாற்றும் பொருட்டு, உள் முற்றத்தைப் பிரிக்கும் ஒரு சுவரும் கட்டப்பட்டிருந்தது. அதற்குள் இருந்த பல்கனி, லூயிஸ் மிக்கேல் திபோல்ட் என்பவரால் வடிவமைக்கப்பட்டதாகும். இங்கு அன்ரன் அன்ரீத் என்ப்வரால் செதுக்கப்பட்ட சுவர்ச் சிற்பங்களும் உருவச் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பல்கனியில் இருந்து இராணுவத்தினருக்கும், அடிமைகளுக்கும், பதில் கொடுக்கும் அறிவிப்புகள் விடுக்கப்படும். இங்கிருந்து மேலும்


மாளிகையின் முன் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்றால் வில்லியம் பெதெரின் என்பவரின் சேகரிப்புகளான டச்சுக் காலத்து மிகச் சிறந்த ஓவியங்கள் மற்றும் பழைமையான தளபாடங்களையும் பார்வையிட முடியும்.

இங்குள்ள இராணுவ அருங்காட்சியகம் மாளிகையின் இராணுவ வரலாற்றைக் கூறுவதுடன், கேப் காலனியின் வரலாற்றையும் கூறுகின்றது. மாளிகையின் உள்ளே ஒரு சிற்றுண்டிச்சாலையும், மதுச்சாலையும் உள்ளன. பார்வையாளர்கள் இங்கு உணவருந்த முடியும். இரண்டாவது போயர் யுத்தத்தின் போது (1899 - 1902) இம்மாளிகையின் ஒரு பகுதி சிறைச்சாலையாக பாவிக்கப்பட்டது. முன்னைய சிறைக்கூடங்கள் தற்போதும் உள்ளன. இச் சிறையில் இருந்தவர்களில் குறிப்பிட்டுக் கூறத்தக்கவன் பிறிட்ஸ் ஜோபேர்ட் டுகெஸ்னி என்பவனாவான். இம்மனிதன் ஒற்றர் குழுவின் தலைவன் எனக் கூறப்பட்ட டுகெஸ்னி கிட்சனர் என்பவரைக் கொன்றவன் எனக் கூறப்பட்டவன். இம்மாளிகையின் சுவர்கள் மிகவும் தடிப்பானவையாகும். இருப்பினும் டுகெஸ்னி, தினமும் இரவு இரும்புக் கரண்டி ஒன்றினால், கற்களைச் சுற்றி போடப்பட்டிருந்த சீமெந்தினை தோண்டி எடுப்பானாம்.



மாளிகையின் உட்பக்கங்கள்

ஒரு நாள் இரவு இவன் அதனூடாகத் தப்பிச் செல்ல முயன்ற போது, சுரங்க வழியில் ஒரு பெரிய கல் தவறி அவன் மீது விழுந்து நசித்தது. மறுநாட் காலை, அவன் மயக்கமடைந்த நிலையில் உயிரோடு இருக்க ஒரு காவலாளியினால் கண்டு பிடிக்கப்பட்டான்.

**நகர வாழ்வின் மத்திய இடம்**


நன்னம்பிக்கை மாளிகை 1666 ஆம் ஆண்டு கட்டப்பட்ட காலத்தின் போது, கேப் நகர வாழ்வின் மத்திய இடமாக இருந்து வந்துள்ளது. பற்பல சவால்களை இம் மாளிகை எதிர்கொண்டு சமாளித்துள்ளது. சொந்த நன்மைக்காகப் பலர் அதனை அழித்து விடவும் துணிந்தனர். எனினும் அவ்விதம் நடக்கவில்லை. அன்றைய ஏகாதிபத்திய அரசு இம்மாளிகையை 83.340 பவுண்களுக்கு விற்றுவிடவும் முயற்சி செய்த போதும், பொதுமக்களின் எதிர்ப்பினால் அம் முயற்சி கைகூடாமல் போனது.


மாளிகையின் மேற்பகுதியில் ஐக்கிய நெதர்லாந்தின் ஆயுத தொகுதிகளும் காணப்படுகிறது. அதில் சிங்கமொன்று ஐக்கியத்தின் ஏழு அம்புகளை தனது



**அட்டைப்பட விளக்கம் :**
தென்ஆபிரிக்காவில் வர்த்தக மற்றும் பாரம்பரிய நகராக விளங்கும் கேப்டவுணில் அமைந்துள்ள நன்னம்பிக்கை கோட்டை மாலுமிகளின் மாளிகை என வர்ணிக்கப்படுகின்றது. கப்பற் பயணத்தின்போது மாலுமிகளுக்கு வழிகாட்டும் அல்லது அவர்களைக் காக்கும் கடவுள் என நம்பப்படுபவரின் தத்ரூபமான சிலை இது. கோட்டையின் முன்புற வாசலின் மேற்புறத்தின் இடது பக்கத்தில் வெள்ளைப் பளிங்கு கல்லினால் வடிக்கப்பட்ட இச்சிலை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பாதத்தில் பற்றிப்பிடித்திருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பிரதான தீராந்தியில் வேன் ஷோர்ன், டெல்ப்ற், அம்ஸ்டர்டாம், மிடில்போர்க், றொட்டர்டாம், என்குஸென் ஆகிய நகரங்களின் ஆயுதங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஐக்கிய கிழக்கிந்திய கம்பனி காரியாலயங்களை வைத்திருந்த டச்சு நகரங்களாகும். டச்சு கிழக்கிந்தியக் கம்பனியின் இரு பின்னலாக எழுதப்பட்ட தலைப்பெழுத்துகள் இச் சிற்பங்களின் பக்கத்தில் உள்ளன.

1936ஆம் ஆண்டு நன்னம்பிக்கை மாளிகை தேசிய நினைவுச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1980களில் விரிவான புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டதையடுத்து, இக்கோட்டை டச்சுக்காரரின் மிகப் பாதுகாக்கப்பட்ட ஓரிடமாக விளங்குகின்றது. அத்துடன் இக்கோட்டை, தென் ஆபிரிக்காவில் மிகக் கவரத்தக்க வாள்கள் சேகரிப்பு இடமாக விளங்குகின்றது. சாவி வைபவமும் இங்கு பார்த்து ரசிக்கக் கூடிய ஒன்றாகும். அதாவது தினமும் காலை 10 மணிக்கு மாளிகை திறக்கப்படுவதையும் நள்ளிரவு 12 மணிக்கு மாளிகை பூட்டப்படுவதையும் பிரதி பலிக்கும் சாவிகள் வைபவம் இடம்பெறும். மாளிகைக் காவலாளி, வைபவத்தின் இறுதியில் துப்பாக்கியை வெடிக்க வைப்பதுடன் அந்நிகழ்ச்சிகள் நிறைவுறும்.

தினமும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை இம் மாளிகையை பார்வையிடலாம். கிறிஸ்மஸ் தினத்தன்று இம்மாளிகை மூடப்படும்.

நன்னம்பிக்கை முனையின் வரலாறும் வாழ்வும் எவரையும் கவரத்தக்கது. வில்லியம் பெர் சேமிப்பு காட்சியகம் (Willamis Fehr Collection) மற்றும் இம்மாளிகையின் இராணுவ அருங்காட்சியகத்தையும் பார்வையிடும்போது இந்த உண்மை புரியும்.

கடலில் 6 மாதங்கள் பிரயாணம் செய்யும் மாலுமிக்கு காஸில் ஒவ் குட் ஹோப் ஒரு வரவேற்கத்தக்க இடமாகும். கேப் டவுனை 'கடலின் தவறணை' என்றும் குறிப்பிவார்கள்.

கேப் டவுனில் உல்லாச பயணத்துறைக்கு 'காஸில் ஒவ் குட் ஹோப்' பெரும் ஆதரவாக விளங்குகின்றது. கேப் டவுணிலுள்ள இந்த மாளிகைக்கு கேப்டவுண் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து செல்ல 20 நிமிட நேர மோட்டார் வாகனப் பயணம்தான்.

இம்மாளிகையில் இருந்து குதிரை மற்றும் வண்டிச் சவாரிகள் மூலம் திரும்பிச் செல்ல சுமார் ஒரு மணி நேரம் நீடிக்கும். பொழுது மறையும் நேரம் சவாரி வசதிகளும் உள்ளன.

– கங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னேஸ்வரத்தில் காணப்படும் தமிழ்ச் சாசனம் எழுதிய அரும்பொருட்கள்

- கலாநிதி சி. பத்மநாதன் தகைசார் பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,பேராதனைப் பல்கலைக்கழகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெரிய கோயிலின் திருச்சுற்றாலையின் ஓரமாக வைக்கப்பட்டிருக்கும் மஞ்சத்திலே சாசனம் எழுதிய செப்புத் தகடொன்று பதிக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று வரிகளில் மேல் வரும் சாசனம் எழுதப்பட்டுள்ளது.

உ. சிவமயம்

1. நிகழும் கலியாப்தம் 5003 ஆவணி மீ பூர்வபட்ஷம்
2. பௌர்ணமியில் ஸ்ரீ வடிவம்பாள் தீர்த்தோற்
3. சவத்துக்கு நீர்கொழும்பு இ. தங்கம்மா உபயம்.

இச்சாசனத்திலே கலி வருஷத்தைக் குறிக்கும் ஆண்டினைப் பழைய முறைப்படி தமிழில் வழங்கிய, எண்களுக்குரிய அடையாளங்களிற் குறித்துள்ளனர். வடிவழகி அம்மனைத் தீர்த்த உற்சவத்திற்கு கொண்டு போவதற்கு மஞ்சம் நன்கொடையாக வழங்கப்பட்டது. அதனை வழங்கியவர் நீர்கொழும்பில் வசித்தவரான இ.தங்கம்மா என்னுஞ் சீமாட்டியாவார். அவரைப் பற்றிய விபரங்கள் ஆராய்ந்து அறிதற்குரியவை.

பித்தளை தட்டிலே சாசன வாசகத்திலுள்ள எழுத்துகள் நுண்ணிய கருவி கொண்டு அழகாக வெட்டப்பட்டுள்ளன. மெய்யெழுத்துக்கள் என்பவற்றின் மேலே புள்ளி இடப்பட்டுள்ளது.

## மடத்துக் கோயிலும் அங்குள்ள சாசனம் எழுதிய உலோகப் பொருட்களும்

முன்னேஸ்வரம் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள பெருவீதியின் எதிர்ப்புறத்திலே சிறிய கோயில் ஒன்றுள்ளது. அங்கும் நாள்தோறும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. அக்கோயில் மடத்துக் கோயில் என்று சொல்லப்படும். அது சுமார் 108 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. அதன் நிர்மாணம் பற்றிய விபரங்கள் சாசன வடிவத்தின் மேல்வரு மாறு எழுதப்பட்டுள்ளன.

உ சிவமயம்

வடிவழகியம்மை துணை
கொழும்பார் ஸ்ரீ நடராஜர் திருமடம்
திருப்பணி இயற்றிய காலம்
1903 ௵ நவம்பர் மீ 26 திகதிக்குச் சரியான சோபகிருது.
.௵. கார்த்திகை மீ 11 தீ
திருப்பணி செய்வித்தோர்கள்
ஆ. நாகநாதர்
சி. சுப்பையா
சி. கதிரவேற்பிள்ளை
ம.சிதம்பரப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேஸ்வரத்து நடராஜர் திருமடம் என்பதன் நிர்மாணம் பற்றிய ஆவணமென்ற வகையில் இச்சாசனம் தனிச்சிறப்புடையது. அதிலே காணப்படும் விபரங்கள் அடங்கிய வேறெந்த ஆவணமுங் கிடைக்கவில்லை. கட்டடத்தின் பெயர் 'கொழும்பார் ஸ்ரீ நடராசர் திருமடம்' என்று வர்ணிக்கப்படுகின்றது. நடராசர் படிமத்தைத் தாபனம் பண்ணி வழிபடுவதற்கென்று கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதால் அது ஸ்ரீ நடராஜர் திருமடம் என்ற பெயரைப் பெற்றதென்று கருதலாம். அதனைக் கொழும்பில் வாழ்ந்த சிலர் அமைத்தார்கள். அதனாற் கொழும்பார் என்ற சொல் கட்டடத்தின் விசாலமான பெயரின் முதன் மொழியாக அமைந்துள்ளது. திருப்பணி செய்வித்தவர்கள் நால்வர். அவர்களின் பெயர்கள் சாசனத்திற் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முன்னே கவனித்தவாறு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் முன்னேஸ்வரம் கொழும்பில் வாழ்ந்த சைவர்களின் வழிபாட்டிற்குரிய பிரதானமான தலங்களில் ஒன்றாகியது. அங்கு அவர்கள் மிகுந்த பக்தியோடு யாத்திரை போனார்கள். இவ்வாறு போகும் சமயங்களிற் காவடியாடல் போன்ற உப சாரங்களில் ஈடுபட்டனர். இங்கு முதன் முதலாக ஆராயப்படும் சாசனங்களினால் முன்னேஸ்வரத்தின் நவீன வரலாறு ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. கொழும்பில் வாழ்ந்த சைவர்களின் திருப்பணிகளே அதற்கு ஏதுவானவை.

கொழும்பார் ஸ்ரீ நடராஜர் திருமடத்திற் சாசனம் எழுதிய விளக்குகள் இரண்டும் சந்தனக்குச்சி எரிக்கும் தட்டொன்றும் உள்ளன. அவை இன்றும் நாளாந்த வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. விளக்குகள், குத்துவிளக்குகள் பெரிய கோயிலிலுள்ள சாசனம் எழுதிய விளக்குகளைக் காட்டிலும் மிகச் சிறியவை. கனம் குறைந்தவை. அவை ஒவ்வொன்றிலும் மேல்வரும் வாசகங்களில் ஒவ்வொன்று எழுதப்பட்டுள்ளது.

1. உ முனியீசுரம் கொழும்பார் காவடிக்கி கொம்பனித் தெரு சேக்கியம்மா உபையம் 6.9.1905

2. உ முனியீசுரம் கொழும்பார் காவடிக்கி நெங்கம்மா ளுபயம் 6.9.1905

கொழும்பிலுள்ள கொம்பனித் தெருவில் இருக்கும் சேக்கியம்மா, நெங்கம்மாள் என்னும் பெண்கள் ஆளுக்கு ஒவ்வொன்றாக விளக்குகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர். அவை கொழும்பார் காவடிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகின்றது. நன் கொடை அளிக்கப்பட்ட தினம் 6. 9. 1905 என்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே அச்சாசனம் எழுதிய விளக்குகள் இற்றைக்கு நூற்றாண்டுக்கு முற்பட்டவை. அக் காலத்திற் கொழும்பிலுள்ள அடியார்கள் சிலர் முன்னேஸ்வரத்திற் காவடி எடுக்கும் வழக்கம் இருந்தமை இச்சாசனங்களாற் புலனாகின்றது. நன்கொடையாக வழங்கப் பெற்ற விளக்குகள் கொழும்பாரின் காவடியாட்டம் தொடர்பாகப் பயன்படுத்தற்குரியவை.

இவ்விளக்குகளைக் காட்டிலும் காலத்தாற் பிற்பட்ட சந்தனக் குச்சிகளை எரிக்குந் தட்டொன்றில் '**அருணாசலம் சுந்தராநந்தம் 4.9.46**' என்று எழுதப்பட்டுள்ளது. தட்டினை நன்கொடையாக வழங்கியவரின் பெயரே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. நன்கொடையாக வழங்கப் பெற்ற காலமுங் குறிப்பிடப்படுகிறது.

நன்கொடையாக வழங்கப்படும் பலவகையான உலோகப் பொருள்களின் அவற்றைக் கொடுப்பவர்களின் பெயர்களை எழுதுகின்றமை நீண்டகால வழமை என்பதும் அந்த வழமைப்படி 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் அவற்றில் அவ்வாறு எழுதினார்கள் என்பதையும் முன்னேஸ்வரத்திலுள்ள சாசனம் எழுதிய உலோகப் பொருட்கள் மூலம் அறிய முடிகின்றது. அப்பொருட்கள் யாவும் வழிபாட்டிற் பயன்படுத்தற்குரியவை. அவ்வாறான தானங்களைப் புண்ணிய கருமங்களாகக் கொண்டனர். கொழும்பு, நீர்கொழும்பு போன்ற இடங்களிலுள்ள சைவர்கள் அந்நாட்களில் முன்னேஸ்வரம் சென்று வழிபட்டனர் என்பதற்கு இச்சாசனங்கள் சான்றாகும்.

## சாசனங்களின் மொழி நடையும் சொல்வளமும்

இங்கே கவனிக்கப்பெற்ற சாசனங்களின் தொகை குறைந்தது. அவை அளவிலும் மிகச் சிறியவை. ஆயினும் அவற்றிலே காணப்படும் மொழி நடையும் சொல் வடிவங்களும் சம காலத் தமிழ்மொழி வழக்கினையும் அதன் இயல்புகளையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. மொழி நடை பாமரர் வழக்காகும். பொதுவாக இவ்வாறான சாசனங்கள் பொது வழக்கான மொழியிலேதான் எழுதப்படும். அந்த வழக்கும் இடம், காலம் என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும்.

இக்காலத்தில் முன்னேஸ்வரத்திற்கு யாத்திரை போனவர்களிலும் கோயிலுக்கு ஆதரவு புரிந்தவர்களிலும் இந்திய வம்சாவழித் தமிழர் குறிப்பிடத்தக்க அளவினராவர். பிரித்தானியரின் ஆட்சி ஏற்பட்டிருந்த 19 ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கையிலுள்ள பிரதானமான நகரங்களில் ஏற்பட்ட வாணிப, வர்த்தக அபிவிருத்திகளில் இந்திய வம்சாவழித் தமிழரின் பங்கு குறிப்பிடத்தக்கது. செட்டிகளும் வேறு சமூகத்தவரும் புராதனமான தலங்களான திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகியவற்றிலே வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கும் புதிய ஆலயங்கள் பலவற்றை நகரங்கள் பலவற்றிலே நிர்மாணிப்பதற்கும் ஆதரவு வழங்கினார்கள்.

அத்தகைய பணிகளின் விளைவாகச் சைவாலய வழிபாட்டு மரபுகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராதன தலங்களுக்கு யாத்திரை போவோரின் தொகை அதிகரித்தது. கோயில்களை அடிப்படையாகக் கொண்ட நேர்த்திக் கடன்கள் பெருகின. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஆலய தர்மங்கள் தொடர்பான மொழி நடையிலே தென்னிந்தியச் செல்வாக்கு மிகுதல் இயல்பாக ஏற்பட்ட ஒரு மாற்றமாகும்.

வழமையான தமிழ் சொற்கள் எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபடைந்துள்ளன என்பதை இங்கு நிரல்படுத்திக் காட்டுவது அவசியமாகும்.

| வழமையான சொல் வடிவம் | இச்சாசனங்களில் காணப்படும் வடிவம் |
|---|---|
| 1. கொழும்பு | - கொளும்பு |
| 2. தட்டார் தெரு | - தட்டார் தெருவு |
| 3. முன்னேஸ்வரம் | - முன்னேஸ்பரம், முனீஸ்பரர், முநியீஷ்சுபறம்,முனியீசுரம் |
| 4. வடிவழகி அம்மன் | - வடிளகி அம்மன், வடிவழகி அம்பாழுக்கு |
| 5. வெள்ளிக்கிழமை | - வெள்ளிக்கிளமை |
| 6. கிருஷ்ணபிள்ளை | - கிஷ்ட்ணபிள்ளை |
| 7. பூர்வ பக்ஷம் | - பூர்வபட்ஷம் |
| 8. உபயம் | - உபையம் |

கொழும்பு என்ற சொல்லில் 'ழு' என்னும் எழுத்திற்குப் பதிலாக 'ளு' என்பதை எழுதியுள்ளனர். அது ழகர ளகர மயக்கத்தினால் ஏற்பட்டது. அந்த மயக்கம் தமிழ்மொழி வழக்கிலே பொதுவானது. இரண்டாவது சொல்லிலே 'தெரு' என்பதைக் 'தெருவு' என்று எழுதியுள்ளனர். அது சம கால அந்நியத் தமிழ் வழக்கின் செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றது.

முன்னேஸ்வரம் என்னும் தலப்பெயரை எந்த விடத்திலுஞ் சரியாக எழுதவில்லை. அதனை மாறுபாடாக நான்கு விதத்தில் எழுதியுள்ளனர். சாசனங்கள் எழுதிய உலோகப் பொருட்கள் வெவ்வேறு காலங்களுக்கு உரியவை. அவற்றிலே வாசகங்களை எழுதிய தொழில் வினைஞரும் வெவ்வேறானவர்கள். அவர்கள் தலப் பெயரை வெவ்வேறு விதமாக எழுதியுள்ளமை ஓரளவு வியப்பிற்குரியதாகும். ஒரு பிரசித்தமான தலத்தின் பெயரை ஒரே விதமாக அவர்களால் எழுதமுடியவில்லை. அவர்கள் இலக்கிய வாசனையற்ற பாமரராதல் வேண்டும். பாடசாலைக்குச் சென்று படிக்கும் வசதிகளைப் பெறாதவர்கள் போலும். முன்னேஸ்பரம் என்ற வடிவத்தில் வகரம் பகரமாகி விட்டது. முனீஸ்பரர் என்பது முன்னேஸ்வரத்திலே பள்ளி கொண்ட உடையாரைக் குறிப்பது. அது முனீஸ்பரம் என்ற வடிவின் அடிப்படையில் உருவானது. முநியீஷ்சுபறம் என்பதிற் பல எழுத்துகள் விகாரமாகி விட்டன. 'னி' என்னும் இரண்டாவது எழுத்தை 'நி' என்றும் 'ஸ்' என வரக்கூடியதை 'ஷ்' என்றும் வரம் என்பதைப் பறம் என்றும் எழுதியுள்ளனர். இந்த வடிவம் தலப்பெயரின் மிக விகாரமான கோலமாகும்.


வடிவழகி அம்மன் என்று வழமையாக வரும் பெயரில் ழகரம் ளகரமாகி வடிவளகி அம்மன் என்னும் தொடர் உருவாகியுள்ளது. இந்த மாற்றம் வழமைபோல ழகர ளகர மயக்கத்தால் ஏற்பட்ட ஒன்றாகும். ஓரிடத்திலே வடிவழகி என்பதைச் சரியாக எழுதிவிட்டு, அதனைத் தொடர்ந்து வரும் சொல்லை அம்பாழுக்கு என எழுதியுள்ளனர். இங்கே 'ளு' என்ற எழுத்து 'ழு' ஆகிவிடுகின்றது. வெள்ளிக் கிழமை என்ற நாட்பெயரிற் கிழமை என்பது கிளமை என்று எழுதப்பட்டுள்ளது.

கிருஷ்ணபிள்ளை என்ற பெயர் கிருஷ்ண, பிள்ளை என்னும் இரு பகுதிகளை உடையது. கிருஷ்ண என்பது சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். அதைச் சரியாக எழுத்துக்கூட்டி, உச்சரிக்க முடியாதமையால் அது கிஷ்ட்ண என விகாரமாகியுள்ளது. பூர்வ பக்ஷம் என்பதற்குப் பதிலாக பட்ஷம் என்று எழுதியுள்ளனர். பூர்வபக்கம் அல்லது பூர்வபட்சம் என்று எழுதுவது பொதுவழக்கு. உபயம் என்ற சொல் சாசனங்களிலே உபையம் என்ற வடிவத்தில் வருகின்றது. தானங்களை உபையம் என்று குறிப்பது சாசனங்களில் வாழமையாகிவிட்டது.

**அடிக்குறிப்புகள்**

1. பா. சிவராமகிருஷ் சர்மா, ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு, கொழும்பு, 1968
2. இராவண சங்காரத்தின் பின்பு, இராமபிரான் புஷ்பக விமானத்தில் ஏறி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தியாபுரிக்குச் செல்லப் புறப்பட்டார். சீதாபிராட்டியாரும் இளைய பெருமாளும் விபிஷணனும் பரிவாரத்தாரும் அவர்களோடு சென்றனர். இராவணனைக் கொன்ற பாவத்தினால் ஏற்பட்ட பிரமகத்திதோஷம் கரிய நிறமான முகில் வடிவமாகி விமானத்தைத் தொடர்ந்து சென்றது. முன்னேஸ்வரத்தை அடைந்ததும் அந்த வடிவம் மறைந்து விட்டது. அதனை அவதானித்த இராமபிரான் தலத்தின் மகிமையை உணர்ந்து தரையிறங்கினார். அங்குள்ள தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணியதும் பாவவிமோசனம் கிடைத்த உணர்வினைப் பெற்றார்.

அங்கு அவர் சீதாபிராட்டியோடு ஆலயப்பிரதக்ஷிணம் செய்த வேளையில் வடிவாம்பிகையின் வடிவுகொண்ட அம்பாளோடும், நந்தி, பிருங்கி ஆகிய முனிவர்களோடும் சிவபிரான் தோன்றி அவர்களுக்கு அருள் வழங்கினார். தனது பிரமகத்தி தோஷத்தைப் போக்குமாறு இராமபிரான் வேண்டியதும் மாயவனாற்றுக்கு வடக்கிலே, முன்னேஸ்வரத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யுமாறு இறைவன் பணித்தார்.

ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம், பதிப்பு மு. சோமாஸ்கந்த குருக்கள்,
முன்னேஸ்வரம் தேவஸ்தானம், 1927

3. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்னும் தலங்களிலுள்ள புராதனமான கோயில்களை 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளிற் போர்த்துக்கேயர் அழித்து விட்டனர். அவற்றிலே, ஏறக் குறைய 300 வருடங்கள் கழித்த பின்பே கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டன. ஆனால் முன்னேஸ்வரம் 18 ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னனாகிய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்திலே புனர்நிர்மாணம் பெற்றது. ஒல்லாந்தரின் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே கண்டி அரசர் முன்னேஸ்வரத்தைக் கைப்பற்றி விட்டனர்.

4. ஆறாம் பராக்கிரமபாகு முன்னேஸ்வரத்துப் பிராமணரில் முதன்மையானவர்களை ஜயவர்த்தன கோட்டைக்கு அழைப்பித்துக் கோயில் விடயங்களைப் பற்றி விசாரணை பண்ணி, நிலங்களை மானியமாகக் கொடுத்தான். முன்பு பிராமணர் வசமாயிருந்த நிலங்களைத் தேவதானமாக மாற்றி அவர்களுக்குப் பூஜைக்காணியாக இலுப்பதெணியில் 22 அமணமும் கோட்டைப்பிட்டியில் 30 அமணமும் தித்தக்கடையில் 8 அமணமும் வழங்கினான். கோயிலில் நாள் வழிபாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அரசன் செய்தான். அதனைப் பற்றிய விபரங்கள் மூலஸ்தானத்தின் அதிஷ்டானத்திலே சாசனமாக எழுதப்பட்டுள்ளன.

பராக்கிரமபாகு என்னும் பெயருடைய வேறொரு அரசன் சாலிவாகன வர்ஷம் 1435 இலே (கி.பி 1513), ஐந்து கிராமங்களிலுள்ள 140 அமணம் நிலத்தை முன்னேஸ்வரத்துப் பிராமணப் பண்டிதர்களுக்கு வழங்கிச் செப்பேடு எழுதிக் கொடுத்ததாகச் குறிப்புண்டு.· பதினெட்டாம் நூற்றாண்டிலே கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 - 1784) என்னும் நாயக்க மன்னன் கரவெட்டி, இலுப்பதெணி, பிராமணன்தளுவாய், கன்னங்கட்டி, மடத்துவெளி, புதுக்குடி, முதலியார் தளுவாய், பிரப்பங்குழி, நல்லநாயகன் வெளி, மறவன் வெளி, குளத்தளுவாய், ஒலியத்தளுவாய் என்னுமிடங்களிலுள்ள 32 அமணம் வயல் நிலங்களை முன்னேஸ்வரம் கோயிலுக்குத் தானம் பண்ணிச் சாசனம் எழுதிக் கொடுத்தான். அச்சாசனம் சாலிவாகன சகாப்தம் 1675 (கி.பி. 1753) ஸ்ரீ முக வர்ஷம் ஆவணி மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எழுதப்பட்டது.

சிவராமகிருஷ்ண சர்மா, ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு, 1968, பக் 61, 62; N.Somakanthan, "Munnesvaram" Hindu Temples of Srilanla ed. S.Pathmanathan, Kumaran Book House, Colombo - Chennai 2006, Pp. 252 - 262 - 254, 262 - 264

5. Hindu Temples of Sri Lanka, 2006, P. 259

6. S. Pathmanathan, "The Munnesvaram Tamil Inscription of Parakramabahu VI", Journal of the Royal Asiatic Society (Ceylon Branch) New Series Vol:18, Colombo 1976, Pp. 54 – 59

7. மூலஸ்தானத்துப் புறச்சுவர்களில் அமைந்துள்ள தேவகோட்டைச் சிற்பங்கள் மிகவும் பழைமையானவை, விஜயநகர காலத்துக் கலைப்பாணியில் அமைந்தவை. அவை கலை வனப்பில் உன்னதமானவை. அவற்றுக்கு நிகரான தேவகோட்டைச் சிற்பங்கள் இலங்கையில் வேறெங்கும் காணப்படவில்லை. ''இக்கோயிலில் பூஜிக்கப்பட்டு வரும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், நடராசர் போன்ற கலையழகுமிக்க விக்கிரகங்கள் இங்கிருந்ததொரு பழைய தூர்ந்து போயிருந்த கிணற்றிலிருந்து, பன்னெடுங் காலத்துக்கு முன் கண்டெடுக்கப் பெற்றவை என்பர். அவை போர்த்துக்கேயர் கோயிலை இடித்த சமயத்திலே அடியார்களினால் அவற்றின் பாதுகாப்புக் கருதிக் கிணற்றில் வீசப்பட்டிருத்தல் வேண்டும். முன்னேஸ்வரத்திலே இப்பொழுது வழிபாட்டுக்குரியனவாக அமைந்நதுள்ள வேறு சிற்பங்களிற் பல, கோயில் புனரமைக்கப்பட்ட காலத்தில், 18 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். முன்னேஸ்வரத்திலுள்ள உலோக படிமங்களில் பிச்சாடனர், நடராசர், வடிவழகியம்மன் ஆகியோரின் பிரதிமைகளும் சாலவும் சிறந்தவை. அறுபத்து மூவரின் உலோகப் படிமங்கள் இலங்கையில் முதன் முதலாக முன்னேஸ்வரத்திலேயே வைக்கப்பட்டுள்ளன.''

சிவராமகிருஷ்ண சர்மா, ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு, 1968, ப. 12.


8. உபயம் என்பது இரண்டு, உபகாரம், கோயிற் காணிக்கை, மகமை என்னும் பொருள்களைக் குறிக்கும். உபயம் என்பது இங்கு உபையம் என்று பிழையாக எழுதப்பட்டுள்ளது. உபையம் என்பது அகராதிகளில் இடம்பெறாத வடிவம் மதுரைத் தமிழ்பேரகராதி முதலாம் பாகம்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியிட்டது. மதுரை, திருநெல்வேலி, சென்னை, 1956 , ப. 338.

9. பாகனூர்க் கூற்றம் என்பது பாண்டி நாட்டு நிலப்பிரிவுகளில் ஒன்று. அது மதுரைக்கு அண்மையில் அமைந்திருந்தது. அதனைப்பற்றி பல சாசனங்கள் குறிப்பிடுகின்றன. மேல்வருவன அவற்றுட் சிலவாகும்

1. பாகனூர்க் கூற்றத்துப் பெருந் தேனூர்த்திருமேற்றளிப் பட்டாரகர்க்கு....
2. பாகனூர்க் கூற்றத்துப் பிரமதேயம் திருமானத்துப் பெருந் திருக் கோயில்
3. பாகனூர்க் கூற்றத்து பிரமதேயம் ஸ்ரீ சோழாந்தக சதுர்வேதிமங்கலம்
4. பாகனூர்க் கூற்றத்துப் சோழாந்தகச் சருப்பேதி மங்கலத்து ஸ்ரீ கோயிலின் உள்ளாலை அழகிய பாண்டியன் கூடத்துப் பன்னிக்கட்டில் பாண்டியராசனில் எழுந்தருளியிருந்து....

South Indian Inscriptions Vol. XIV, The Pandyas ed. A. S. Ramanatha Ayyar, Madras, 1962, Pp. 39, 44, 113, 162





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பல்கலைவாணி பானுமதி

இளம் பருவத்திலேயே கர்நாடக சங்கீதத்தில் திறமையுடன் மிளிர்ந்த தந்தையார் பொம்மராஜு வெங்கட சுப்பையாவிடம் வரன் முறையாக கர்நாடக இசையைக் கற்று இசைத்துறையில் சிறந்த பாடகியாக முத்திரை பதித்ததோடு, திரை இசைப் பின்னணிப் பாடகியாக, இசையமைப்பாளராக, இயக்குனராக, கதாசிரியராக, தலைசிறந்த நடிகையாக, தலைசிறந்த நிர்வாகியாகப் பல்துறைகளிலும் ஆளுமைத் திறன்மிக்க பெண்மணியாக விளங்கியவரே பல்கலைவாணி எனும் அடை மொழிக்கு மிகப் பொருத்தமானவரான டாக்டர் பானுமதி அவர்கள்.

ஆந்திராவில் ஒங்கோரி என்ற ஊரில் பிறந்தவர்களான பொம்மராஜு வெங்கட சுப்பையாவும், இவரது மனைவி சரஸ்வதி அம்மாவும் பானுமதி 13 வயதுச் சிறுமியாக இருக்கும் போதே அவரது இனிய குரல் வளத்தை மேம்படுத்தும் முகமாக இசை கற்றுக் கொடுத்தாலும், தமது அருமை மகள் உயர்கல்வி கற்று ஒரு வக்கீலாக வர வேண்டு மென்றே பெரிதும் விரும்பினர். அதேவேளை தம்மிடம் கற்ற இசையைத் தேன் குரலில் பொழிந்து தள்ளும் மகளின் பாடல்களை எச்.எம்.வி. நிறுவனத்தில் பதிவு செய்யும் நோக்கத்துடன் தந்தையார் மகளைச் சென்னைக்கு அழைத்து வந்தார்.

அதே காலகட்டத்தில் பிரபல பட இயக்குனர் புல்லையா தனது புதிய 'துரவிக்ரயம்' எனும் தெலுங்குப் படத்தில் நடிப்பதற்கு புதுமுகம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தார். இவர்களைச் சந்தித்ததும் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து விட்டதே என எண்ணி அவர் குதூகலித்தார்.

ஆனால் பானுமதிக்கோ நடிப்பதில் சிறிதுமே நாட்டமிருக்கவில்லை. தந்தையாரோ இதைக் கேட்டு சீற்றம் கொண்டார். அவரது குரு மைனப்பட்டி நரசிம்மராவ் இவரைச் சமாதானப்படுத்தி மகளை நடிக்க அனுமதி கொடுக்குமாறு வற்புறுத்தினார். தன் குரு வழிகாட்டவும் தந்தையாரும் உடன்படவும் பானுமதியின் திரையுலகப் பிரவேசம் தொடங்கியது.

இளமையிலிருந்தே ஒருவர் பாடியதைக் கவனித்துக் கொண்டிருந்துவிட்டு அப்படியே அவ்வினிய இசையைத் தன் குரலில் ஏற்றி வெகு சிறப்பாகப் பாடும் இசை ஞானத்தைக் கடவுள் அருளால் பானுமதி பெற்றுக் கொண்டதை நன்கு கவனித்த தந்தையார் தம்மகள் கர்நாடக இசைத் துறையில் நிபுணத்துவம் மிக்கவராக வளர ஏற்ற வழி வகைகளைக் கையாண்டார். அதற்காகத் தன் மகளின் நடிப்பு இடம்பெறும் ஒவ்வொரு படத்திலும் குறைந்தது ஒரு தியாகராஜர் கீர்த்தனையாவது அவர் பாட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சத்தியவாக்கு பெற்றிருந்ததனால் பானுமதியும் தந்தையின் விருப்பத்தை ஈடுசெய்தே மகிழ்ந்தார்.

தொழில் நுட்பங்கள் பெரிதாக வளர்ச்சி கண்டிராத அக் காலத்திலே திரைப்படத்தில் இனிய குரல் வளத்தோடு பாடல்களை இசைப்பதுடன் அழகிய தோற்றப் பொலிவோடு நடிப்பில் திறமை காண்பிக்கவேண்டிய அவசியமும் எதிர்பார்ப்பாக அமைந்தது. இவற்றிற்கு எல்லாம் மிகப் பொருத்தமாகவே மருட்சியும், கவர்ச்சியும், மிகுந்த கண்ணழகும், சிவந்த உயரமான லாவக தோற்றப் பொலிவும், இனிய குரல் வளமும், அழகிய தெளிவான உச்சரிப்புடன் கூடிய பேச்சாற்றலும் மிக்க பானுமதி திரைப் படத்திற்கு மேலும் எழிலூட்டும் ஓவியமாகவே அமைந்து விட்டார். இது எல்லோரையும் மனத் திருப்தியிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. நடிகர் திலகம் சிவாஜியின் நடிப்புத் திறனைப் புகழ்ந்து பேசுவோர் ''சிவாஜியின் முகம் மட்டுமல்ல நகம் கூட நடிக்கும் சிறப்பைக் கொண்டது'' என்பது போலவே கலைவாணி பானுமதியின் உருவம் மட்டுமல்லப் புருவமுமே அற்புதமான நடிப்பின் சிகரத்தைத் தொட்டு நிற்கும் எனத் துணிந்து கூறலாம்.

'கிருஷ்ணப் பிரேமா' என்ற படத்திலே பானுமதி நடித்துக் கொண்டிருந்தபோது அப்படத்தின் உதவி இயக்குனராகப் பணிபுரிந்தவர் ராமகிருஷ்ணராவ் என்ற அழகிய இளைஞர். ராமகிருஷ்ணராவின் போக்கும் பழகும் பாங்கும் பானுமதியை வெகுவாகக் கவரவே அவர் ராமகிருஷ்ணராவை மன ஈடுபாட்டோடு நேசித்தார். நேசிப்புக் காதலாக மலரவும் இருவருமே பெற்றோரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் 1943ஆம் ஆண்டு ஆவணி மாதம் எட்டாம் நாள் திருமணத்தைச் சிறப்பாகச் செய்து குடும்ப வாழ்வில் இணைந்து கொண்டனர்.

ஆந்திராவில் கிராமச் சூழலில் அன்பும் அருமையுமாகப் பேணி வளர்த்த பெற்றோரின் அன்பு, பாசம், அரவணைப்பு, பெண் குழந்தையைப் பிரச்சினைகளிருந்து தவிர்க்கப் பாடசாலைக்குச் செல்லும்போதே மாட்டு வண்டியில் பள்ளிக்கு அனுப்பி வைத்தமை திரைப்படக் காட்சிகள் போலப் பழைய நினைவுகள் பானுமதியின் மனதில் நிழலாடத் தொடங்கின. எனவே தம் இருவரது மனமும் ஒன்றுபட்டு இல்லற வாழ்வைத் தொடர்ந்தாலும் இனிமேல் திரையில் நடிப்பது பாடுவது என எல்லா வற்றிற்குமே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டுமெனப் பானுமதி தீர்மானம் செய்தார். அதன் பிரகாரம் ஒரு கார் பழுது பார்க்கும் கராஜ் ஒன்றின் மேல் தளத்திலுள்ள ஒரு சிறிய வீட்டை வாடகைக்கமர்த்தித் தம் இல்லற வாழ்வை ஆனந்தமாகவும் ரசித்து மகிழக் கால்கோள் இட்டனர். நடிப்பிற்கும் திரையோடிணைந்த பணிகளுக்கும் முற்றுப்புள்ளி இடும் நோக்கத்துடனே இல்வாழ்வைத் திட்டமிட்டுச் சமையல், வீட்டு நிர்வாகம், விருந்தோம்பல் என்பவற்றில் கூடிய கண்ணோட்டம் செலுத்தினர்.

எத்தனை தான் சாதாரண குடும்ப வாழ்க்கையோடு ஒட்டியவாறு வாழத்தலைப்பட்டாலும் ராமகிருஷ்ணராவின் தொழில், திறமை மற்றும் இயல்பாகவே திரைப்படத் தொழிலோடு சம்பந்தமாக துருத்திக் கொண்டிருக்கும் பானுமதியின் கலையம்சங்கள் யாவும் ஒன்று சேர்ந்து திரைப்படத் துறையை நோக்கியே இவர்களது நாட்டம் உந்தியது. ஏனைய திரைப்படத் தயாரிப்பாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள் எனப் பலரும் இவர்களைத் தம் துறைக்கு ஊட்டம் கொடுக்குமாறு உற்சாகப்படுத்தி அழைக்கவும் இவர்களும் விருப்போடு இசைந்து கொண்டனர்.

ஒரு சிறிய இடைவெளியின் பின்னர் பானுமதி நடித்து வெளிவந்த 'சுவர்க்க சீமா' என்ற படம் பலத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பையும் வெற்றியையும் ஈட்டிக் கொடுத்தது. இப்படத்திலே பானுமதி ஏற்றுக் கொண்டு நடித்த பாத்திரத்தின் வெளிப்பாடான நடிப்பும் அவரது மதுரக் குரலில் ஒலித்த பாடல்களும் எல்லோர் மனதையுமே கொள்ளை கொண்டு விட்டன. பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் அவரை நோக்கிக் குவிந்தன.

நடிப்பிலும் இசையிலும் தன் மனைவியின் உச்ச நிலையை உணர்ந்து கொண்ட அவர் கணவரே மனைவியின் ஆற்றலை வியந்து நோக்கினார். மேன்மேலும் அவருடைய திறமையை ஊக்கவிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அதன் பிரகாரமே சிறந்த கலைத்துவமும் கூர்மையான தொழில் நுட்பங்களும் பொதிந்த ஆங்கில ஹிந்திப் படங்களை எல்லாம் ரசனையோடு பார்த்து நுணுக்கங்களைக் கவனமாக அவதானிக்கத் தூண்டினார். இயல்பிலேயே இத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் மிக்க கலைவாணி பானுமதிக்கு இவையெல்லாம் மிகுந்த சுவையான பயிற்சியாகவும் அனுபவமாகவும் ஆகின. சந்தர்ப்பம், சூழ்நிலை வேட்கை, திறமை என்பனவெல்லாம் ஒன்று திரண்டதன் பெறுபேறே ஒரு பெண் கதாசிரியை, திரைக்கதை வசன எழுத்தாளர், இயக்குனர் எனத் பல்துறை ஆற்றல்மிக்க பெண் இயக்குனரின் காத்திரமான திரைப்படத்துறை அறிமுகமாகும்.



இவை தவிரக் கலைவாணி பானுமதியிடம் சாதாரண பெண்களை விட அதீத தைரியமும் தன்னம்பிக்கையும் இயல்பாகவே குடி கொண்டிருந்ததோடு பெண் பெருமையாகப் பேசப்பட வேண்டியவள் என்ற கருத்தும் முனைப்புப் பெற்றிருந்தது. 'இப்படியும் ஒரு பெண்' என்ற பெயரில் தனது மன உணர்வுகளையும் தனது எண்ணத்தில் முகிழ்ந்துள்ள இலட்சியப் பெண்ணையும் கருவாக்கி, வடிவமைத்து ஒரு திரைப்படத்தை உருவாக்கி வெற்றியும் கண்டார். ஒரு திரைப்படம் வெளிவருவதற்கான சகல அம்சங்களையும் தனது கைவண்ணத்தாலே உருவாக்கி உழைத்த முதலாவது பெண்மணி என்ற சிறப்பும் கலை வளம் பொருந்திய இக்கலைவாணிக்கே உரியதாகும்.

இவரது இனிய இல்வாழ்வின் பெறுபேறாகப் பிறந்த மகனுக்கு பரணி எனப் பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர். பரணியின் பெயராலேயே பரணி மருத்துவமனை, பரணி ஸ்டுடியோ என்பனவெல்லாம் ஸ்தாபிதமாயின.

கலைவாணியாகத் திகழ்ந்த பானுமதி திரை நட்சத்திரமாகப் பிரகாசித்ததோடு எழுத்தாளராகவும் தன்னை இனங்காட்டிக் கொண்ட சிறப்பை உடையவர். 'எனக்குள் நான்' என்ற தலைப்பில் தனது சுயசரிதையைத் தமிழில் எழுதித் தொலைக்காட்சிப் படமாக வெளியிட்டார். இதனைத் தெலுங்கில் 'நாலோ நேனு' என்ற தலைப்போடு படமாக வெளிக் கொணர்ந்தார்.

இவர் எழுதிய 'அந்தகாரு காதலு' என்ற நகைச்சுவை பொருந்திய சிறுகதைத் தொகுதிக்கு ஆந்திரப் பிரதேசம் சாகித்திய அக்கடமி விருது வழங்கி கௌரவித்தது. மாமியார் மருமகள் தொடர்பான நகைச்சுவை விருந்தளிக்கும் இச் சிறுகதைகள் தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டுத் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளி வந்தபோது பெரும் பரபரப்பையும் வரவேற்பையும் பெற்றிருந்தன.

ஆந்திர பல்கலைக்கழகமும், வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகமும் கலைவாணி பானுமதி ராமகிருஷ்ணராவுக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துப் பாராட்டி மகிழ்ந்தன.

1966 இல் இந்திய அரசு இவருக்குப் 'பத்மஸ்ரீ' என்ற பட்டத்தை அளித்துப் பெருமை சேர்த்தது. தமிழ்நாடு இயல் இசை நாடக சபை 1984 ஆம் ஆண்டு 'கலைமாமணி' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது. பெண்கள் இதுவரை காலமும் அடியெடுத்து வைக்கத் தயங்கிய, நுழைந்து பார்க்கப் பின்வாங்கிய துறைகளில் எல்லாம் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் நுழைந்து வெற்றிவாகை சூடி பெண்ணால் எதுவும் முடியும் என்ற திடமான முடிவை நிரூபித்த கலாவாணி பானுமதி தனது 80ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**- பத்மா சோமகாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய குரவைக் கூத்தும் இன்று மட்டக்களப்பின் குரவையிடலும்

சமூக நிகழ்வுகளிலும், சமயச் சடங்குகளிலும் குரவைக் கூத்து இடம்பெற்றமையை சங்ககால நூல்களிலும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்றவற்றிலும் அறிய முடிகின்றது.[1] பண்டைக்கால குரவைக் கூத்து என்பது குரவைப்பாடலுடன் இணைந்த ஒரு வகையான ஆடல் என அறியமுடிகிறது. பண்டு ஆண்களும் பெண்களும் இணைந்து குரவைப்பாடல் பாடி தாளத்திற்கு ஏற்ப ஆடி மகிழ்ந்தனர் என இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். சிலப்பதிகார அடியார்களுக்கு நல்லார் உரை ஆண் பெண் இருபாலரும் குரவைக்கூத்து ஆடினர் எனக் கூறுகிறது.[2]

ஆண்களும் பெண்களும் குரவைக்கூத்து ஆடினார் என்பது ஒரு புறமிருக்க பெண்கள் மட்டுமே ஆடினார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் காணக் கூடியதாக உள்ளன. நெய்தல் நிலப்பெண்கள் குரவைக் கூத்தாடினார்கள். இடையர் குலப் பெண்கள் குரவைக் கூத்தாடினார்கள். சிலப்பதிகாரம், கண்ணகி - வழக்குரையில் கண்ணகியை துதி செய்து குன்றக் குறவரின் மகளிர் இடைச்சேரியில் குரவைக் கூத்தாடினார்.[3] எனவே சங்கச் செய்யுள்களில் ஆண்களும் பெண்களும் குரவைக்கூத்தாடியமையும், பின்னால் வந்த சிலப்பதிகாரம் போன்ற இலக்கிங்களில் பெண்கள் மட்டுமே குரவைக் கூத்தாடினர் என்பதையும் அறியமுடிகிறது.

### குரவைக்கூத்தின் வகைகளும் - தாழமும்

பழந்தமிழ் இலக்கியங்களிலே குரவை, குரவையாடல், குரவையார்த்தல், குரவை நாடகம், குரவைக் கூத்து எனப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குரவைக் கூத்தினை வினோதக் கூத்துகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வினோதக் கூத்து என்பதாவது குரவை, கலிநடம், குடக் கூத்து ,கரணம், நோக்கு, தோற்பாவை எனப்படும். இதனை அடியாருக்கு நல்லார் தெளிவாகக் கூறியுள்ளார்.[4] குரவைக் கூத்து, பாட்டாக எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் பிணைந்தாடுவது எனப்பட்டது.

*'குரவை யென்பது கூறுங்காலைச்*
*செய்தோர் செய்த காமமும் விறலும்*
*எய்தவுரைக்கு மியல்பிற் என்ப'* - எனவும்
*'குரவையென்ப எழுவர் மங்கையர்*
*தன் நினைக் கொப்ப நின்றாடலாகும்'*

எனவும் கூறப்படுகிறது.[5] எனவே தாளத்திற்கேற்ப கை கோர்த்து ஆடல் குரவைக் கூத்து என்றே மதுரைக் காஞ்சி கூறுகிறது. தொல்காப்பியத்திலே முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என்று கூறப்படுகிறது. துணங்கைக் கூத்து கைக்கோர்த்து ஆடப்படுவதாகும். துணங்கைக் கூத்திலே சேர மன்னன் ஒருவன் கைதேர்ந்தவனாகக் காணப்பட்டானாம். அதனால் அவன் ஆடுகோட் சேரலாதான் என அழைக்கப்பட்டான். சங்க காலத்திலே நிலவிய குரவைக்கூத்து இன்றும் தொடர்கிறது. சற்று மாறுபட்டதாக.

### மட்டக்களப்புக் கிராமங்களில் குரவை போடல்

பண்டு குரவைக் கூத்து எனப்பட்டது மருவி அதன் பண்பு மட்டும் இன்று மட்டக்களப்பு கிராமங்களில் தொடர்கிறது. அம்மன் கோயில்களுக்கு குரவை போடும் மரபு உள்ளது. சங்ககாலத்தில் கொற்றவை கோயில்களில் குரவைக் கூத்து ஆடிய மரபின் திரிபே இன்றைய அம்மன் கோயில்களில் குரவையிடும் பண்பு எனலாம். அன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல் இடம் பெற்றது. இன்று ஆடற்குரலோசை மட்டும் எழுப்பப்படுகிறது. பாடலும் மறைந்து விட்டது. அன்றைய பாடலின் இசை மட்டுமே எஞ்சியுள்ளது.

மட்டக்களப்பு அம்மன் கோயில்கள் மற்றும் முருகன் கோயில்களில் குரவை இடும் வழக்கம் இன்றும் உள்ளது. இன்று குரவை போடுதல் எனப்படும் பூசை நடைபெறும் போது, தீபங்கள் காட்டப்படும் வேளை குரவை ஒலி இனிமையாக ஒலிக்கும்.

### அம்மன் ஆலயங்களில் குரவை ஒலித்தல்

மட்டக்களப்புக் கிராமங்களிலே வைகாசிப் பூரணையில் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறும். கலியாணச் சடங்கிற்கு முன் கலியாணக் கால்வெட்ட போகும் போதும் வெட்டிக் கொண்டு வரும் போதும் குரவை இடம்பெறும். பின்பு கோவலனுக்கும் கண்ணகி அம்மனுக்கும் கலியாணம் நடக்கும். இது 'கலியாணப்படிப்பு' எனப்படும். குரவை சத்தம் ஓங்கி ஒலிக்கும். மறுநாள் குழத்திச் சடங்கு நடைபெறும். அம்மனை வெளியில் கொண்டு வரும் போதும் மீண்டும் உள்ளே கொண்டு செல்லும் போதும் குரவை ஒலியே எழும்பி நிற்கும். கண்ணகிக்கு முதல் முதல் குரவைபோட்டு ஆராதித்தவர்கள் குன்றக்குரவர் பெண்களாகும். மேலும் கண்ணகி கோயில்களில் இடம்பெறும் பூம்பந்தல் கொண்டுவரல், தோரணம் ஏந்துதல், நேர்த்திக்கடன், காவடிகளின் வருகை, பட்டுக் கொண்டு வருதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளின் போதும் குரவை ஒலிக்கின்றது.

### முருகன் ஆலயங்களில் குரவை ஒலித்தல்


மட்டக்களப்பு கிராமங்களில் முருகன் கோயில்கள் தோறும் குரவை போடும் மரபு உள்ளது. முருகன் கோயில் சூரன்போரில் இறுதியில் வெற்றி சூடிய மகிழ்ச்சியின் எதிரொலியாக குரவை ஒலி ஓங்கி ஒலிக்கும். முடிவில் முருகனுக்கும் வள்ளிக்கும் நடைபெறுகின்ற திருமணத்தை 'கலியாணபடிப்பு' என்பர். இதனை பண்டு குரவைத் திருநாள் என்றே கருதினர். பின்னர் இடம்பெறும் தெய்வானை அம்மன் திருமணம், பொற்சுண்ணம் இடித்தல், திருஊஞ்சல் எல்லாவற்றிலுமே குரவை முக்கியமாக இடம்பெறும். சமயச் சடங்குகளில் இடம் பெறும் குரவை தெய்வத்தை மகிழ்வித்து தெய்வ அருளைப் பெறவே நிகழ்த்தப்படுவதாகும். 'குரவை' என்ற தமிழ்ப் பதம் சில இடங்களில் 'குலவை' எனவும் வழங்குவதை காணமுடியும்.

### குரவை வழக்கிலிருக்கும் சமூக நிகழ்வு

மட்டக்களப்பு கிராமப்புறங்களில் அருகிவரும் இக் குரவை போடும் கலையானது இன்றும் சில சமூகங்களில் இழையோடுவதைக் காணமுடிகிறது. அவை வருமாறு (அ).பெண்கள் பூப்படையும் போது (ஆ).பூப்படைந்த பெண் வீட்டுக்கு பிட்டுக் கொண்டு போகும் போது (இ).பூப்புநீராட்டு விழாவின்போது (ஈ).மாப்பிளை அழைத்து வரும் போது (உ). மாப்பிள்ளையை வரவேற்கும் போது (ஊ). தாலிகட்டும் போது (எ). கால்மாறிப் போடும் போது (ஏ). கூத்திற்கு சலங்கை கட்டுதல் (ஐ). கண்ணகை அம்மன் சடங்குகளில் (ஒ). முருக வழிபாட்டுக் கோயில் சடங்குகளில் (ஓ). வேறு சமய சமூக நிகழ்வுகளில்

### பூப்பு நீராட்டு விழாவும் - குரவை போடலும்

பெண் பிள்ளை பூப்பெய்தியமையை கண்டவுடன் குரவையிட்டு அயலிலுள்ள பெண்களை அழைத்து, இப்பெண்களும் சேர்ந்து குரவையிட்டு செய்தியை வெளிப்படுத்தும் ஒரு முறை இன்றுவரை உள்ளது. அதோடு சேர்ந்ததாக 'சீன வெடி' கொளுத்தும் முறையும் உள்ளது. பூப்படைந்த பெண்ணுக்கு 'கண்ட தண்ணி வார்த்த' எனக் குறிப்பிடுவர். பெண்களாலே இந்நிகழ்வு நிகழ்த்தப்படும். உறவுமுறை பெண்கள் அனைவரும் வந்து சேர்ந்து மாமி முறையான கணவன், தலைப்பிள்ளை உள்ள பெண் தண்ணீர் ஊற்றி நிகழ்வை நடத்துவர். அப்போது ஏனைய பெண்கள் சுற்றி நின்று குரவை இட்டு மகிழ்வர். தண்ணீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்துமுடிய ஆடை அணிந்து வீட்டுக்குள் நுழையும்போது வாசலில் வைத்து கண்ணூறு கழிப்பதற்காக ஆரத்தி எடுக்கப்படும். அப்போதும் குரவை இடப்படும்.

**பூப்பெய்திய வீட்டுக்கு பிட்டு கொண்டு போதல்**

பூப்பெய்திய (சமைந்த) வீட்டுக்கு பிட்டு அவித்துக் கொண்டு போகும் ஒரு நடைமுறை கிராமப்புறங்களில் உள்ளது. உறவுமுறையினர் ஒன்று சேர்ந்து பிட்டு, இடியப்பம், வாழைப்பழம் என பலதரப்பட்ட உணவுப் பண்டங்களை பனை ஓலைப் பெட்டியில் வெள்ளை கட்டி எடுத்துக் கொண்டு போவர். மேளம், குரவை என்பதை ஒலிக்க வெள்ளை பிடித்துக்கொண்டு போடும் நடைமுறை இருந்தது. சமைந்த வீட்டிக்கு சற்று தூரத்தில் வந்ததும் குரவை ஒலி பெரிதாகும். சமைந்த வீட்டிலிருந்து எதிர் குரவை கொடுப்பர். இரு கோஷ்டியினரும் மாறி மாறி குரவை ஒலிப்பர். வெடியும் கொளுத்தி போடுவர். சாமர்த்திய வீடுகளில் இத்தகைய குரவை இடும் முறையானது தமிழ் மக்களிடம் மட்டுமல்ல மட்டக்களப்பு இஸ்லாமியரிடமும் காணப்பட்டது.

**இஸ்லாமியரின் குரவை இடல்**

பெண் பக்குவமடைந்து ஏழாம் நாள் தண்ணீர் வார்க்கும் போது குரவை இடுவார்கள். மாப்பிள்ளை அழைத்துச் செல்லும் போது பெண் வீட்டை அடைந்ததும் இரு பகுதியாரும் மாறி மாறி குரவை போடுவர். மாப்பிளைக்கு விதவிதமாக ஆலத்தி எடுப்பர். அப்போது குரவை ஒலி ஓங்கி ஒலிக்கும். மாப்பிள்ளை பெண் வீட்டுக்கு அருகில் வந்ததும் குரவை போடப்படும். குரவை போடும் சந்தியை 'குலவைச் சந்தி' என்பார்கள். பெண் வீட்டாரும் பதில் குரவை போடுவர். பெண் வீட்டார் போய் மாப்பிள்ளையை அழைத்து வருவர். அது 'சம்பந்திக் குரவை' எனப்படும். இப்படி இஸ்லாமிய வழக்கிலும் இருந்து வந்த குரவை இன்று வழக்கொழிந்து போகின்றமையைக் காண முடிகிறது. தாலி கட்டும்போதும், கால் மாறிப் போகும் போதும் வேறு சமூக நிகழ்வின் போதும், கூத்திற்கு சலங்கை கட்டும் போதும், அரங்கேற்றும்போதும் எனச் சமூக நிகழ்வுகளில் குரவை போடும் மரபு இன்றும் காணப்படுகிறது.


**தென்னம்பிள்ளை பாளை தள்ளியபோது குரவையிடல்**

தென்னபிள்ளை பாளை முதல் முதலில் தள்ளியபோது பூப்பெய்தியதாக கருதி பெண்கள் சுற்றி நின்று சீலையால் வளைத்து மறைத்து தண்ணீர் ஊற்றி குரவையிட்டு மகிழ்வர். பலகார வகைகள் சுட்டு பூப்பெய்திய தென்னம்பிள்ளைக்கு வைப்பார். இதே போன்று குழந்தைக்கு பல்லுக் கொளுக்கட்டை கொட்டும்போது பெண்கள் வளைந்து நின்று குரவையிட்டு மகிழ்வர். இப்படிக் குரவைபோடும் சமூக நிகழ்வுகள் ஏராளம். ஆனால் இன்று இக்குரவை போடும் கலை மங்கிக் கொண்டு வருவதைக் காணமுடிகிறது. உற்சாக மூட்டுவதாயும் மகிழ்ச்சியை கொடுப்பதுமான இக்குரவை இடல் நிகழ்வை காசு கொடுத்து வளர்ப்பதில்லை. இக்கலையின் வளர்ச்சி எம்மிடமே தங்கியுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. அக நாநூறு - பாடல் 20 , 118 , 232 , 336
   புறநாநூறு - பாடல் 24 , 129
   நற்றிணை - பாடல் 276
   கலித்தொடை - 39
   மதுரைக் காஞ்சி - 96, 97
   மலைபடுகடாம் - 320 - 322
   திருமுருகாற்றுப்படை - 194 , 197 , 216
2. சிலப்பதிகாரம் ஆசிரியர் குரவை , முன்றக்குரவை
3. பன்னகி வழக்குரை
4. சிலப்பதிகாரம் - பதிப்பாசிரியர் உ. வே சாமிநாத ஐயர் அடியாருக்கு நல்லார் உரை. 1927- பக் 80
5. மேற்படி நூல் பக் - 80 , 27 , 66

**செல்வி. க. தங்கேஸ்வரி**
**பி.ஏ. தொல்லியல் சிறப்பு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தலங்களும் இசைப் பாரம்பரியமும்

இந்துக்களின் வழிபாட்டு வழிமுறைகளில் இறையியல் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படும் அம்சமானது பக்தியியல் என்னும் ஆன்மீக ஈடேற்ற வழி வகைகளுடன் இரண்டறக் கலந்துள்ளது.

இந்து மதத்தில் இறை வழிபாட்டிற்கு இசை ஒரு வழிபாட்டு மார்க்கமாக, வழிமுறையாக திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது. இதனைப் பண்டைய பக்தி இலக்கியங்கள் பின்வருமாறு எடுத்தியம்புகின்றன.

*''முத்தொழில் புரிவது இறை*
*முத் தமிழின் மையமாக விளங்குவது இசை''*

அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் ''ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே''
என இறைவனை விழித்துக் கூறுவதைக் காண முடிகின்றது.

இறைவன் இசைவடிவினன் என்பதினை பின்வரும் பண்டைய பாவடிவம் எமக்கு துல்லியமாக எடுத்தியம்புகின்றது.

*''பாட்டுக்கும் ஆட்டுக்கும்*
*பண்பா போற்றி*
*பாடுவோர் பாடல்*
*உகப்பாய் போற்றி*
*பண் இன் இசையாகி*
*நின்றாய் போற்றி''*

இத்தகைய ஏராளம் இசை வடிவங்களை நாம் பெரிதும் பக்தி இலக்கியங்களில் காணக்கூடியதாக உள்ளது.

பக்தி மார்க்கத்தில் ஆலயங்களில் இசைக்கப்படும் இசையானது பல வகையான இசைப் பாரம்பரியங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. பொதுப்படையில் இசையானது பல வகை இசைக்கருவிகளிலிருந்து பிறந்து ஆலயங்களில் வளம்பெற்று வளர்க்கப்பட்டு வந்துள்ளன. பாடல் இசையினைத் தவிர, நித்திய, நைமித்திய, கிரியை நெறி முறைகளுடனும் ஒன்றித்து இசைக்கருவி அம்சங்களும் வழக்கத்தில் வளர்ந்துள்ளன.

அடிப்படையில் ஆலய இசைக் கருவிகள் ஐந்து வகைப்படுகின்றன. அவையாவன ; துளை இசைக் கருவியான சங்கு; உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகளான கைத்தாளம், மணி வகைகள்; மற்றும் மரத்தினால் உருவாக்கப்பட்ட கருவி வடிவங்களான தவில் போன்றவையாகும். இவை திருத்தல வாத்திய இசைக் கருவிகளில் சிறப்பிடம் பெறுகின்றன.



பண்டைய காலம் தொட்டு கிரியா வழிபாட்டு முறைகளுடன் ஒன்றித்து ஆலய பயன்பாட்டில் கையாளப்பட்ட இசைக்கருவி வடிவங்களாவன, மத்தளம், பேரிகை, ஏகதாளம், முகவீணை, பஞ்சமுக வாத்தியம், வாயு வீணை, வேய்ங்குழல், நாரத வீணை, மற்றும் பாடகம்,ஆகிய வாத்தியங்கள் ஆகும். இவை பண்டைய காலங்களில் ஆலயத்தில் பெரிதும் கையாளப்பட்டு வந்தன. இவற்றில் பஞ்சமுக வாத்தியமானது கோயில் கருவியிசை அம்சங்களில் முக்கிய இடம் பெற்ற ஓர் வாத்தியமாகப் பிரபல்யம் பெற்று விளங்குகிறது. இதனாலேயே ஆலயங்களில் குடமுழவு எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டது. இதில் நடுமேளமாகக் கருதப்படுவது சத்ஜோத முகம் எனப் பெயர் பெற்றது. ஏனைய நான்கு முகங்களும் ஈசானம், தத்புருக்ஷம், அகோரம் மற்றும் வாமதேவம் எனப் பெயர் பெறக் காரணமாயிற்று. மிகவும் எடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதான இவ் இசைக்கருவி சக்கரம் பூட்டப்பட்ட இரதத்தில் வைத்தே நகர்த்தப்பட வேண்டும்.

இதைத் தவிர பண்டைய நரம்பிசை வாத்தியத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய யாழ் இசை வாத்தியம் பெரிதும் வழக்கத்தில் இருந்தது. இவையாவும் ஆலய இசைப் பாரம்பரியத்தில் கையாளப்பட்டன. இவை தவிர 'வாத்தியத்ரயம்' எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுவது, இசைக் கருவி அம்சங்களின் கூட்டுக் கருவியிசையாக விளங்கும் அம்சமாகும். இவற்றுள் தண்ணுமை என்னும் தோல் இசை வாத்தியமும், மத்தளம் என்னும் தாளலய வாத்தியமும் முக்கிய இடம் பெற்றுள்ளன எனலாம். இம்மத்தளமே பிற்காலத்தில் மிருதங்கம் என்னும் தாளலய வாத்தியமாக உருவெடுக்க ஏதுவாயிற்று. இம்மத்தளமானது மத்து மற்றும் தளம் ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய பதத்தின் கூட்டுச்சேர்க்கையேயாகும்.

பொதுவாகப் பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த ஏராளம் இசைக் கருவி வாத்தியங்கள் இன்று வழக்கொழிந்து போயின. ஆயினும் இன்றும் பல இசைக்கருவி வாத்தியங்கள் ஆலயங்களில் பயன்பாட்டில் உள்ளன. அவையாவன நாதஸ்வரம் (நாகசுரம்), தவில், தாளம், பிரம்ம தாளம், சேமக்கலம், சங்கு, பம்பை, டமாரம், டவண்டை, உடுக்கை, மற்றும் மத்தளம் என்பனவாகும். ஆயினும் இவற்றுள் பெரும்பாலான வாத்தியப் பயன்பாடு நடைமுறையில் அருகி வந்துள்ளன. ஆங்காங்கே மேலைத்தேய வாத்தியங்கள் கூட இசைக் கருவியாக நாதத்துக்கு ஏற்றவகையில் இன்று ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாகத் தமிழ் மொழியில் முகவீணை எனக் குறிப்பிட்டு அழைக்கப்பட்டு வரும் வாத்தியத்திற்குப் பதில், கிளாரினெட் மற்றும் பிடில் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படும் அன்னிய வாத்தியப் பயன்பாடும் திருத்தலங்களில் ஆங்காங்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுப் பிரார்த்தனையான பஜனை வழிபாடுகள், திருத்தலங்களில் கதாப்பிரசங்கள் என்பன இடம்பெறும் போதும் இசைக் கருவி வாத்தியங்கள் வழக்கத்தில் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சல்லாரி என்னும் ஒரு தனித்துவ இசைக் கருவி பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறே சில அம்மன் சன்னிதான உற்சவங்களில் பறை மேளம் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு பல இசைக் கருவிகள் இன்றைய நடைமுறையில் ஆலய வழிபாட்டிற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் இசைக்கப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

திருத்தலங்களில் பெரிதும் இசைக்கப்படும் வாத்தியமான நாதஸ்வரம் பொதுவாகத் தமிழரின் பாரம்பரியமான மங்கள வாத்தியமாகக் கருதப்படுகிறது. நாதஸ்வரம் வாத்தியங்களில் நீண்ட பெரிய உருவமைப்பைக் கொண்டதாக விளங்கும். தவில் என்னும் பெரிய தாளலய வாத்தியத்துடனேயே நாதஸ்வரம் இசைக்கப்படுகிறது. இதனால் இவ்வாத்தியமானது பெரிதும் கூட்டுச்சேர்கையிலான பெரிய மேளம் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுகின்றது. அடிப்படையில் நாதஸ்வரம் திமிரி, மற்றும் பாரி ஆக இருவகைப்படுகின்றன. நாம் பொதுவாக நடைமுறையில் இன்று பயன்படுத்துவது பாரி என்னும் நாதஸ்வர வாத்திய வகையைச் சார்ந்ததாகும்.

சங்கு என்னும் அடிப்படை அம்சமானது திருதலப் பயன்பாட்டில் பலவகை தேவைகளுக்கும், கிரியா வழிமுறைநெறிகளுக்கும் கையாளப்படுகின்றது. பூஜை வேளைகளில் சங்கு, தனித்தும், சேமக்கல ஒலியுடன் ஒன்று கூட்டியும், மற்றும் கிரியைகளுக்கிடையேயும், ஒலிநாத தேவைக்கு கையாளப்படுகின்றது. சங்கானது வெறுமனே ஒலிநாத வாத்தியமாக மட்டுமல்லாது வழிபாட்டு முறைமைகளுடன் ஒன்றித்தது. மகா விஷ்ணுவின் திருக்கரத்திலுள்ள சங்கு (பாஞ்சசன்னியம்) மகத்துவம் வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் இசைக் கருவியில் ஆலயங்களில் நாளாந்தம் பயன்படுத்தப்படும் மணியின் ஒலி நாதம் முக்கியமான ஓசை வளம். ஒலி நாதம் மிக்க இம்மணியானது பலவகைப்படுகின்றன. அவற்றில் கண்டாமணி, கொந்து மணி, கை மணி ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன. இந்த வகையில் பல வகையான ஒலிஓசை வளம் செறிந்த பல வகையான தேவைக்கு ஏற்ற வகையில் திருத்தலங்களில் பலவகை மணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே ஒவ்வொரு இசைக்கருவிப் பயன்பாடும் ஆகம விதிப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பண்டைய ஆலயமரபாகும். குறிப்பாக, திருவனந்த பூஜையின்போது வசந்தா, பூபாளம், கேதாரம், தன்யா, சுருட்டி, முகாரி மற்றும் கல்யாணி ஆகிய ராகங்கள் இசைக்கப்படல் பொது மரபாகும். இவ்வாறே ஆலய உற்சவக் காலங்களில் வீதியுலாவிற்கு சுவாமி எழுந்தருளும் போது ஆரம்பத்தில் இறைவனுக்கு மல்லாரி ராகம் சமர்ப்பிக்கப்படுகின்றது. மல்லாரி ராகமானது நாட்டை ராகத்தினை அடிப்படையாகக் கொண்டு விளங்கிய போதும் தாள சுதி பேதங்களுடன் விளங்குகின்றது. இக் குறிப்பிட்ட ராகமானது சாகித்தியமற்றதாகும்.

அர்த்தசாம பூசையின்போது இசைப்பதற்கென்றே சிருங்கார ரசம் செறிந்த ராகங்கள் பயன்படுத்தபட்டு வருகின்றன. திருத்தல மகா உற்சவங்களில் போது பல வகையான ராகங்கள் உற்சவ மூர்த்திகள் திரு வீதி வலம் வருகையில் பயன்படுத்தப்படுகின்றன. நவசந்திகளான பிரம்ம சந்தி, அக்கினி சந்தி, யம சந்தி, வருணசந்தி, வாயு சந்தி, குபேர சந்தி, ஈசான சந்தி, இந்திர சந்தி மற்றும் நிருதி சந்தி ஆகிய சந்நிதிகளில் இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கும்போது வர்ணம், கீர்த்தனம், பதம் மற்றும் இராகச் செறிவு மிக்க சம்பிரதாய உருப்படிகள் இசைக்கப்படுகின்றன. அவ்வாறே உற்சவ மூர்த்திகள் இருப்பிடம் திரும்பும்போது மல்லாரி மீண்டும் இசைக்கப்படுவது வழமையாகும்.

ஆயினும் இன்று நடைமுறையில் நாதஸ்வரக் கலைஞர்கள் பதம், கீர்த்தனம், வர்ணம் என்பவற்றுக்கு பதிலாக பக்திப் பாடல்களை இசைக்கின்றனர். அவ்வாறே கோயில்களில் நித்தமும் தேவாரம், திருவாசகம் மற்றும் திருமுறைகள் பாட, ஓதுவாரும் வைஷ்ணவத் திருத்தலங்களில் பாசுரங்கள் ஓதஅரையரும், அமர்த்தப்பட்டுள்ளமையை இன்றும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இந்தவகையில் இசையானது அதன் பாரம்பரியம் வழுவாமலும், சம்பிரதாய மரபுகளைத் தழுவியும் திருத்தலங்களில் இன்றும் வளர்க்கப்பட்டு வருகின்றது.

**- சுபாஷிணி பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் குகை கலைநயங்கள்

சீனாவில் கற்சிற்பங்களில் உலகப் பிரசித்தி பெற்ற பிரதான மூன்று இடங்கள் உள்ளன. துன்யுவாங், லோங்மென் மற்றும் யுன்காங் (Yungang) என்பவையே அந்தப் பிரதான இடங்களாகும். இவற்றில் யுன்காங் சிறு செயற்கைக் குகைகள், (grottoes) அவற்றில் மிகப் பிரமாண்டமான உருவங்கள், அவற்றின் பழைமை மிக்க சரித்திரம், மற்றும் அவை கிட்டத்தட்ட பூரணமாக பாதுகாக்கப்பட்டு வரும் நிலை ஆகியவற்றின் காரணமாக மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. 1961 ஆம் ஆண்டு சீன ராஜ்ய சபை இவ்விடத்தினை தேசிய பிரதான கலாசார சின்னங்கள் பாதுகாப்புப் பிரிவு எனப் பிரகடனம் செய்தது. அத்துடன் 2001 ஆம் ஆண்டு இப்பகுதி உலக கலாசார மரபுரிமை இடமாகப் பட்டியலிடப்பட்டது.

யுன்காங் செயற்கை குகைகள் கைத்தொழில் நகரமான டேரொங்கிற்கு சுமார் 16 கிலோ மீற்றருக்கு மேற்கே உள்ள ஷான்ஸி மாகாணத்தின் வடபகுதியில் அமைந்துள்ளன. வுசௌ மலைத்தொடரில் வுசௌ நதியோரமாக சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு உயரமான செங்குத்தான கல்பாறையில் சுமார் 50 குகைகள் செதுக்கப்பட்டுள்ளன.

4 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'வரலாற்றில் வடக்கு வெய்' (Northern Wei) என்று பிரசித்தமான சீனர்கள் அல்லாத ரோபா துருக்கியர்கள் வட சீனாவை ஐக்கியப்படுத்தி தமது தலைநகராக பிங்செங்கை (தற்போதைய டேரொங்) உருவாக்கினர்.

ஆரம்ப கால ஆட்சியாளர்கள் உள்ளூர் மக்களது மொத்த மத நம்பிக்கையை, சமயம் என்ற அளவில் ஏற்றதோடு அரசியல் பொருளாதார காரணங்களுக்காகவும் அதனை ஏற்றுக் கொண்டனர். பௌத்த பிக்குகள் அரசியல் ஆலோசகர்களாக செயற்பட்டதுடன் மன்னரை தோதகட புத்தருடன் அடையாளம் கண்டதுடன் அரசியல் மற்றும் சமய உலகினை அதில் இனம் கண்டு இணைத்துக் கொள்பவர்களாக இருந்தனர். இந்த வகையில் ரோபாக்கள் இப்புதிய தேசத்தில் தமது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்க மதம் உதவியது.

இந்த வகையில் புதிய ஆட்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள தேசத்தில் படிப்படியாக பௌத்த கட்டிடங்களையும் வழிபாட்டுத் தலங்களையும் கட்டுவதற்கு உதவி செய்தார்கள். இருப்பினும் இந்த பௌத்த ஆட்சிக்கு எதிர்ப்பும் இருந்தது.

கொன்பியூசியஸ் மற்றும் டோயோ இன பௌத்த வழிபாட்டாளர்கள் ஆகியோரின் செல்வாக்கிற்கு ஆளாகிய தைவு மன்னர், அரசுக்கு எதிராக சதி செய்வதாக மதகுருமாரைக் குற்றம் சாட்டினர். அத்துடன் அவர்களைத் தண்டிக்க கடும் நடவடிக்கைகளை 5 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் மேற்கொண்டார்.

அவரது நடவடிக்கையின் காரணமாக ஏராளமான பௌத்த ஆலயங்களும் உருவச் சிலைகளும் அழித்தொழிக்கப்பட்டன. அவ்விதமே பௌத்த ஏடுகளும் எரிக்கப்பட்டன. சாதாரண மக்கள் வாழ்வுக்கு திரும்புமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த பிக்குகள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். தைவுவின் பேரன் வென்சேங் அவரையடுத்து பதவியை ஏற்றான். அவன் 452 ஆம் ஆண்டு இக்கொள்கைகளை மாற்றினான். தைவுவினால் தண்டிக்கப்பட்டவர்களை சமாதானப் படுத்தும் வகையில் பௌத்த சமுதாயத்துக்கு பல வெகுமதிகளை அள்ளி வழங்கினான்.

இந்நடவடிக்கை யுன்காங்கில் செயற்கைக் குகைகளை செதுக்க ஆரம்பிக்க ஊக்கமளிப்பதாக அமைந்ததோடு நகரின் உள்ளேயும் வெளியேயும் பௌத்த கட்டிடங்களை கட்டவும் ஊக்கம் கொடுத்தது.

வென்செங்கிற்கு பின் வந்த மன்னர்களும் விசேடமாக யுன்காங்கில் செயற்கை குகை சிற்ப செதுக்கல்களுக்கு ஆதரவளித்ததோடு பௌத்த மதத்திற்கும் ஊக்கம் அளித்தார்கள்.


இதன் காரணமாக பௌத்த துறவிகள் சமூகம் முன்னரிலும் பார்க்க கூடுதலாக நாட்டில் செல்வாக்கைச் செலுத்துபவர்களாக விளங்கினார்கள். 494 ஆம் ஆண்டு ஸியோவன் மன்னன் பௌத்த செல்வாக்கின் தூண்டுதலால் வட சீனாவின் மன்னர் என்னும் தனது அடையாளத்தை அதிகரித்துக் கொள்வதற்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னாள் தலைநகரான டேரொங்கிற்கு தனது தலைநகரை மாற்றினான்.

இச் செயற்கைக் குகைகளின் மிக முக்கிய வேலைகள் 460 ஆண்டுக்கும் 490 ஆண்டின் முற்பகுதிக்கும் இடையில் பூர்த்தி செய்யப்பட்டது. அதற்குப் பிற்பட்ட காலத்தில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் முக்கிய திருத்த வேலைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்யப்பட்டன. இற்றை வரைக்கும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் அதன் வரலாற்றின் பெரும் பகுதி புதிராகவே தோன்றுகின்றது.

பிற்காலத்தில் செய்யப்பட்ட லோங்மென் செயற்கை சிறு குகைகள் போலல்லாது குகை பகுதிகளில் மிகக் குறைந்த கல்வெட்டுக்களே காணப்பட்டன.

யுன்காங் செயற்கைக் குகைகள் சீனாவின் முதலாவது பிரதான கல்லால் செதுக்கப்பட்ட சிறு செயற்கைக் குகைகளாக விளங்கினாலும் சீனக் குகை சிற்பங்களில் யுன்காங் குகைச் சிற்பங்கள் முதலாவது அல்ல. அதற்கு முன்னரும் குகைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அதில் குறிப்பாகக் கூறக் கூடியது டுன்ஹுவாங்கில் உள்ள சில குகைச் சிற்பங்களாகும். அங்குள்ள சுடு மண் சிற்பங்களும் உயிரோட்டமான ஓவியங்களும் யுன்காங் மீது செல்வாக்கை செலுத்தியுள்ளன.

## கைதேர்ந்த சிற்பிகளான
## 5 இந்திய பௌத்த துறவிகள்

உண்மையைச் சொல்வதானால் டுன்குவாங் கைவினைக் கலைஞர்கள் சிலர் பிங்செங் சென்று புதிய திட்டத்தில் தவிர்க்க முடியாத பங்கினை வகித்தார்கள். வெய் ஆட்சியாளரின் முன்னைய வரலாற்றின்படி, கைதேர்ந்த சிற்பியான 5 இந்திய பௌத்த துறவிகள் 455 ஆம் ஆண்டில் குகைகளைக் கட்ட ஆரம்பிக்கு முன் பிங்செங் சென்றார்கள் எனக் கூறப்படுகிறது.

இத் திட்டத்திற்கு தூண்டுகோலாக விளங்கிய தன்யௌ என்ற பிரதம பௌத்த துறவியும் மொகோ சிறிய செயற்கைக் குகைகள் இருக்கும் மேற்கு கன்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணத்தைச் சேர்ந்தவராவார். ஆரம்பத்தில் இக் குகைச் சிற்ப உருவாக்கத்தை மன்னர்களின் ஆதரவோடு பௌத்த சமூகம் மேற்கொண்டு வந்தது. 452 ஆம் ஆண்டு மன்னர் தைவு இறந்த பின் அப்பகுதியில் உள்ள துறவிகளை மேற் பார்வை செய்த தன்யௌ புதிய மன்னரிடம் வுசௌ என்னும் இடத்திலுள்ள உயர்ந்த செங்குத்தான மலையில் தொடர்ச்சியாக குகை வழிபாட்டிடங்களை அமைத்து அதில் சிற்பங்களை செதுக்கி அலங்காரம் செய்ய அனுமதியைப் பெற்றார்.

முதலில் அங்கு உருவாக்கப்பட்டது 5 குகைகளாகும். ஒவ்வொரு குகையிலும் ஒவ்வொரு புத்தர் சிலை வைக்கப்பட வேண்டும் எனப் பணிக்கப்பட்டது. இவை 5 மன்னர்களை கௌரவிக்கும்படியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. மன்னர்களின் ஆதரவு இருந்தமையால் இக் குகைச் சிற்ப வேலைகள் பெரும் கௌவரம் பெற்ற பணியாக விளங்கின. முப்பது வருட காலத்திற்கு மேலாக இக் குகை உருவாக்க வேலைகளில் பல்லாயிரக்கணக்கானோர் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெய் ஆட்சியாளர்கள் 20 பெரிய குகைச் சிற்பங்களை உருவாக்கியதுடன் ஏராளமான சிறிய குகைகளையும் அமைத்தார்கள். டேரொங் நகரைத் தலைநகராக்கி அங்கு சென்ற பின் அங்கு மென் மேலும் அழகிய சிற்பங்களை உருவாக்கினர்.


வரலாற்று ரீதியாக இக் குகைகள் மூன்று பிரதான குழு மங்களாகப் பிரிக்கப்பட்டன. கிழக்குப் பகுதி (1- 4) சில ஆர்வங்களைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் இவை ஏனைய வற்றிலும் பார்க்க சிறியவகையாகவே தோன்றுகின்றன.

மத்திய பகுதியில் உள்ள குகைகளில் (குகைகள் 5- 13) சோடிக் குகைகள் பலவுள்ளன. இவை பெரும்பாலும் 465ஆம் ஆண்டில் இருந்து 495 ஆம் ஆண்டுவரை செதுக்கப் பட்டவை. மேற்குப் பகுதி குகைகள் (14- 53) முதற் காலத்திலும் பிற்காலத்திலும் செதுக்கப்பட்டவை. ஆனால் குறிப்பிடத்தக்க மன்னர் பரம்பரைக் குகைகள் (16- 21) இங்குள்ளன.

முற்கால குகைகளில் வெளித் தெரியக் கூடியதாக மேற்குலக குணாம்சங்கள் தெரிகின்றன. குகைகளின் முகப்புகளில் உள்ள சிற்பங்களும் தூண் கட்டிடக் கலையும் இந்திய சயித்தியாக்கள் போலத் தோன்றுகின்றன. சில மாபெரும் புத்தர் சிலைகள் வட இந்திய காந்தரா பாணியைப் பின்பற்றியதாகத் தோன்றுகின்றன. சில மிகப் பிரமாண்டமான புத்தர் சிலைகள் (குகை 516 - 19) ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் அழிக்கப்பட்ட பாமியன் சிலைகளின் தாக்கத்தில் செதுக்கப்பட்டவை போலத் தோன்றுகின்றன.

அத்துடன் சில குகைகளின் கல் முகப்புப் பக்கம் மற்றும் குகைகளின் அலங்கார வடிவமைப்புகள் மற்றும் உருவங்கள் கிரேக்க, ரோம, செல்வாக்கினைக் காட்டுவதாக உள்ளது.

அத்துடன் அங்கு ஈரானிய மற்றும் நாடுகளின் தாக்கங்களும் புலனாகின்றன. ஆனால் டிராகன் மற்றும் பீனிக்ஸ் பறவை உருவங்களில் அமைந்த பெரும் அலங்கார வேலைகள், சீனப் பாணியில் அமைந்த கூரைகள், மற்றும் பிராக்கட்டுகள், மற்றும் நிம்பஸ்கள், மற்றும் ஒறியோல்கள் ஆகியவற்றில் காணப்படும் தனித்துவப் பாணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தனித்துவமான சீனக் குணாம்சங்களைக் காட்டுகின்றன. குகைகளின் உள்ளே புகைப்படங்கள் எடுப்பது தடை செய்யப்பட்டிருந்தாலும் இச்சிறிய குகைகள், எல்லா வழிகளிலும் கண்ணைக் கவருபவையாகும்.

எல்லாக் குகைத் தொகுதியிலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலைகள் உள்ளன. கல் சிற்பங்களுக்கிடையில் நிறையப் பலவகை வடிவங்களும் உள்ளன. குகைகளுக்கு உள்ளேயும் வெளியேயும், பிரமாண்டமாக நிற்கும்நிலை புத்தர் சிலைகளும் அமர்ந்தநிலை புத்தர் சிலைகளும் உள்ளன. அது போன்று குகைகளில் 70 அடி வரை உயரமான குகைகளும் ஒரு சில அடி உயர சிறு குகைகளும் காணப்படுகின்றன.

அத்துடன் ஏராளமான சிறப்பான சுவர்ச் சிற்பங்களும் கண்கவர் ஓவியங்களும் மற்றும் அலங்கார அம்சங்களும் அவற்றில் காணப்படுகின்றன.

பிற்பட்ட காலத்து (494- 525)செயற்கைக் குகைகளாவன, டிராகன் மன்னன் ஆலயப் பள்ளத்தாக்கில் உள்ள செயற்கைக் குகைகள் பிரதேசத்துக்கு மேற்காக அமைந்திருக்கின்றன. இக்கால கட்டத்தில் 200க்கும் மேற்பட்ட குகைகளும் மாடங்களும் செதுக்கப்பட்டன. இக் குகைகள் நடுத்தர மற்றும் சிறிய அளவிலும் பல்வேறு வகைப்பட்டதும் சிக்கலானதுமானதும் ஒழுங்கற்றதுமான அளவுகளிலும் காணப்படுகின்றன. உயரமான செங்குத்தான மலையில் உள்ள குகைகளின் கதவுகளைச் சுற்றி அலங்கார மாதிரிகளும் செதுக்கப்பட்டுள்ளன.

லையோ வம்ச ஆட்சியின் போது குகைகளின் முன்னால் மரத்திலான பாதுகாப்பு அமைப்புக்கள் கட்டப்பட்டதை அடுத்து இச் செயற்கைக் குகைகள் ஆலயக் கட்டிடங்களாக மாறின.

5 ஆம் பிரிவு குகைகள் மற்றும் 6 ஆம் பிரிவு குகைகளின் முன்பாக, ஒவ்வொன்றும் 4 அறைகளைக் கொண்ட 4 தள மரத்தாலான கட்டிடமும் முதலாவது குகைக்கு முன் 3 அறைகளைக் கொண்ட 3 தள கட்டிட அமைப்புகளும் கட்டப்பட்டன.

1949 ஆம் ஆண்டில் சீன மக்கள் குடியரசு மலர்ந்ததில் இருந்து 5, 6, 7 ஆம் குகைகளின் முன் இருந்த மரக் கட்டிடங்களும் பிரதான குகைகளும் அழிய விடாது பாதுகாக்கப்பட்டுள்ளன.

சிறு குகைகளும் பாதுகாக்கப்பட்டு பொதுமக்கள் அவற்றை பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

- லக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GET கலைக்கேசரி DELIVERED TO YOUR HOME

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-5322700 / 5738046 Fax:+94-11-5517773
For more details, please contact : Overseas Subscriptions **Arjun** -on arjun@expressnewspapers.net/Mobile:+94 777 801034
Local Subscriptions **S. Sandrasegar** - +94 77 5359106 / +94 -11 - 5322783

**Online Payment : www.kalaikesari.com / Subscription**

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI

**Manager Subscriptions**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**

**Tel : +94-11-5322783 / +94-11-5738046**
**Fax :+94-11-5517773**
**E-mail : subscription@kalaikesari.com**

Cheque should be drawin in favour of
**Express Newspapers (Ceylon) (Pvt) Limited**

FOLD HERE

Title : Mr. ☐ Mrs. / Miss ☐ Dr. ☐ Prof. ☐
First Name :....................
Last Name :....................
Institution :....................
Apartment/Other Nos :....................
Street / Road :....................
Town/City/State :....................
Country :....................
Amount Enclosed : ....................(12 / 6 Issues)
Mode of payment : ☐ Cheque / ☐ Money Order
Online Payment : www.kalaikesari.com / Subscription





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலமையாளர் வரிசையில் தனித்துவம் பெற்ற ஹன்டி பேரின்பநாயகம்

பேராசிரியர் சபா. ஜெயராசா

பிரித்தானியாவில் வளர்ச்சி பெற்று வந்த நவீன மானிடவாதம், ஆங்கிலக் கல்வி வழியாகக் கிடைக்கப் பெற்ற மார்க்சியக் கருத்தியல், இந்தியாவில் எழுச்சி கொள்ளத் தொடங்கிய காந்திய நெறி முதலியவற்றால் ஊட்டம் பெற்ற கல்விமானாக ஹன்டி பேரின்பநாயகம் (1899 - 1977) அவர்கள் விளங்கினார். புலமை நிலையிலும் சமூக நிலையிலும் அவரது பங்களிப்புகள் தனித்துவமானவை

புலமையாளராகவும் அதே வேளை ஒரு வினைப்பாட்டாளராகவும் (ACTIVIST) விளங்கிய அவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆற்றல் மிக்க ஆசிரியராகவும் பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகவுமிருந்து கல்வி விரிவாக்கற் செயற்பாடுகளைப் பல நிலைகளிலே முன்னெடுத்தார். மத நல்லிணக்கத்தை வலியுறுத்திய அவரது வினைப்பாடுகள் விரும்பி வரவேற்கப்பட்டன. கிறிஸ்தவப் பின்புலத்தில் வாழ்ந்து வளர்ந்த அவருக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி இந்துக்களால் விரும்பி வழங்கப் பெற்றமை யாழ்ப்பாணத்தில் நிலவிய மத நல்லிணக்கத்தின் குறியீடாயிற்று.

வைதிக இந்து மதத்தில் ஊறி வளர்ந்த கொக்குவில் மக்களும் அதனைச் சூழவுள்ள கிராமத்து மக்களும் அவரது கல்வித் தலைமைத்துவத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டமை இந்துக்களின் விசாலித்த உளப் பாங்கை வெளிப்படுத்தியது.

கொக்குவில் இந்துக் கல்லூரியை இலங்கைக்கே ஓர் எடுத்துக்காட்டான கல்லூரியாக மாற்றியமைப்பதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் பிற்றை நாளில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கல்விச்சீர்திருத்தங்களுடன் ஒப்புமை கொண்டிருந்தமையைக் குறிப்பிட முடியும். இலங்கையைப் பொறுத்தவரை 1972 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் முற்போக்குத் தன்மை கொண்டவையாக அமைந்திருந்தன. இலங்கை முழுவதுமுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் பொதுவான ஒரு கலைத்திட்டம் அந்த ஆண்டிலே அறிமுகம் செய்யப்பட்டது. சமநிலைக் கலைத்திட்டம் ஒன்றிணைந்த கலைத்திட்டம் முதலியவை அக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டன. ஆனால் அதற்கு முன்னரே 1950ஆம் ஆண்டுகளில் அவர் ஒன்றிணைந்த சமநிலைக் கலைத்திட்டத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அறிமுகப்படுத்தினார். கலை, விஞ்ஞானம், அழகியல், தொழிநுட்பப்பாடம் என்ற அனைத்தையும் ஒருங்குசேர அங்கு கற்பதற்குரிய வசதிகள் அவரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இலவசக் கல்வி வளர்ச்சி காரணமாகக் கிராமப்புறத்துச் சிறார்கள் ஆரம்பக் கல்வியை நிறைவேற்றிவிட்டு இடைநிலைக் கல்விக்கு நுழையும் பெருக்கம் ஏற்பட்ட வேளை அவற்றுக்கு ஈடு கொடுக்கக் கூடியவாறு பல கல்லூரிகள் எழுச்சி கொள்ளத் தொடங்கின. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலே கூடிய மாணவர்களை உள்ளீர்க்கும் பொருட்டு அடிக்கட்டுமானங்களை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்ட அவர் மலேசியா வரை சென்று உதவிகள் பெற்று உயர் மாடங்களையும் ஆய்வு கூடங்களையும் அரங்குகளையும் தமது கல்லூரியில் அமைத்துக் கொடுத்தார்.

முதன் முதல் யாழ்ப்பாணத்தில் இரண்டு அடுக்குகளைக் கொண்ட நெடு மாடிக் கட்டடத்தைப் பாடசாலைக்கென அமைத்த பெருமையும் அவரையே சாரும்.

அவரது பெரும் பணிகளுள் விதந்து பாராட்டப் படக் கூடியது யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் தொடர்பான நடவடிக்கைகளாகும். 1924 ஆம் ஆண்டிலே கால்கோள் கொண்ட அந்த இயக்கம் அறிகைத் தளத்திலும் வினைப் பாட்டுத்தளத்திலும் பின்வரும் எழுச்சிகளை முன்வைத்து.

(அ). இலங்கையின் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து தேச நலனுக்காக உழைத்தல்
(ஆ). தீண்டாமையை முற்றாக ஒழித்தல்
(இ). தாய்மொழியே கல்வி மொழியாக இருத்தலை முன்னெடுத்தல்
(ஈ). சிங்கள மாணவர் தமிழ் மொழியையும் தமிழ் மாணவர் சிங்கள மொழியையும் கற்கச் செய்தல்.
(உ). தேசிய மொழிகளில் விஞ்ஞானம் உள்ளிட்ட சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு முயற்சித்தல்
(ஊ). தேசிய கலை இலக்கியங்களை மீட்டெடுத்தல்
(எ). உள்ளூர்க் கைத் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்

தொடர்பாடல் நிலையில் ஆங்கில மொழி மேலாதிக்கம் பெற்றிருந்த பிரித்தானியராட்சியின் எழு குழாத்தினரது மேடைகளில் ஆங்கிலமே பயன் படுத்தப்பட்ட வேளை, ஆழ்ந்த ஆங்கில அறிவு வாய்க்கப்பட்டிருந்த பேரின்பநாயகம் அவர்கள் இளைஞர் காங்கிரஸ் நிகழ்ச்சிகளிலே தமிழ் மொழியில் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து ஆங்கில மொழி வழியாகக் கற்ற புலமையாளர்கள் தமிழ் மொழியில் உரையாற்றலாயினர். அதாவது ஆங்கில மொழியிலே பேசுவதைப் பெருமையாகக் கருதியோர் பின்னர் தமிழ் மொழியில் உரையாற்றுவதைப் பெருமையாகக் கருதினர்.

வாசிப்புப் பழக்கத்தை மாணவரிடத்து வளர்த்து எடுப்பதிலே அதிக அக்கறை காட்டிய அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல ஆக்கங்களை எழுதினார். அவர் எழுதிய ஜப்பானியப் பயணம் பற்றிய கட்டுரை பிரயாண இலக்கியத்துடன் நகைச்சுவையை இணைத்து எழுதப்பட்ட தனித்துவமான ஆக்கமாக அமைந்தது. கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்த ஆக்கத்தைப் பெரிதும் பாராட்டியதாக தகவல் உண்டு. கல்கி ஆசிரியர் அவர்கள் தமது இலங்கைப் பயணம் பற்றி எழுதும் பொழுது பேரின்பநாயகம் அவர்களது ஆற்றலையும் பணிகளையும் பல சந்தர்ப்பங்களிலே விதந்து பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழி உயர் கல்வியிலும் மேலெழுந்து நிலை பெற வேண்டுமென்று வலியுறுத்திய அவர் அதற்குரிய தமது புலமைப் பங்களிப்பையும் வழங்கினார். பேரின்பநாயகம் அவர்கள் தமிழில் எழுதிய 'ஆட்சியியல்' என்ற நூல் அரச அறிவியற் பாடத்துக்கு எம். ஏ. பட்டப்படிப்புவரை பயன்படுத்தப்படத் தக்கது என்ற பாராட்டைப் பெற்றமை ஒரு முக்கியமான அவதானிப்பு ஆகும்.

தமது கல்லூரியின் செயற்பாட்டை உலக தொடர்புகளுக்கு இட்டுச் சென்று ஊடாட்டங்களை ஏற்படுத்திய முன்னுதாரணங்களையும் அவர் உருவாக்கினார். வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமயத் தலைவர்கள் முதலியோர் கல்லூரிக்கு வரவழைக்கப்பட்டு மாணவர் மத்தியிலே உரை நிகழ்த்துவதற்குரிய ஏற்பாடுகளை அவர் மேற்கொண்டார். அந்த செயற்பாடு ஏனைய கல்லூரிகளுக்கும் முன்னுதாரணமாக அமைந்தது.

**திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்களது பெரும் பணிகளுள் விதந்து பாராட்டப்படக் கூடியது யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் தொடர்பான நடவடிக்கைகளாகும். 1924ஆம் ஆண்டிலே கால்கோள் கொண்ட அந்த இயக்கம் அறிகைத் தளத்திலும் வினைப்பாட்டுத் தளத்திலும் எழுச்சிகளைத் தூண்டியது.**

காந்திய கோட்பாடுகள் மீது அதீத ஈடுபாடு கொண்டிருந்த அவர் காந்திய ஒழுக்கத்தையும் நடைமுறைகளையும் பின் பற்றி வந்தார். கதர் ஆடைகளையே எப்பொழுதும் அணிந்து வந்தார். மாணவர்கள் ஏட்டுக் கல்வியுடன் தொழிற் கல்வியும் பயின்று கொள்ள வேண்டும் என்ற காந்திய நோக்கத்துடன் சுழிபுரத்திலிருந்த இராமநாதர் என்ற தொழிற் கல்வி வல்லுனரை அழைத்து வந்து மாணவர்க்கு செயல் அனுபவங்களுடன் கூடிய தொழிற் பாடங்களை கற்பிக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

மகாத்மா காந்தியை இலங்கைக்கு வரவழைக்கும் செயற்பாட்டையும் அவரே முன்னெடுத்தார். காந்தியை வரவழைக்க அவர் எழுதிய கடிதங்கள் காந்திய தரிசனத்தில் அவர் கொண்டிருந்த பற்றுதியை ஆழ்ந்து வெளிப்படுத்தியுள்ளது என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். காந்தியக் கருத்தியலுக்கும் மார்க்சியக் கருத்தியலுக்குமிடையே குறிப்பிட்ட நிலைகளிலே காணப்பட்ட ஒப்புமைகளைத் தமது உரைகளிலும் எழுத் தாக்கங்களிலும் தெளிவுபெற வெளிப்படுத்தினார். மேலும் ஆசிரிய வாண்மை நிலையிலும் அவர் மேற்கொண்ட பங்களிப்புக்கள் விதந்து குறிப்பிடத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் அனைத்து இன ஆசிரியர்களையும் உள்ளடக்கிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக அவர் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். அனைத்து இன ஆசிரியர் மத்தியில் அவருக்கு இருந்த பெரு மதிப்பினையும் கௌரவத்தையும் அந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது. ஆசிரியர்கள் கௌரவமும், வாண்மை மேம்பாடும் சமூக அந்தஸ்தும் தொடர்பான கருத்துக்களை அவர் தமது உரைகளிலும் அறிக்கைகளிலும் முன்வைத்தார். அனைத்து இன மக் களையும் அனைத்து மத மக்களையும் கௌரவத்துடன் ஒன்றிணைத்தே தேசிய ஐக்கியம் கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்ற கருத்தில் அவர் தளராத உறுதி கொண்டிருந்தார்.

இலங்கையின் விடுதலைப் போராட்டங்களிலும் அதே நிலைப்பாட்டை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார். அந்நிலையில் அற்றை நாள் இடதுசாரிகளின் கருத்திய லோடு பேரின்பநாயகம் அவர்களின் உறவுகள் பலம் பெற்று வளர்ச்சியடைந்திருந்தன. தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்ட வேளை அவர் மனமுடைந்து வேதனையடைந்தார். சிறுபான்மையினரின் மொழியுரிமை, மத உரிமை, வாழ்விடஉரிமை, பண்பாட்டு உரிமை முதலிய வற்றை உரிய முறையிலே பாதுகாக்காமல் உறுதிவாய்ந்த தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்ற கருத்தினைத் தமது எழுத்தாக்கங்கள் வாயிலாகத் தெளிவுபடுத்தினார்.

தாம் வாழ்ந்த காலத்தைச் செறிவுடனும், வினைத் திறனுடனும் திறனாய்வுடனும் பயன்படுத்திய புலமையாளராயும் வினைப்பாட்டாளராயும் அவர் விளங்கினார். அவரது வாழ்வும் வளமும் சமூக பயன்பாட்டுடனும் இணைந்த கருத்தியலுடன் சங்கமித்திருந்தன.

**சிறந்த கல்விமானாகவும் சமூக சேவையாளராகவும் இலங்கையின் விடுதலை இயக்க முன்னோடி ஆகவும் விளங்கிய எஸ். ஹன்டி பேரின்பநாயகம் அவர்களை கௌரவிக்கும் வகையில் அவரது பெயரில் ஞாபகார்த்த முத்திரையும் முதல் நாள் உறையும் 22-07-2010 அன்று, கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதன் நூற்றாண்டு விழா வைபவத்தின் போது வெளியிடப்பட்டது. அன்றைய தினம் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் 110வது பிறந்த ஆண்டு நிறைவும் நினைவு கூரப்பட்டது. கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை இந்நினைவு முத்திரை வெளியீட்டில் ஆர்வம் காட்டி செயற்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராம இராவண யுத்தம் ஆரம்பித்த சீனிகம ஆலயம்

தென்னிந்திய தொலைக்காட்சி நாடகமான "தங்கம்" நாடகத்தில் தவறு செய்த எதிரிக்கு தண்டனை வழங்குவதற்காக அம்மனுக்கு மிளகாய் அரைத்துப் பூசுவதாக ஒரு காட்சி வருகின்றது. இது இந்து மத நம்பிக்கையின் அடிப்படையில் இந்திய பண்பாட்டில் காணப்படுகின்றது.

இதேபோல் இலங்கையின் தென் பகுதியிலும் ஓர் இடம் காணப்படுகின்றது. கொழும்பு-காலி வீதியில் (கொழும்பில் இருந்து சுமார் 96 கிலோ மீற்றர் தூரம்) ஹிக்கடுவ பிரதேசத்தில் உள்ள சீனிகம என்ற இடத்தில் உள்ளது "சீனிகம தேவாலய" என்ற ஆலயம்.

தற்போது தெற்கின் சிங்கள மக்களுக்குரிய கலாசார பாரம்பரிய விழுமியங்களை வெளிப்படுத்தும் மையமாகத் திகழும் சீனிகம தேவாலயத்தில், தெற்கிற்குப் பயணிக்கும் அநேக வாகனங்கள் நிறுத்தி வழிபட்ட பின்னரே தமது பயணங்களைத் தொடர்வது வழக்கமாகக் காணப்பட்டு வருகின்றது.

ஆலயத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளில் உள்ள சரித்திரக் குறிப்புகளின் படி சுமார் 1370 வருடங்கள் பழைமை கொண்டதாக கருத முடிகின்றது. இருந்த போதிலும் இந்த ஆலயத்திற்கும் இராமாயண காவியத்தில் வரும் இராம - இராவண யுத்த நிகழ்வுக்கும் தொடர்பு உள்ளதாகச் சந்தேகிக்கப்டுகின்றது.கடற்கரையை அண்மித்து பிரதான வழிபாட்டு ஆலயம் உள்ளது. கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் கடலின் நிடுவில் சிறிய கற்பாறை உண்டு. இது சுமார் 225 சதுர அடிகள் அளவுள்ளதாக காணப்படுகின்றது. இங்கு நான்கு தென்னை மரங்களும் சிறிய தேவாலயம் ஒன்றும் சிறிய கிணறு ஒன்றும் காணப்படுகின்றது. இந்தக் கிணற்று நீர் முன்னரெல்லாம் நன்நீராகக் காணப்பட்டதாகவும் சமீப காலமாகவே அது சிறிது உவர் நீராக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி பேரழிவின் போது, கற்பாறையின் மீதுள்ள இந்த ஆலயத்திற்கோ அல்லது கரையிலுள்ள ஆலயத்திற்கோ சிறிதளவு கூட பாதிப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பதற்கான காரணம் தெய்வ சக்தியே தவிர வேறொன்றும் இல்லை என்றே அயலிலுள்ள ஊர் மக்கள் நம்புகின்றார்கள்.

கி. மு. 664 - 573ஆம் காலப்பகுதியில் வாழ்ந்த மன்னனாகிய தப்புலா என்பவனே இந்த ஆலயத்தை முதன்முதலாக நிர்மாணம் செய்ததாகவும் அதன் பின்னர் மன்னன் தப்புலசேனன் ஆட்சி செலுத்தியதாகவும் அகழ்வாராய்ச்சி நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராம - இராவண யுத்தத்திற்கு ஈடு, இராவண - இராம யுத்தம் தான் என்று கூறுவார்கள். அவ்வளவு கடுமையாக நடைபெற்ற யுத்தம். இந்த யுத்தம் ஆரம்பித்த இடம் சீனிகம எனக் கருதப்படுகின்றது. இதற்கான சான்றுகள் எதுவும் இல்லை என்றாலும் காலம்காலமாக ஊர் மக்களால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தில் இலங்கை - 13



நம்பப்பட்டு வருகின்றது. சுக்ரீவன் அரசனுடைய வானரப் படைகளுக்கும் இராவணனுடைய படைகளுக்கும் இடையில் அதி உச்சக் கட்ட யுத்தம் இந்த இடத்தில் தான் இடம்பெற்றது.

கடல்வழியாக முன்னேற முயன்ற சுக்ரீவன் படையணிகளை கடற்கரையோரம் மற்றும் சுற்றுப் புறங்களிலிருந்து இலங்கை வீரர்கள் தாக்கினார்கள். சுக்ரீவனுடைய வானரப் படைகள் வழியெடுத்துக் கொடுக்கவே தொடர்ந்து இராம படையணிகள் நாட்டுக்குள் பிரவேசித்தன. இதையடுத்து இராவணன் முதல் நாள் போரில் இறுதியில் பலவான்களை அனுப்பிப் பலமாக எதிர்த்துப் போரிட்டான். தூமராக்ஷன் என்கிற பலவான் பெரும் படையுடன் வந்தபோது, நிலையெடுத்திருந்த அனுமானும் அவருடன் சேர்ந்த வீரர்களும் தூமராக்ஷனை பின்வாங்கச் செய்தார்கள்.

இராம படையணிக்கும் இராவண படையணிக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தை நினைவு கூறும் வகையில் வருடாந்தம் ஆகஸ்ட் மாதம் 26ஆம் திகதி முதல் செப்ரெம்பர் இரண்டாம் திகதி வரை நடைபெறும் பெரகராவின் போது இப்போர் நிகழ்ச்சி நிகழ்த்திக் காட்டப்படும்.

அத்துடன் இராவணன் மகன் இந்திரஜித் யாகம் நடத்திய இடம் இதுவென்றும் அறியப்படுகின்றது. இந்த யாகம் 'நிகும்பலா யாகம்' எனப்படுகிறது. இந்த யாகத்தில் மிளகாயை கூடை கூடையாக கொட்டுவார்கள்.

விரோதிகளின் தொல்லையும், செய்வினை, ஜாதக தோஷங்கள் விலகுவதுடன் வழக்குகளிலும் நியாயம், வெற்றி கிடைப்பதற்காக இந்த யாகம் செய்யப்படுகின்றது.

கடலின் நடுவில் பாறையின் மேலுள்ள ஆலயத்தில் தான் தமது எதிரிக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதற்காக மிளகாய் அரைத்தல் நேர்த்திக் கடன் செய்யப்படுகின்றது. இங்குள்ள அம்மியில் மிளகாயை வைத்து எதிரியை நினைத்துக் கொண்டே அரைத்தால் எதிரிக்கு தண்டனை கிடைக்கும் என்பது மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. தொடர்ந்து மூன்று வாரங்கள் மிளகாய் அரைக்க வேண்டும் என்பதும் நியதி.

இன்னொரு தகவலின்படி இந்த தேவாலயத்தில் உள்ள டிலியன் என்ற பெண் தெய்வம் இந்தியாவிலிருந்து கடலில் படகில் கரையை நோக்கி நடுநிசிப் பொழுதில் பேரொளியுடன் வந்து கொண்டிருந்ததாகவும் கண்ணைப் பறிக்கும் நெருப்பு கோளமாக அது தென்பட்டதாகவும் பேரிரச்சலுடன் அந்த சக்தி வரும் போது கரையிலுள்ள மரங்கள் புயல் வந்தது போல் ஆடியதாகவும் இந்த சக்தி கரையை அண்மிக்கும் போது அங்கு காணப்பட்ட பாறையின் அருகில் மறைந்து விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று கூறப்படுகின்றது. இருந்த போதிலும் இந்த நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் கப்பல் வடிவிலான சின்னம் ஒன்று பாறையில் பொழியப்பட்டு காணப்படுகின்றது.

- மிருணாளினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1,000,000/- ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு எவ்வளவு செலுத்த நீங்கள் விரும்புகிறீர்கள்?

- ☑ ஆண்டிற்கு ரூ.2000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.6/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.3000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.9/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.6000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.17/- ஐ விட குறைவு)

எமது **Pure Life Policy** மூலம்
**உங்களால் முடியும்**



நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய தருணம் இதுவே

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.

Call/Text: 0773 675 482
உடனடி அழைப்பு: 0112 552 277
தொலைபேசி: 0112 553 596 – 8
தொலைநகல்: 0112 590 495
இணையத்தளம்: www.liclanka.com

www.proactivation.lk

உங்களுக்கு மிகவும் வசதியான விலையில் உங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நைன் வெல்ஸ்
கருக்கட்டல்
வளநிலையம்

கர்ப்பகாலத்திலும் பிரசவத்திற்கு பின்னரும் தாயின் ஆரோக்கியத்தை பேணுவதிலும் கருக்கட்டலுக்கான சாத்தியக் கூறுகளையும் (Sub Fertility) அக்கருக்கட்டலுக்கான(IVF) சாத்தியக் கூறுகளையும் வழங்குவதன் மூலமும் தொடர்ச்சியாக இனப்பெருக்க காலத்தின் பின்னரும் எமது தொழில்நுட்பத்திறன்களி-னூடாக எல்லா வயதுடைய பெண்மணி-களையும் பராமரிக்க நைன் வெல்ஸ் ஆகிய நாங்கள் பொறுப்பாகவுள்ளோம்.



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
4 520 999
நைன் வெல்ஸ் கெயார் தாய் சேய் வைத்தியசாலை
55/1, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிடிய, கொழும்பு 05.
WWW.NineWellsCare.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.